REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

2024 மே 23 வியாழக்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

92 1932–2024 ANNIVERSARY

வரு. 92 இல. 122 | Thursday 23, May, 2024 | 12பக்கங்கள் | 50/-


## நயினை நாகபூசணி அம்மன் திருவிழா ஜூன் 07இல் ஆரம்பம்



யாழ். நயினாதீவு அருள்மிகு நாகபூசணி அம்மன் ஆலய மகோற்சவம் எதிர்வரும் ஜூன் மாதம் 07 இல், ஆரம்பமாகிறது. இம் மகோற்சவம் தொடர்ந்து 22ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

04


## ஈரான் ஜனாதிபதியின் மறைவுக்கு ஜனாதிபதி அனுதாபம் தெரிவிப்பு



கொழும்பிலுள்ள ஈரான் தூதரகத்துக்கு நேற்று (22) காலை சென்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசியின் திடீர் மரணத்துக்கு தனது அனுதாபத்தை தெரிவித்தார். தூதரகத்துக்குச் சென்ற ஜனாதிபதியை, இலங்கைக்கான ஈரான் தூதுவர்

04

## கண்ணியமிக்க மானிடனை வெசாக் பண்டிகை உருவாக்கும்



வெசாக் தினம் என்பது கௌதம புத்தரின் பிறப்பு, ஞானம் பெறல் மற்றும் பரிநிர்வாணத்தை நினைவுகூரும் உலக பௌத்தர்களின் புனிதமான நாளாகும்.

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள பௌத்தர்கள் விளக்குகளை ஒளிரவிட்டு, வழிபாடுகளுக்கு முன்னுரிமை அளித்து, மிகுந்த பக்தியுடன் இதனைக் கொண்டாடுகின்றனர். கடந்த காலங்களில் இலங்கை மிகவும் கடினமான காலகட்டங்களைக்

04

## நிலையில்லா வாழ்க்கையை வெளிப்படுத்தும் யதார்த்த நாள்



புத்தபெருமானின் பிறப்பு, ஞானம் பெறுதல் மற்றும் பரிநிர்வாணமடைதல் ஆகிய நிகழ்வுகளை நினைவுகூரும் வெசாக் நோன்மதி தினம், பௌத்தர்களின் மிகவும் புனிதமான நாளாகும். பன்னெடுங்காலமாக இலங்கையர்களான நாம், அதனை மிகுந்த பக்தி சிரத்தையுடன் கொண்டாடி வருகிறோம்.

இயற்கை அனர்த்தங்களாலும் பொருளாதார நெருக்கடிகளாலும் முடங்கியிருந்த பல

04

## வெசாக் பண்டிகைக்கு உரம்சேர்க்க ஓட்டோக்களில் பௌத்த கொடிகள்



வெசாக் பண்டிகையை முன்னிட்டு ஆயிரம் முச்சக்கரவண்டிகளில் பௌத்த கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன.

சங்கைக்குரிய எல்லே குணவங்ச தேரரின் எண்ணக் கருவுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட இத்தீர்மானத்துக்கு இணங்க ஆயிரம் முச்சக்கர வண்டிகளில் பௌத்த கொடிகளை காட்சிப்படுத்தும் நிகழ்வு நேற்று (22) கொழும்பு பௌத்தாலோக மாவத்தையில் பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

## சர்வதேசத்தின் ஒத்துழைப்பின்றி நாட்டை கட்டியெழுப்ப முடியாது

**லோரன்ஸ் செல்வநாயகம்**



சர்வதேசத்தின் ஒத்துழைப்பின்றி நாட்டை ஒரு போதும் முன்னேற்ற முடியாதென, ஊடகத்துறை மற்றும் போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாட்டின் அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்து செல்வதற்கு சர்வதேச ரீதியில் கடனுதவிகளை பெற்றுக் கொள்ள நேரிடும் என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கம் பயணிக்கும்

04

# பொருளாதார ரீதியில் நாடு முன்னேற்றம் கண்டு வருகிறது

## பொருளாதாரத்தை வலுப்படுத்துவதே எனது முதல் பணி

**முன்னாள் படைவீரர் சங்கத்தின் தலைமையக வளாகத் திறப்பு நிகழ்வில் ஜனாதிபதி தெரிவிப்பு**

**வங்குரோத்து நிலையிலிருந்து நாட்டை முழுமையாக விடுவிக்க கடன் வழங்கிய நாடுகளுடன் தொடர்ந்தும் பேச்சு**

நாட்டைப் பொறுப்பேற்ற பின்னர் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதே தனது முதல் பணியாக இருந்ததென, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

எதிர்வரும் நான்கைந்து வருடங்களில் நாட்டின் பொருளாதாரத்துக்கு எடுக்கப்பட வேண்டிய தீர்மானங்களை விரைவாக எடுக்க வேண்டியிருந்ததாகவும் ஜனாதிபதி தெரிவித்தார். பத்தரமுல்ல அக்குரேகொட, பாதுகாப்பு அமைச்சு வீதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள முன்னாள் படைவீரர்கள் சங்கத்தின் தலைமையக வளாகத்தை திறந்து வைக்கும் நிகழ்வில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார். இங்கு உரையாற்றிய ஜனாதிபதி:

நாடு தற்போது பொருளாதார ரீதியில் முன்னேற்றம் கண்டு வருகிறது. வங்குரோத்து நிலையிலிருந்து

04



## ஈரான் ஜனாதிபதியின் திடீர் மறைவுக்கு பாராளுமன்றில் இரங்கல்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



சில தினங்களுக்கு முன்னர் ஹெலிகொப்டர் விபத்தில் உயிரிழந்த ஈரான் ஜனாதிபதி மொஹமட் இப்ராஹிம் ரைசியின் திடீர் மரணத்திற்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில், பாராளுமன்றத்தில் நேற்று ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

04

## ஒற்றையாட்சி கட்டமைப்புக்குள் நின்றவாறே அதற்கு எதிர்ப்பு

**தமிழ் மக்களை ஏமாற்றும் செயலென டக்ளஸ் சாடல்**



ஒற்றையாட்சி கட்டமைப்புக்குள் நின்றுகொண்டு ஒற்றையாட்சி வேண்டாமென்று கூறுவது சுத்த ஏமாற்றுத்தனமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ் மக்கள் தோற்கடிக்கப்பட்ட சமூகமல்ல தமிழ் மக்களின் பெயரால் மேற்கொள்ளப்பட்ட தவறான வழிமுறைகள் தான் தோற்கடிக்கப்பட்டுள்ளதென்றும் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேலும் தெரிவித்துள்ளார்.

ஈ.பி.டி.பியின் நடைமுறைச் சாத்தியமான வழிமுறைகளே தற்போது அனைத்து தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது

04

**பெருந்தோட்டத் தொழிலாளர்களின்**

## குறைந்தபட்ச நாளாந்த சம்பளம் 1,700 ரூபாவாக அதிகரிப்பு உறுதி

**உறுதிப்படுத்தும் விசேட வர்த்தமானி வெளியீடு**



பெருந் தோட்டத் தொழிலாளர்களின் குறைந்தபட்ச நாளாந்த சம்பளம் 1,700 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதை உறுதிப்படுத்தும் விசேட வர்த்தமானி அறிவித்தல் நேற்று முன்தினம் (21) இரவு வெளியிடப்பட்டுள்ளதாகதொழில் மைச்சுதெரிவித்துள்ளது.

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சின் செயலாளரின்

04

## நிதி மோசடி குற்றச்சாட்டில் Aura Lanka குழும தலைவர் கைது

**மே 27 வரை விளக்கமறியல்**



நிதி மோச டி குற்றச்சாட்டின் பேரில் Aura Lanka குழும நிறுவனங்க ளின் தலைவர் விரஞ்சித் தம்புகல Viranjith Thambugala பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் நேற்று (22) கொழும்பு நீதவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டு, மே 27 வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். தம்புகலவின்

04

**வெசாக் பண்டிகை தினங்கள்**

## பௌத்த கொடி வர்ணங்களில் தாமரை கோபுரம் ஒளிரும்



வெசாக் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு தாமரைக் கோபுரம் பௌத்த கொடியிலுள்ள வர்ணங்களில், ஒளிருமென தாமரை கோபுர நிர்வாகம் தெரிவித்துள்ளது.

அதன்படி, இன்று வியாழக்கிழமை (23) மற்றும் நாளை வெள்ளிக்கிழமை (24) தாமரைக் கோபுரம் இந்த நிறங்களில் ஒளிரும்.

04

## வெசாக் பண்டிகை: 278 கைதிகளுக்கு பொது மன்னிப்பு




வெசாக் பண்டிகையை முன்னிட்டு விசேட அரச மன்னிப்பின் கீழ் 278 கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலை ஊடகப் பேச்சாளரும் சிறைச்சாலை ஆணையாளருமான காமினி பி. திஸாநாயக்க இதனைத் தெரிவித்தார்.

04

## வெசாக்: பொருட்களின் விலைகள் குறைப்பு


வெசாக் பண்டிகையை முன்னிட்டு அத்தியாவசிய உணவுப் பொருட்கள் சிலவற்றின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளதாக லங்கா சதொச நிறுவனம் தெரிவித்துள்ளது.

நேற்று (22) புதன்கிழமை முதல் அமுலுக்கு வரும் வகையில், இந்த விலைக் குறைப்பு செய்யப்பட்டுள்ளதாகவும் லங்கா சதொச அறிவித்துள்ளது.

04

## போலிக்குற்றம் சுமத்திய கர்ப்பிணித் தாய்மார்கள் மன்னிப்பு கோருகின்றனர்

**டொக்டர் ஷாபி ஷிஹாப்தீன் விளக்கம்**




தமக்கு எதிராக குற்றச்சாட்டை முன்வைத்த கர்ப்பிணித் தாய்மார் தற்போது தம்மிடம் மன்னிப்பு கோரி வருவதாக, டொக்டர் ஷாபி ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் தெரிவித்துள்ளதாவது: சிசேரியன் அறுவை

04

## தரம் 05 புலமைப்பரிசில் 2024 செப்டெம்பர் 15ல் நடத்த முடிவு



தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை (2024) எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 15 இல், ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளதாக பரீட்சை திணைக்களம்நேற்று அறிவித்துள்ளது.

இதற்கான விண்ணப்பப்படிவங்கள் எதிர்வரும் 27 லிருந்து ஜூன் மாதம் 14 வரை நிகழ்நிலை (Online) முறைமையில் ஏற்றுக்கொள்ளப்படும். ஜூன் மாதம் (14) நள்ளிரவு 12.00 மணிக்குப் பின்னர் நிகழ்நிலை முறைமை மூடப்படும். எக்காரணத்திற்காகவேனும் விண்ணப்பப் படிவங்களை

04

## 20 கோடி ரூபா பெறுமதியான கொக்கெய்னுடன் பெண் கைது



**இருபது கோடி ரூபா பெறுமதியான கொக்கெய்ன் போதைப் பொருளுடன், வெளி நாட்டு பெண்ணொருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார். 47 வயதான**

04

## மோட்டார் சைக்கிள்களை திருடி பாதாளக் குழுவுக்கு விநியோகம்

**11 சைக்கிள்களுடன் இரு இளைஞர் கைது**



மோட்டார் சைக்கிள்களை திருடி, பாதாள உலகக் குழு உறுப்பினர்களுக்கு விற்பனை செய்த இளைஞர் இருவரை, மினுவாங்கொடை பொலிஸார் (14) கைது செய்துள்ளனர். அவர்கள் இருவரும் தடுப்பு காவலில் வைக்கப்பட்டு விசாரணை

04

# நகர்வலம்



# ஜனாதிபதி தேர்தலே நடைபெறும்; பொதுத் தேர்தலென போலிப் பிரசாரம்

## ஜனாதிபதியின் தொழிற் சங்கங்களின் பணிப்பாளர் சமன் ரத்னப்பிரிய தெரிவிப்பு



பொதுத் தேர்தலே முதலில் இடம் பெறும் என சிலர் தெரிவித்தாலும், ஜனாதிபதித் தேர்தலுக்கே அரசாங்கம் தயாராகி வருவதாக ஜனாதிபதியின் தொழிற் சங்கங்களின் பணிப்பாளர் சமன் ரத்னப்பிரிய தெரிவித்தார்.

சமன்ரத்ன பிரிய இது பற்றி மேலும் தெரிவித்ததாவது: பாராளுமன்றம் கலைக்கப்படுமென சிலர் சுயநலத் துக்காக பேசுகின்றனர். ஜனாதிபதி தேர்தலுக்கே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தயாராகி வருகிறார்.

நாட்டில் முதலில் பாராளுமன்ற தேர்தலே இடம்பெறும் என ஒருசிலர் தெரிவித்து வருகின்றனர். குறிப்பாக ஜூன் மாதம் நடுப்பகுதியில் பாராளு மன்றம் கலைக்கப்படும் என உதயங்க வீரதுங்க தெரிவிக்கிறார். பாராளு மன்ற தேர்தலே முதலில் இடம்பெறும் என்பதை உறுதியாக தெரிவிப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித் திருந்தார்.

அதேநேரம் அடுத்துவ ரும் ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிட மாட்டா ரென, சிலர் பிரசாரம் செய்து வருகின் றனர். இவ்வாறு தங்களின் அரசியல் நிகழ்ச்சிட்டத்தின் அடிப்படையில் சிலர் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர். ஆனால், அரசியல் அமைப்பின் பிர காரம் செப்டம்பர் 18ஆம் திகதிக்கும் ஒக்டோபர் 16ஆம் திகதிக்கும் முன்னர் ஜனாதிபதி தேர்தலே நடத் தப்பட வேண்டும்.

அதேநேரம் பாராளுமன் றத்தை கலைத்து பொதுத் தேர்தலுக்கு செல்வதற் கான அதிகாரம் ஜனாதிபதிக்கு இருக் கிறது.

ஆனால் நாடும் அரசாங்கமும் ஜனா திபதி தேர்தலுக்கே தயாராக வருகின் றன. அரசியலமைப்பின் பிரகாரம் இந்த வருடம் ஜனாதிபதி தேர்தல் இடம்பெறும் என ஜனாதிபதி பகிரங் கமாக தெரிவித்திருந்தார்.

அதேபோன்று ஐக்கிய தேசிய கட்சியின் கட்சி சம்மேளனத்தின் போதும் இதனை ஜனாதிபதி தெரி வித்திருந்தார். ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என்றும் சிலர் தெரி வித்து வருகின்றனர்.

வீழ்ச்சியடைந்திருந்த நாட்டை பொறுப்பேற்க யாரும் முன்வராத நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கி ரமசிங்கவே முன்வந்து, பாரிய சிரமத் துக்கு மத்தியில் நாட்டின் பொருளாதா ரத்தை கட்டியெழுப்ப நடவடிக்கை எடுத்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

# IIADS இன் பொதுச் செயலாளராக கிர்பி டி லானெரோல் நியமனம்



இந்திய தேசிய அப் போஸ்தலிக்க மறை மாவட்ட (INA) நிர்வா கத்தின் கீழுள்ள சர்வ தேச சுதந்திர அப்போஸ் தலிக்க மறை மாவட்ட ஆயர் (IIADS) கிர்பி டி லானெரோல் (Kirby de Lanerolle) அதன் பொதுச் செயலாளராக பதவி உயர்வு பெற்றுள் ளார்.

இதன் மூலம் அமெரிக்கா, மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் தெற் காசியாவிலுள்ள சுமார் 11,000 தேவாலயங்களுக்கான ஆன்மிக வழிநடத்தல்களை அவரிடம் ஒப்ப டைக்கப்படுவதாக அமைந்துள்ளது.

கடந்த 2007ஆம் ஆண்டு முதல் இலங்கையில் ஆயர் கிர்பி டி லானெரோல் அவரது மனைவி ஃபியோனாவுடன் (Fiona) இணைந்து ஆன்மிக பணியை முன்னெடுத்து வருகின்றார். இந்நி லையில் கொழும் பில் WOWlife எனும் தேவாலயத்தை அமைத்து அதன் மூலமாக அவர்கள் இருவரும் ஆன்மிக பணியை முன்னெ டுத்து வருகின்றனர். அவர் இலங்கையில் இன, மத ரீதியாக சிறு பான்மை சமூகங்க ளுக்குள் மத நல்லிணக்கத்தை வழங் கியுள்ளதுடன், அவரது ஆன்மிக பணியை பாராட்டி தேசிய விருதுக ளுக்கும் அவரின் பெயர் பரிந்துரைக் கப்பட்டுள்ளது.

ஆயர் கிர்பியினுடைய தொலை நோக்கு பார்வை மற்றும் தலை மைத்துவ பண்புகளால் உலகளாவிய திருச்சபையின் பொதுச் செயலா ளராக இருந்து ஆன்மிக பணியை தொடர்ந்து முன்னெடுக்க வழிவகுக் குமென, INA மறை மாவட்டம் நம் பிக்கை வெளியிட்டுள்ளது.

மறைந்த ஈரான் ஜனாதிபதி

# இப்ராஹிம் ரைஸின் ஜனாஸா இன்று நல்லடக்கம்

**ஜனாதிபதியின் பிரதிநிதியாக அமைச்சர் அலிசப்ரி, மர்ஜான் பளீல் எம்.பி பங்கேற்பு**

(அஷ்ரப் ஏ சமத்)



மறைந்த ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைஸ் அவர்களின் ஜனாஸாவில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வின் பிரதிநிதியாக வெளிநாட்டு அமைச்சர் அலி சப்ரி மற்றும் பாரா ளுமன்ற உறுப்பினர் மா்ஜான் பளீல் நேற்று முன்தினம் (21) இரவு ஈரான் நோக்கி பயணமாகினர்.

காலஞ்சென்ற ஈரான் ஜனாதி பதியின் ஜனாஸா நல்லடக்கம் அவரது சொந்த ஊரான மஸ்காட் இமாம் ரோசா பள்ளிவாசலில் இன்று வியாழக்கிழமை (23) இடம்பெற வுள்ளது. நேற்றைய தினம் (22) செவ் வாய்க்கிழமை அவர் கல்வி கற்ற தப்ரிஸ் நிலையத்தில் ஜனாஸாத் தொழுகை நடத்தப்பட்டது. அதன் பின்னர் தெஹ்ரானுக்கு கொண்டு வரப்பட்டு தற்போதைய ஈரானின் புரட்சித் தலைவர் ஆயத்துல்லா அலி கொமைனியின் தலைமையிலும் ஜனாஸாத் தொழுகை தொழுவிக்கப் பட்டது. இதில் உள்ளூர் வெளிநாட்டு பிரதிநிதிகள் துருக்கி ஜனாதிபதி உட்பட பல இலட்சக்கான மக்கள் கலந்து கொண்டமை நேரடியாக ஒளி பரப்பப்பட்டது.

2021 ஆகஸ்ட் ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைஸ் புதிய ஜனாதிப தியாக பதவி ஏற்கும் வைபவத்தில் இலங்கை சார்பாக இலங்கை அரசாங் கத்தின் செய்தியுடன் இலங்கைப் பிர திநிதியாக பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

இதுதொடர்பில் கருத்து தெரிவித்த மர்ஜான் பளீல் எம்.பி, ஜனாதிபதி இப்ராஹிம் ரைஸின் இழப்பு இஸ் லாமிய உலகுக்கு பேரிழப்பென்றும் அவர் தெரிவித்தார்.

கொள்ளுப்பிட்டி பள்ளிவாசலில்

# மறைந்த ஈரான் ஜனாதிபதிக்கு துஆப்பிரார்த்தனை நிகழ்வு



ருஸைக் பாரூக்

மறைந்த ஈரான் தலைவர் டாக்டர் இப்ராஹிம் ரைஸ் மற்றும் ஏனை யோரின் மறைவு குறித்து வெளியுறவு அமைச்சகம் மற்றும் ஈரான் தூதரகம் இணைந்து இரங்கல் நிகழ்ச்சியை நேற்று புதன்கிழமை மாலை கொள் ளுப்பிட்டி ஜும்ஆப் பள்ளிவாசலில் நடாத்தியது.

பள்ளிவாசல் சார்பாக மொஹம் மத் உவைஸ் மொஹம்மத் வரவேற் புரை ஆற்றினார். வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூ ரிய மற்றும் ஈரான் இஸ்லாமிய குடி யரசின் தூதுவர் கலாநிதி அலிரேசா டெல்கோஷ் ஆகியோர் கூட்டத்தில் உரையாற்றினார்.

பள்ளிவாசல் பிரதம இமாம் அஷ் ஷேக் ஹாபில் எ.பி.எம். ரிஸ்வான் துஆ பிரார்த்தனை செய்தார். பாரா ளுமன்ற உறுப்பினர்கள் ஏ. எச். எம் பௌஸி, முஜீபுர் ரஹ்மான், மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அஸாத் சாலி, வெளிவிவகார அமைச்சின் அதி காரிகள், முஸ்லிம் அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் ஊடகவியலாளர் கள் பலரும் கலந்துகொண்டனர்.

தர்கா நகர் ஸாஹிரா கல்லூரி

# 1982 சா/த மாணவர்களின் ஒன்றுகூடல் நிகழ்வு இன்று

(பேருவளை விசேட நிருபர்)

தர்கா நகர் ஸாஹிராக் கல்லூரி 1982 கல்விப் பொதுத்தராதர சாதாரண தர மாணவர்களின் ஒன்று கூடல் இன்று 23ஆம் திகதி வியாழக்கி ழமை மு.ப.9.00 மணிக்கு தர்கா நகர் மீரிப்பன்னை வீதியில் உள்ள நதா வர வேற்பு மண்டபத்தில் நடைபெறும்.

1982 கா.பொ.த.சாதாரண தர மாணவர் அமைப்பின் தலைவரும் தர்கா நகர் இஸ்லாமிய நலன்புரிச் சங்க தலைவருமான ஏ.பி.எம். ஸுஹைர் ஹாஜியார் தலைமையில் நடைபெறும் இந்த ஒன்று கூடலில் எதிர்காலத்தில் மேற்கொள்ள திட்ட மிடப்பட்டுள்ள வேலைத் திட்டங் கள் குறித்து கலந்துரையாடவுள்ள தாக செயலாளர் ஏ.ஐ.எம். பஹ்மி தெரிவித்தார். இந்தக் கூட்டத்தில் 1982 கா.பொ.த.சாதாரண தர மாண வர்கள் தவறாது சமுகமளிக்குமாறும் செயலாளர் கேட்டுள்ளார்.

தர்கா நகர் ஸாஹிராக் கல்லூரி யின் எதிர்கால முன்னேற்றத்திற்கு எவ்வாறு பங்களிப்பு செய்வது குறித் தும் இங்கு ஆராயப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# மரம் வீழ்ந்ததில் பெண்கள் இருவர் உயிரிழப்பு

கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்

சீரற்ற காலநிலை காரணமாக புத் தளம் மாரவில மற்றும் மாதம்பை பகுதிகளில் வீதியோரத்தில் இருந்த இரண்டு பெரிய மரங்கள் வீழ்ந்ததில் பெண்கள் இருவர் உயிரிழந்துள்ளது டன், ஆண் ஒருவர் காயமடைந்துள் ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மாராவில பிலாகமுல்ல பிர தேசத்தில் வீதியில் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்றின் மீது பாரிய மரமொன்று வீழ்ந்ததில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண்ணொருவர் உயிரிழந்துள்ளது டன், மேலும் ஒருவர் காயமடைந் துள்ளார் என மாரவில பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தளம், நாத்தாண்டிய உடுவல வீதியின் முட்டிபெதிவில பகுதி யைச் சேர்ந்த யடவரகே தொன் ஹன்சி இஷாரா (வயது 36) என்ப வரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

50,000 குடும்பங்களின் குடிநீர் தேவையை பூர்த்திசெய்யும்

# அநுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் திட்டத்தின் 2ஆவது கட்ட வேலைத்திட்டத்துக்கு ஜப்பான் உதவி

அநுராதபுரம் மேற்கு தின கரன் நிருபர்




அநுராதபுரம் மாவட் டத்தில் பதவிய, ஹொர வப்பொத்தானை, கஹட் டகஸ்திகிலிய மற்றும் கெப்பித்திகொள்ளாவ ஆகிய பிரதேச செயலக பகுதிக்குட்பட்ட 119 கிராம அலுவலகர் பகு தியில் உள்ள 50,000 குடும்பங்க ளின் குடிநீர் தேவையினைப்பூர்த்தி செய்யும் அநுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் செயற்திட்டத்தின் 2வது கட்டத்தினை ஆரம் பிப்பது தொடர்பில் இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க ஜப்பான் சர்வதேச ஒத்து ழைப்பு நிறுவனத்துடன் மேற்கொண்ட கலந்து ரையாடல் வெற்றியளித் துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தற்போது இடைநடுவில் நிறுத் தப்பட்டுள்ள அநுராதபுரம் வடக்கு நீர் விநியோகத்திட்ட 2ஆவது கட்ட கட்டுமானத்தின் நிதி வசதிகளை ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் (JICA) வழங்க தீர்மானித் துள்ளது.

மிக விரைவில் அதனுடன் சம்பந் தப்பட்ட வேலைத்திட்டத்தை ஆரம் பிப்பதற்கு நீர் வழங்கல் மற்றும் வடிகால் சபைக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரி வித்தார்.

# தொட்டவத்தை ரௌழதுல் அத்கியாவில் இன்று மனாகிப் மஜ்லிஸ் ஆரம்பம்

(பாணந்துறை மத்திய குறுப் நிருபர்)



பாணந்துறை தொட்டவத்தை ரௌழதுல் அத்கிய்யா பெரிய பள் ளிவாசலில் 155ஆவது வருட ஷாது லிய்யா மனாகிப் மஜ்லிஸின் ஆரம்ப நிகழ்வு இன்று (23) வியாழக்கிழமை இஷாத் தொழுகையின் பின்னர் கலீ பதுஷ் ஷாதுலி மௌலவி எம்.ரீ.எம். இல்யாஸ் தலைமையில் நடைபெற வுள்ளது.

தொட்டவத்தை பள்ளிவாசல்கள் பரிபாலன சங்கத்தின் ஏற்பாட்டில் இந்த மனாகிப் மஜ்லிஸ் இடம்பெறு வதோடு தொடர்ந்து ஒன்பது தினங் கள் மனாகிப் ஓதல் இடம்பெறும். உலமாக்களினால் விஷேட பயான் உரைகளும் இடம்பெறவுள்ளன.

பள்ளிவாசல்கள் பரிபாலன சபைத் தலைவர் எம்.என்.எம். தாஹிர்பாஸி மற்றும் தர்மகர்த்தா எம்.ஏ.எம். ரிஸ்வான் ஹாஜியின் வழிகாட்ட லில் பரிபாலன சங்கத்தினால் இதற் கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட் டுள்ளதாக பள்ளிச்சங்க செயலாளர் சில்மி சஹீல் தெரிவித்தார்.

மேற்படி மனாகிப் ஓதல் மஜ்லி ஸில் ஒவ்வொரு தினமும் ஆத்மீக ஞானி இமாம் அபுல்ஹஸன் அலியுஷ் ஷாதுலி (ரலி) அவர்களின் வரலாறு உள்ளிட்ட முன்மாதிரி யான வாழ்க்கை வழிமுறை மற்றும் தரீக்காவின் மகிமை தொடர்பில் உலமாக்களினால் விஷேட சன் மார்க்க உபன்னியாசங்களும் இடம் பெறவுள்ளன.

# மின்சாரம் தாக்கி வர்த்தகர் உயிரிழப்பு

கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்

முந்தல் பரலங்கட்டுவ பிரதே சத்தில் உள்ள தனது கால்நடைப் பண்ணையில் மின்சார திருத்த வேலையில் ஈடுபட்டிருந்த வர்த்தக ரொருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந் துள்ளதாக முந்தல் பொலிஸார் தெரி விக்கின்றனர்.

கம்பஹா இம்புல்கொடையை வசிப்பிடமாகக் கொண்ட மானர பிடிகும்புரமுல்லகே சனத் குமார என்ற நபரே இவ்வாறு உயிரிழந் துள்ளார்.

கடந்த 20ஆம் திகதி மாலை குறித்த நபர் தான் சொந்தமாக நடத்தி வரும் கால்நடைப் பண்ணையின் கதவை சரி செய்துகொண்டிருந்தபோதே மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளதா கப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பாக முந்தல் பொலிஸார் மேலதிக விசா ரணைகளை மேற்கொண்டு வருகின் றனர்.

# 'தென்னம் படல் மறைப்பு' நபீலின் நூல் வெளியீடு

காலச்சுவடு வெளியீடான நபீல் எழுதிய 'தென்னம் படல் மறைப்பு' (அழியாத நினைவின் தடங்கள்) அனுபவப் பகிர்வு நூல் வெளியீட்டு நிகழ்வு எதிர்வரும், ஞாயிற்றுக்கி ழமை (26) காலை 09.00 மணிக்கு கல்முனை ஆஸாத் பிளாஸா மண்ட பத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில், முஸ்லிம் காங்கி ரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் உட்பட எழுத்தாளர்கள் உமாவரதராஜன், எச்.ஏ. அஸீஸ், அப்துல் றஸாக், மன்சூர் ஏ.காதிர், முபீஸால் அபூபக் கர், ரோஷன் அக்தர், ரக்ஷனா ஷரீ புத்தீன், ஆரிக்கா காரியப்பர், கதீர் என்போர் புத்தகம் குறித்த விமர்சன உரைகளை நிகழ்த்துவர்.

இந்த நூல் 'தினகரன் வாரமஞ்ச ரி'யில் ஒரு வருட காலமாக கவிஞர் நபீல் எழுதித் தொடராக வெளிவந்த "நினைவின் தாழ்வாரங்கள்" என்ற அவர் பால்ய கால அனுபவப் பகிர் வுகளின் தொகுப்பு என்பது குறிப்பி டத்தக்கது.

# மணல்தீவில் வெள்ள பாதிப்புக்குள்ளான இந்து மக்களுக்கும் உணவு விநியோகம்

**புத்தளம் ஜம்இய்யத்துல் உலமா கிளை முன்னெடுப்பு**

புத்தளம் தினகரன் நிருபர்



புத்தளத்தில் ஏற்பட்டுள்ள மழை வெள்ளம் காரணமாக மணல்தீவு சேகு வந்தீவில் வசிக்கும் சுமார் 75 இந்து மத குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதை சர்வமத குழு தலைவர் அப்துல்லாஹ் ஹஸ்ரத் அகில இலங்கை ஜம்மியத் துல் உலமாவின் புத்தளம் நகர கிளை யினருக்கு சுட்டிக்காட்டியதற்கு இனங்க நேற்றுமுன்தினம் (21) மணல்தீவு சேகுவந்தீவில் வசிக்கும் 75 இந்து மத சகோதரர்களுக்கு பகல் போசணம் வழங்கி வைக்கப்பட்டமை விசேட அம்ச மாகும்.

மேற்படி கிராமத்திற்கு வாகனம் செல்ல முடியாது பாதை முழுமையாக நீரில் மூழ்கியுள்ளமையினால் அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா புத் தளம் நகர கிளை உலமாக்கள் சுமார் 500 மீட்டர் தூரத்துக்கு வெள்ள நீருக்குள் நடந்து சென்று பகல் போச னத்தை வழங்கி வைத்தமை குறிப்பி டத்தக்கது.



கெப்பித்திகொல்லாவ கல்வி வலயத்திற்குட்பட்ட ஹொரவப்பொத்தான முக்கரவெவ தாஹிரா முஸ்லிம் வித்தியாலய மைதானத்தில் பார்வையாளர் அரங்கு அமைப்பதற் காக அநுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹுமான் அடிக்கல் நட்டி வைத்த போது பிடித்த படம். (படம்: அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)

# களுத்துறை மின்ஹதுல் ஹஸனியாவுக்கு புதிய மாணவர்கள் அனுமதி

களுத்துறை அல் மின்ஹதுல் ஹஸனிய்யா அரபுக் கல்லூரிக்கு நல்லொழுக்கமுள்ள, தேகாரோக்கி யமுடைய, அல்குர்ஆனை சரளமாக ஓதக் கூடிய, 2024 இல் ஷரீஆ பிரி விற்கு 8ம் தரத்திற்கும் ஹிப்ழ் பிரி விற்கு 6ம் தரத்திற்கும் தகுதியான, சன்மார்க்க கல்வியில் ஆர்வமுள்ள போன்ற தகைமைகளைக் கொண்ட புதிய மாணவர்கள் சேர்த்துக்கொள் ளப்படவுள்ளனர்.

எதிர் வரும் 2024 0601ஆம் திக திக்கு முன்னர் நேரடியாகவோ, தபால் மூலமோ விபரங்களை பதிவு செய்து கொள்ளவும். நேர்மு கப் பரீட்சை இன்ஷா அல்லாஹ் எதிர்வரும் ஜூன் மாதம் 02ஆம் திகதி (ஞாயிறு) காலை 11 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெ றும்.

தினகரன் விளம்பரம்
0112429367

விற்பனை பிரிவு
0112429444,
0112429378

ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2024 மே 23 வியாழக்கிழமை

தினகரன்
THINAKARAN
තිනකරන්

தொழுகை நேரம்

சுபஹ் - 04.33
லுஹர் - 12.08
அஸர் - 03.32
மஃரிப் - 06.21
இஷா - 07.36

இன்றைய சுபதினம்

குரோதி வருடம் வைகாசி 10

ராகுகாலம் : பகல் : 1.22 - 2.52வரை
சுபநேரம் : காலை : 7.22 - 8.52வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி



# வரிக்குறைப்பை அமுல்படுத்தினால் மீண்டும் வரிசை யுகம் உருவாகும்

## வரிக் கொள்கை மறுசீரமைக்கப்படமாட்டாது

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் அரசாங்கம் வரிக் குறைப்பை மேற்கொண்டால், 06 மாத காலத்துக்குள் மீண்டும் மக்கள் வரிசை யுகத்துக்கு செல்ல நேரிடுமென, நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அந்த வகையில் எக்காரணம் கொண்டும் தற்போதைய வரிக் கொள்கையை மறுசீரமைக்கப் போவதில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

2024 இல், வரி வருமானமாக 3,870 பில்லியன் ரூபாவையும், மொத்த வருமானமாக 4,127 பில்லியன் ரூபாவையும் திரட்டிக் கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய முதல் காலாண்டில் மாத்திரம் 1,040 பில்லியன் ரூபா வரி வருமானமும், 1,521 பில்லியன் ரூபா மொத்த வருமானமும் திரட்டிக் கொள்ளப்பட்டுள்ளன. எதிர்க்கட்சி குறிப்பிடுவது போன்று வரி குறைப்பு செய்தால், அரச வருமானத்தில் 25 சதவீதத்தை நேரடியாக இழக்க நேரிடும் என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சியினால் பொருளாதாரம், சட்டம் ஒழுங்கு மற்றும் பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாக கொண்டுவரப்பட்ட சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில், உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விவாதத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

விரைவில் ஜனாதிபதி தேர்தலுக்கான அறிவிப்பு விடுக்கப்படவுள்ளது. இந்நிலையில் ஒரு தரப்பினர் பொருளாதார பாதிப்பை ஆயுதமாக பயன்படுத்திக் கொள்ளவும், இன்னொரு தரப்பினர் தற்போதைய பொருளாதார முன்னெடுப்புகளை பலவீனப்படுத்தவும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர்.

தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள வரிகள் தமது ஆட்சி வரும்போது 24 சதவீதத்தால் குறைக்கப்படும் என, ஐக்கிய மக்கள் சக்தி கூறுகிறது. வரி குறைப்பினால் பொருளாதாரம் பாதிக்கப்பட்டது என்று குறிப்பிடும் இவர்கள், தமது ஆட்சியில் மீண்டும் வரிகளை குறைப்பதாக தெரிவிப்பது விந்தையாக உள்ளது.

அரசியல் வாக்குறுதிகளுக்கு அமைய வரி குறைப்பு செய்தால், ஆறு மாத காலத்துக்குள் மீண்டும் மக்கள் வரிசை யுகத்துக்கு செல்ல நேரிடும் என்பதை உறுதியாக கூற முடியும். அதனைக் கவனத்திற்கொண்டு தற்போதைய வரிக்கொள்கைகளில் திருத்தம் செய்யப் போவதில்லை. நாடு மீண்டும் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம் கொடுப்பதை தடுக்கும் வகையிலேயே நிதி முகாமைத்துவ சட்டமூலம் மற்றும் பொருளாதார நிலைமாற்றம் சட்டமூலம் என்பன பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. 2022 ஆம் ஆண்டு வரிசை யுகத்தை எதிர்பார்ப்பவர்களே, இந்த சட்டமூலங்களுக்கு எதிராக வாக்களிப்பார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கிராம சேவகர் சம்பள அதிகரிப்பு அமைச்சரவையில் அங்கீகாரம்

13 ஆயிரத்துக்கும் அதிகமான கிராம உத்தியோத்தர்களின் சம்பளம் மற்றும் கொடுப்பனவை அதிகரிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருப்பதாக உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த நேற்று (22) பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இதற்கமைவாக கிராம உத்தியோகத்தர் சேவையை ஸ்தாபிப்பதற்காக, சேவை தொடர்பிலான அரசியலமைப்பின் வரைபு , அரச சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சார்பில் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே, உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த பாராளுமன்றத்தில் இந்த விடயங்களை குறிப்பிட்டார்.

இது பாரிய வெற்றி என்று குறிப்பிட்ட அவர், இந்த புதிய நடைமுறைக்கு அமைவாக கிராம உத்தியோகத்தருக்கு ஜிஎன் என்ற புதிய சம்பளக் குறியீடு கிடைக்கவுள்ளது. மேலும் புதிய கிராம உத்தியோகத்தரின் அடிப்படை சம்பளம் ரூ. 28 ,940 முதல் ரூ. 30,140 ஆக அதிகரிக்கும் . கிராம சேவை தரம் 2 அதிகாரியின் அடிப்படை சம்பளம் ரூ.33 ,690 ஆகவும் , தரம் 3 அதிகாரியின் அடிப்படை

04

தினகரன்
THINAKARAN
තිනකරන්

# 92
வருடங்களுக்கு முன்
## தினகரன்
இன்று 23 மே 1932



## இலங்கை பொருள் ஆதார நிலைமை

மிஸ்டர் எம்.ஜே.கேரி அவர்களின் விரிவுரை

### "ஏற்றுமதியைக் கூட்டுக"

**"இலங்கையின் உயிர்நாடி தேயிலையே"**

மிஸ்டர் கேரி அவர்கள் சென்ற மூன்று வருடங்களிலும் ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்களின் பெறுமதியை ஒப்பிட்டுப் பார்த்த 1929ம் ஆண்டிலும் பார்க்க 1931ம் ஆண்டில் ஏற்றுமதியின் பெறுமதி 1895 இலட்ச ரூபாய் குறைந்திருக்கிறதென்றும், ஏற்றுமதிப்பொருள்களில் முக்கியமானவை தேயிலை, ரப்பர், தென்னைப் பொருள்களாகிய மூன்றே என்றும், அவற்றிலும் தேயிலையின் பெறுமதி ஏற்றுமதியின் மொத்தப் பெறுமதியின் அரைவாசிக்கு மேற்பட்டதென்றும், இலங்கையின் ஐஸ்வரியத்தை மீளப் பெறுவதற்கு ஏற்றுமதியைக் கூட்ட வேண்டும் என்றும், தேயிலையே இலங்கைக்கு உயிர் நிலையம் என்றும் வற்புறுத்தினார்.

**(அனுசரணை: லேக் ஹவுஸ் ஊடக நூலகம்)**

## தேசியப் பிரச்சினைக்கு தீர்வு காண பொருத்தமான திட்டங்கள் தேவை

**லோரன்ஸ் செல்வநாயகம்**



தேசிய பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு பொருத்தமான வேலைத்திட்டங்களை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும் என, தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

தேசிய பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு அரசாங்கம் எந்த நடவடிக்கையையும் முன்னெடுக்காதிருப்பதை சபையில் சுட்டிக்காட்டிய அவர், இறுதியில் அரசியல் தீர்வும் இல்லை, பொறுப்புக் கூறலும் இல்லை என்ற நிலைமையே காணப்படுவதாகவும் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்

04

## விலைமனு அழைத்தல்

### விவசாயத் திணைக்களம்

விவசாயத் திணைக்களத்தின் விதை மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி நிலையத்திற்கு உரித்தான கீழ்க் காணப்படும் அலகுகளிற்கு குறித்த கொள்வனவுகளிற்காக தேசிய விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| A | B | C | D | | | E |
|---|---|---|---|---|---|---|
| | | | வைப்புச் செய்யப்பட வேண்டிய விலைமனுப் பிணையம் மற்றும் செல்லுபடிக் காலம் | | | |
| தொடர் இல. | கருமங்களின் விபரம் | ஒப்பந்த இலக்கம் | காசாக எனின் | வங்கி வரைவு ஒன்றெனின் | பிணையம் செல்லுபடிக் காலம் | கேள்வி ஆவணக் கட்டணம் |
| 01 | விதை மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி நிலையத்திற்கு விதை விற்பனை மற்றும் தரவு அமைப்பை ஸ்தாபித்தல் | SPD/2/5/4/01 (2024) | 10,000.00 | 20,000.00 | 2024.08.30 | ரூ. 1000.00 |

ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் இதற்காகப் பெற்றுக் கொள்ளும் விலைமனுப் படிவங்களில் விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன் மீளளிக்கப்படாத மேற்படி E நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணத்தை இத்திணைக்களத்தின் சிறாப்பரிடம் செலுத்திப் பெற்றுக் கொள்ளும் பற்றுச்சீட்டை விதைகள் மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி மத்திய நிலையத்தின் நிர்வாக அலுவலகரிடம் சமர்ப்பித்து 2024.05.27 முதல் 2024.06.13 வரை வார வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை இதற்கான விலைமனுப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

இது பற்றி கேள்விகோரலுக்கு முன்னரான கலந்துரையாடல் 2024.06.05 மு.ப. 10.00 இற்கு விதை மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி நிலைய கூட்ட மண்டபத்தில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக சகல கேள்விதாரர்களின் பங்களிப்பு கட்டாயமாகும். கேள்வி கோரலுக்கு முன்னரான கலந்துரையாடலுக்கு சமுகமளிக்காத கேள்விதாரர்களின் விலைமனுப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

விலைமனு அறிவுறுத்தல்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்டு முத்திரையிடப்பட்ட அனைத்து விலைமனுக்களும் **'தலைவர், பிராந்தியப் பெறுகைக் குழு, விதைகள் மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி மத்திய நிலையம், விவசாயத் திணைக்களம், பேராதெனிய'** என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அல்லது மேற்படி முகவரியில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியிற் சேர்த்தல் வேண்டும்.

அனைத்து விலைமனுதாரர்களும் மேற்படி அட்டவணையில் D இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பிணைத் தொகையொன்றை வைப்புச் செய்தல் வேண்டுமென்பதுடன் வங்கி வரைவு ஒன்றாக பிணை வைப்புச் செய்வதாயின் அது இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட வங்கியொன்றிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளல் 2024.06.14 அன்று பி.ப. 2.00 இற்கு முடிவுறுவதுடன் உடனடியாக அவை திறக்கப்படும். அவ்வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் எழுத்துருவ அதிகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**விதைகள் மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி மத்திய நிலையம்,**
**விவசாயத் திணைக்களம், பேராதெனிய.**
2024.05.22
**081-2388106/122**

நாட்டை சூழ சீரற்ற காலநிலை

## கடற்பிரதேசம் கொந்தளிப்பு மீனவர்களுக்கு எச்சரிக்கை

மறு அறிவித்தல் வரை மீனவர்கள், கடற்படையினரை கடலுக்குச் செல்ல வேண்டாமென கடற்றொழில் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மன்னார் தொடக்கம் கொழும்பு, காலி ஊடாக ஹம்பாந்தோட்டை வரையான கடல் பிராந்தியங்களில், அடிக்கடி மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும். சில இடங்களில் பலத்த மழை பெய்யலாமென, எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

நாட்டை சூழ உள்ள ஏனைய கடல் பிராந்தியங்களின் பல இடங்களில், மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.


அத்துடன் இக் கடல் பிராந்தியங்களில் தென்மேற்குத் திசையிலிருந்து காற்று வீசுவதுடன் மன்னார் தொடக்கம் கொழும்பு, காலி, ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடல் பிராந்தியங்களில் மணிக்கு 40 50 கிலோமீற்றர் வேகத்தில்

04

## சபையில் கோரமின்மை விவாதம் இடை நிறுத்தம்

### பாராளுமன்றம் ஜூன் 04 இல் கூடும்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



சபை நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு போதுமான கூட்ட நடப்பெண் இல்லாததால், எதிர்க்கட்சியினரால் கொண்டு வரப்பட்ட சபை ஒத்திவைப்பு வேளை விவாதம் இடை நடுவில் நிறுத்தப்பட்டு சபை நடவடிக்கைகள் எதிர்வரும் ஜூன் 04 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டன.

பாராளுமன்றம் நேற்று புதன்கிழமை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது. இதன்போது அரச நிதி முகாமைத்துவம் மற்றும் பொருளாதார நிலைமாற்றம் தொடர்பான சட்டமூலங்களை ஆளும் தரப்பின் பிரதம கொறடாவான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க சபையில்

04

## பெரியவெங்காயம், உருளைக்கிழங்கு இறக்குமதிக்கு நிலையான வரி விதிப்பு


**லோரன்ஸ் செல்வநாயகம்**

பெரிய வெங்காயம்,உருளைக் கிழங்கு ஆகியவற்றுக்கு நிலையான வரி ஒன்றை விதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படமென விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அத்துடன் விவசாயிகளின் உற்பத்திச் செலவை கவனத்தில் கொண்டு இந்த வரியை விதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் சபையில் தெரிவித்தார்.

அதேவேளை, எந்த மரக்கறியும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படவில்லை என்பதை சபையில் சுட்டிக் காட்டிய அமைச்சர்,

04




தென் கொரிய ஊழல் எதிர்ப்பு மற்றும் சிவில் உரிமைகளுக்கான ஆணைக்குழுவின் உப தலைவரும் செயலாளர் நாயகமுமான சுங் சியுங்யுன் தலைமையிலான உயரதிகாரிகள் அடங்கிய தூதுக்குழுவினர்,அண்மையில் (21) சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை பாராளுமன்றத்தில் சந்தித்தனர். இச்சந்திப்பில் பாராளுமன்ற பதில் செயலாளர் நாயகம் சமிந்த குலரத்ன மற்றும் உதவிச் செயலாளர் நாயகம் ஹன்ஸ அபேரத்ன ஆகியோர் கலந்துகொண்டனர். அத்துடன், தென் கொரியாவின் ஊழல் எதிர்ப்பு மற்றும் சிவில் உரிமைகளுக்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் லீ பீம் சியோக், பிரதிப் பணிப்பாளர் மூன் ஜோங்பில், உதவிப் பணிப்பாளர் செல்வி லீ கா யோன், இலங்கையின் இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் மேலதிக பணிப்பாளர் நாயகம் திருமதி எம்.ஆர்.வை.கே. உடுவெல மற்றும் உதவிப் பணிப்பாளர் நாயகம் திருமதி டபிள்யு.எம்.டி.டீ. பண்டார ஆகியோரும் இதில் கலந்துகொண்டனர்.






# 'தென்னம் படல் மறைப்பு'; நபீலின் நூல் வெளியீடு



காலச்சுவடு வெளியீடான நபீல் எழுதிய 'தென்னம் படல் மறைப்பு' (அழியாத நினைவின் தடங்கள்) அனுபவப்பகிர்வு எனும் நூல் வெளியீட்டு நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (26) காலை 9.00 மணிக்கு கல்முனை ஆஸாத் பிளாஸா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் உட்பட எழுத்தாளர்களான உமாவரதராஜன், எச்.ஏ. அஸீஸ், அப்துல் றஸாக், மன்சூர் ஏ.காதிர், முபீஸால் அபூபக்கர், ரோஷன் அக்தர், ரக்ஷனா ஷரீபுத்தீன், ஆரிக்கா காரியப்பர், கதீர் ஆகியோர் நூல் தொடர்பாக விமர்சன உரை நிகழ்த்துவர்.

இந்நூல் தினகரன் வார மஞ்சரியில் ஒரு வருடகாலமாக கவிஞர் நபீல் எழுதி தொடராக வெளிவந்த 'நினைவின் தாழ்வாரங்கள்' என்ற அவர் பால்ய கால அனுபவப்பகிர்வுகளின் தொகுப்பு என்பது குறிப்பிடத்தக்கது.

## பெளத்த கொடி வர்ணங்களில்...

கொழும்பு தாமரை கோபுரத்தில் பிரமிக்க வைக்கும் காட்சிகளுடன் வெசாக் பண்டிகையை கொண்டாடுமாறு, நிர்வாகம் மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது. வெசாக் தினங்களில் பிக்சல் ப்ளூம் புத்தம் புதிய, ஊடாடும் டிஜிட்டல் கலை அனுபவத்தை அனுபவிக்கும் நேரத்தையும் தாமரை கோபுர நிர்வாகம் அறிவித்துள்ளது.

## மோட்டார் சைக்கிள்களை திருடி...

செய்யப்படுகின்றனர். அவர்களில் ஒருவர் 31 வயதான உடுகம்பொல, கெஹல்பத்தர ஜுட் எனப்படும் சுபசிங்க ஆராச்சிகே தரிந்து ஜுட் லக்மால் பெரேரா மற்றைய நபர் உடுகம்பொல, பதஹவத்தே சுத்தா அல்லது விக்கிரமஹெட்டி கோண்திலாகே ஹசித பிரசாத் குமார் என்பவரென அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்கள் மினுவாங்கொடை, தெவலபொல பிரதேசத்தில் மோட்டார் சைக்கிள் ஒன்றை திருடிவிட்டு தப்பிச் சென்று கொண்டிருந்த போது, இங்கு இரண்டாவது சந்தேக நபரான பதஹவத்த சுத்தா என்ற சந்தேக நபர் மினுவாங்கொடை பொலிஸாரால் (14) கைது செய்யப்பட்டார். இவரை விசாரித்ததன் மூலம் மேலதிக தகவல்கள் அறியப்பட்டுள்ளன. இவர்கள் YX6690 என்ற இலக்கமுடைய முச்சக்கர வண்டியில் சென்று மினுவாங்கொட, யக்கல, வீரகுல, வெலிவேரிய, கம்பஹா, ஜாஎல, நிட்டம்புவ, கட்டான, கட்டுநாயக்க ஆகிய பிரதேச வீதிகளில் சாவியுடன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 17 மோட்டார் சைக்கிள்களை திருடியுள்ளனர். இவ்வாறு திருடப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் பாதாள உலக குற்ற நடவடிக்கைகளுக்காக விற்பனை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் மேற்கொண்ட முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

## கண்ணியமிக்க மானிடனை...

கடந்து வந்தது. இம்முறை, நிம்மதி, சுதந்திரமான மனநிலையுடன் வெசாக் பண்டிகையைக் கொண்டாட மக்களுக்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது இது பெரிய வெற்றியாகும். "சிறந்த நாளைக்காக இன்றே தியாகம் செய்வோம்" என்ற கெளதம புத்தரின் போதனையின் அடிப்படையில், நமது நாட்டை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

ஞானம் பெறுவதற்காக புத்தர் கொண்டிருந்த பெரும் உறுதிப்பாட்டை, இத்தருணத்தில் நாம் அனைவரும் வளர்த்துக் கொள்ள வேண்டும். "சப்பத்த சம்மானசோ" அனைவரையும் சமமாக நடத்தும் பெளத்த உபதேசத்தை இன்று நாம் நினைவுகூர வேண்டும். அதேபோல், ஒரு நாடாக இதை நடைமுறையில் செயல்படுத்துவதை உறுதி செய்ய வேண்டும்.

இனம், மதம், சாதி, கட்சி வேறுபாடின்றி நாம் அனைவரும் ஒன்றிணைந்து கட்டியெழுப்பப்படும் இந்நாட்டை தொடர்ந்து முன்னோக்கிக் கொண்டு செல்ல வேண்டும். அதுதான் இந்தத் தருணத்தில் நாடு எதிர்கொண்டுள்ள போராட்டம். அதற்கு புத்தரின் போதைனைகள் வழிகாட்டும்.

விரைவான பெளதிக வளர்ச்சியை நோக்கி நகரும் உலகில் மனவளர்ச்சியுடன் கூடிய ஆன்மீக மற்றும் கண்ணியமான 'மனிதனை' உருவாக்குவதே இந்த வெசாக் பண்டிகையின் முக்கிய நோக்கம்.

## குறைந்தபட்ச நாளாந்த சம்பளம்...

கையெழுத்துடன் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளதாக தொழில் அமைச்சின் ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறுதெரிவிக்கப்பட்டுள்ளது.

பெருந் தோட்டத் தொழிலாளர்களின் குறைந்தபட்ச நாளாந்த சம்பளம் 1,700 ரூபாவாக அதிகரிக்கப்படுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த மே மாதம் முதலாம் திகதி அறிவித்திருந்தார்.

இதற்கமைவாக தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படை சம்பளம் 1,350 ரூபாவாகவும் உற்பத்தித்திறன் அடிப்படையில் 350 ரூபாவாகவும் வழங்கப்படவுள்ளது.

## போலிக்குற்றம் சுமத்திய கர்ப்பிணித்...

சிகிச்சையின் Caesarean Surgery போது சில தாய்மார்களுக்கு மலட்டுத் தன்மையை ஏற்படுத்துவதாக, என்மீது திட்டமிட்டு போலிக் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தனர். சில கர்ப்பிணித் தாய்மார்கள் பலவந்தப்படுத்தப்பட்டு இவ்வாறு கருத்துக்கூற திணிக்கப்பட்டனர்.

இவ்வாறு போலிக் குற்றச்சாட்டுக்கூறிய தாய்மார்கள் தற்போது தன்னிடம் மன்னிப்புக் கோரி வருகின்றனர்.

## தரம் 05 புலமைப்பரிசில் 2024...

ஏற்றுக்கொள்ளும் திகதி, நீடிக்கப்பட மாட்டாதென்பதை கவனத்திற் கொள்ளுமாறு பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு அரசாங்கப் பாடசாலையில் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகாரம் பெற்ற பாடசாலையில் தரம் 5 இல் கல்வி பயிலும் மாணவர்கள் மாத்திரமே தோற்ற முடியும்.

2025 ஜனவரி 31 ஆம் திகதியன்று 11 வயதுக்குக் குறைந்த, குறைந்த வருமானம் உடைய மாணவர்களுக்கு மாத்திரமே உதவிப் பணம் வழங்கப்படும்.

விண்ணப்பிப்பதற்கான அறிவுறுத்தல்கள், பிரமாணங்கள் ஆகியவற்றை https:onlineexams.gov.lk/eicஊடாக பிரவேசித்து பெற்றுக் கொள்ள முடியும்.

விசேட தேவைகளுடைய மாணவர்களுக்காக விண்ணப்பிக்க வேண்டிய விதம் தொடர்பான அறிவுறுத்தல்கள், அறிவுறுத்தற் பத்திரத்தில் விவரமாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

தொலைபேசி இலக்கம் 011 2784537, 011 – 2786616, 011 2784208, 0112786200, 011 2784201 அல்லது மின்னஞ்சல் முகவரி – gr5schexam@gmail.com அல்லது நேரடித் தொலைபேசி இலக்கம் – 1911, தொலைநகல் இலக்கம் 0112784422 ஆகியவற்றுடன் தொடர்புகொள்ளலாம் என்றும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எச்.ஜே.எம்.சீ. அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

## பொருளாதார ரீதியில் நாடு...

முழுமையாக விடுபடுவது தொடர்பாக கடன் வழங்கிய நாடுகளுடன் இப்போது பேச்சுவார்த்தை நடத்தப்படுகிறது.

தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் பணிகளை சர்வதேச நாணய நிதியம் ஏற்கனவே ஏற்றுக்கொண்டுள்ளது.

இந்நிலையில், பாதுகாப்பு விசேட ஏற்பாடுகள் சட்டத்தை சமர்ப்பிக்க எதிர்பார்க்கிறோம். தேசிய பாதுகாப்பு சபையை சட்டபூர்வமாக்கல், ஆயுதப்படை குழுவை நியமித்தல் என்பவற்றையே எதிர்பார்க்கிறேன்.

ஓய்வுபெற்ற பாதுகாப்புப் படை வீரர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த புதிய வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படும்.

இதற்கென, திட்டவட்டமான வேலைத் திட்டம் இல்லாததால் சில சந்தர்ப்பங்களில் துரதிஷ்டவசமான சூழலுக்கு முகங்கொடுக்க நேரிட்டது. இது தொடர்பில் விசேட கவனம் செலுத்துமாறு உரிய தரப்பினருக்கு பணிப்புரை விடுக்கிறேன்.

ஆயுதப் படையில் ஈடுபடுபவர்கள், ஓய்வு பெற்றவர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோருக்கு, போர் தந்திரங்களை கற்பதற்கு வாய்ப்பளிக்கும் வகையில் இலங்கை மூலோபாய கற்கைகள் நிறுவகத்தை (Sri Lanka Institute of strategic studies) நிறுவ நடவடிக்கை எடுக்கப்படும்.

இரண்டாவது உலகமாக யுத்தத்தின் போது சேவையிலிருந்து விலகிய மற்றும் ஓய்வுபெற்ற முப்படையினரால் 1944 ஆம் ஆண்டு இலங்கை முன்னாள் படை வீரர் சங்கம் உருவாக்கப்பட்டது.தலைமை அலுவலகம் இல்லாத குறை நீங்கியுள்ளது.

ஓய்வுபெற்ற பாதுகாப்புப் படையினரின் செயற்பாடுகளுக்காக இந்தக் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. அந்த உறுப்பினர்களில் பலர் 1983 முதல் 2009 வரை நாட்டின் ஒற்றுமை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டைப் பாதுகாப்பதில் பெரும் அர்ப்பணிப்பை மேற்கொண்டனர்.

இலங்கை முன்னாள் படைவீரர்கள் சங்க உறுப்பினர்கள் மற்றும் ஓய்வுபெற்ற அரச ஊழியர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்குவதில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

கிராமங்களில் வாழும் படைவீரர்களுக்கு இன்னும் காணி உரிமை கிடைக்கவில்லை என்பதை அறிந்தேன். காணி உறுதி வழங்குவதாக சிலர் வாக்குறுதி அளித்தனர். ஆனால், அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை.

## பேருவளையில் ஓய்வுபெற்ற அதிபர்கள், ஆசிரியர்கள் கெளரவிப்பு விழா 25ஆம் திகதி

### ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஆலோசகர் புரவலர் ஹாசிம் உமர் பிரதம அதிதி

தினகரனின் 92 ஆவது ஆண்டு நிறைவையொட்டி களுத்துறை மாவட்டத்தில் உள்ள தமிழ் மொழிமூல பாடசாலைகளின் ஓய்வுபெற்ற அதிபர்கள் மற்றும் பேருவளை தேர்தல் தொகுதியில் உள்ள தமிழ் மொழிமூல பாடசாலைகளின் ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் கெளரவிக்கப்படவுள்ளனர்.

இந்த விழாவில், புரவலர் புத்தகப் பூங்கா நிறுவனத்தின் நிறுவனரும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகருமான புரவலர் ஹாசிம் உமர் பிரதம அதிதியாக கலந்து கொள்வார். இந்த கெளரவிப்பு விழா பேருவளை ஸேம் ரிபாய் ஹாஜியார் வித்தியாலய அஷ்செய்க் முஸ்தபா வலியுல்லாஹ் கேட்போர் கூடத்தில் எதிர்வரும் 25.05.2024 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு தினகரன் மற்றும் தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை சமூக சேவையாளர் எம். பாஸி ஸுபைர் மேற்கொண்டு வருகிறார்.

## வெசாக்: பொருட்களின்...

இந்த விலைக்குறைப்பின்படி, ஒரு கிலோ நெத்தலிக் கருவாடு 950 ரூபாவாகவும், ஒரு கிலோ இந்தியப் பெரிய வெங்காயம் 250 ரூபாவாகவும், ஒரு கிலோ நிலக்கடலை 450 ரூபாவாகவும், ஒரு கிலோ சீனி 275 ரூபாவாகவும் குறைக்கப்பட்டுள்ளது.

## நிதி மோசடி குற்றச்சாட்டில்...

வர்த்தக நடவடிக்கைகள் அதிகாரிகளின் கண்காணிப்புக்கு உட்பட்டுள்ளன.

அநுராதபுரம் சிறைச்சாலைக்குள் அனுமதியின்றி நுழைந்தமை தொடர்பான குற்றச்சாட்டிலிருந்து இவர் விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஈரான் ஜனாதிபதியின் மறைவுக்கு...

கலாநிதி அலி ரீஸா டெல்கோஷ் உள்ளிட்ட பணிக்குழாம் வரவேற்றது. ஈரான் ஜனாதிபதியின் மறைவு குறித்து ஈரான் தூதுவர் உள்ளிட்டோருடன் கலந்துரையாடிய ஜனாதிபதி, அங்கு வைக்கப்பட்டிருந்த குறிப்பேட்டில் இரங்கல் குறிப்பை பதிவிட்டார்.

பின்னர், ஜனாதிபதி இப்ராஹிம் ரைசியின் திடீர் மரணத்திற்கு ஈரான் அரசாங்கத்துக்கும் அந்நாட்டு மக்களுக்கும் தனதும், இலங்கை அரசாங்கத்தினதும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்தார்.

## 20 கோடி ரூபா பெறுமதியான...

இப்பெண் பிலிப்பைன்ஸ் நாட்டை சேர்ந்தவர் என, விமான நிலைய சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது. இவர், எத்தியோப்பியாவின் அடிஸ் அபாபா நகரிலிருந்து இந்த கொக்கெய்னை நாட்டுக்கு கொண்டு வந்துள்ளதாக அறிய வருகிறது.

தனது பயணப்பொதிக்குள் மிளகாய்த் தூள், மஞ்சள் தூள், கோதுமை மா அடங்கிய 03 பொதிகளுடன், 02 கிலோவுக்கும் அதிக கொக்கெய்ன் அடங்கிய 03 பொதிகளை மறைத்து கொண்டுவந்துள்ளதாக சுங்கப்பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

## நிலையில்லா வாழ்க்கையை...

வருடங்களின் பின், இலங்கையர்களான எமக்கு முழுமையான வெசாக் பண்டிகையை கொண்டாடும் வாய்ப்பு கிடைத்துள்ளது.

உலகின் இயல்பு, நாளுக்கு நாள் மாறிக் கொண்டே இருக்கிறது. தற்போது உலகில் எமது வாழ்க்கை முறை அழிந்து வருகிறது. இதன் காரணமாக, உலகின் இயல்பை சிறப்பாகப் புரிந்துகொள்ள உதவும் பெளத்தத்தின் வழியைப் பின்பற்றி, பெளத்த சமயத்தின் உண்மையான அர்த்தத்தைக் கண்டறிய உலக மக்கள் பெளத்த தர்மத்தை நாடிச்செல்கின்றனர். பெளத்த சமயத்தில் போதிக்கப்படும் நடுநிலை கொள்கையே அதன் தர்மப் பாதையாகும்.

எல்லா காலத்துக்குமான அதன் நடுநிலை கொள்கையானது, முன்னெப்போதையும் விட இன்றைய கல்விச் சமூகத்தை வழிநடத்தும்.

இன்றைய உலகில் பேசப்படும் பொருளாதார அபிவிருத்திக்கு நடுத்தர கொள்கையைப் பின்பற்றுவது மிகவும் அர்த்தமுள்ளதாக விளங்குகிறது. நடுநிலைமை என்பது எப்போதும் அமைதியைத் தரும் ஒரு நடைமுறையாகும்.

வெசாக் அலங்காரங்கள் வாழ்க்கையின் நிலையற்ற தன்மையை எடுத்துரைக்கும் ஒரு ஆழ்ந்த மனப் பயிற்சியாகும். வெசாக் அலங்காரமானது வாழ்க்கையின் சமநிலையற்ற தன்மையானது அழிவுக்கு வழிவகுக்கிறது என்பதை அனுபவத்தின் மூலம் பிள்ளைகளுக்குப் புரிந்துகொள்ள உதவுகிறது. அனுபவத்தின் மூலம் வாழ்க்கையைப் புரிந்து கொண்டு, வெசாக் கலையை தொடர்ந்தும் உயிர்ப்போடு பேணுவதற்கு வழிசெய்வதும், பிள்ளைகளை வெசாக் அலங்காரங்களில் ஈடுபடச் செய்வதும் பெரியோர்கள் அனைவரினதும் கடமையாகும்.

உன்னதமான பெளத்த தத்துவத்தின் வழியே உண்மையான மகிழ்ச்சிக்கு வழிவகுக்கும் அன்பு (மெத்தா), காருண்யம் (கருணா), மகிழ்ச்சி (முதிதா), பற்றின்மை (உபேக்ஷா) என்ற நான்கு தூண்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமூகத்தில் எமது செயற்பாடுகளை அமைத்துக்கொள்வோம்.

## ஈரான் ஜனாதிபதியின் திடீர்...

பாராளுமன்றம் நேற்றுக்காலை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவின் தலைமையில் கூடியது. வளமையான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்பதாக ஆளும் கட்சியின் பிரதம கொரடாவான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, மௌன அஞ்சலி செலுத்தும் பிரேரணையை பாராளுமன்றத்தில் முன்வைத்தார்.

இப்பிரேரணையை முன்வைத்த அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, ஈரான் ஜனாதிபதியின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிப்பதாக சபையில் தெரிவித்தார்.

எமது நாட்டுக்கு இறுதியாக விஜயம் செய்த அரச தலைவர் ஈரான் ஜனாதிபதி என்பதையும் அமைச்சர் இதன் போது நினைவுகூர்ந்தார். உமா ஓய திட்டத்தை நடைமுறைப்படுத்து வதற்கு அவர் தேவையான ஏற்பாடுகள் மற்றும் ஆதரவை வழங்கியதை நினைவுகூர்ந்த அமைச்சர் பிரசன்ன, ஈரான் ஜனாதிபதியின் மறைவுக்கு பாராளுமன்றத்தில் ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தி தனது அனுதாபத்தை தெரிவிக்க முன்வந்தார். சர்வதேசத்தின் ஒத்துழைப்பின்றி...

பாதையிலிருந்து மாறி, வேறு மாற்று வழிக்கு சென்றால் நாட்டுக்கு ஏற்படும் அழிவுக்கு தனியாகவோ அல்லது ஒருமித்தோ தற்போதைய அரசாங்கமே பொறுப்புக் கூற வேண்டிய நிலை ஏற்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றும் போதே, அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

## ஒற்றையாட்சி கட்டமைப்புக்குள்...

என்று தெரிவித்துள்ள அமைச்சர், கட்சியின் வேலைத் திட்டங்களும் கருத்துக்களும் பரந்துபட்டளவில் மக்கள் மத்தியில் செல்லும் வகையில், கட்சி உறுப்பினர்களின் செயற்பாடுகள் அமைய வேண்டுமெனவும் தெரிவித்தார். சமகால அரசியல் நிலைப்பாடுகள் தொடர்பில் ஈ.பி.டி.பியின் மன்னார் மாவட்ட அமைப்பாளர்கள் செயற்பாட்டாளர்களுடனான சந்திப்பின் போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிடுள்ளார். இச்சந்திப்பில் ஈ.பி.டி.பி. கட்சியின் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் குலசிங்கம் திலீபன், தேசிய அமைப்பாளர் பசுபதி சீவரத்தினம் கி.பி ஆகியோரும் உடனிருந்தனர்.

## சர்வதேசத்தின் ஒத்துழைப்பின்றி...

பாதையிலிருந்து மாறி, வேறு மாற்று வழிக்கு சென்றால் நாட்டுக்கு ஏற்படும் அழிவுக்கு தனியாகவோ அல்லது ஒருமித்தோ தற்போதைய அரசாங்கமே பொறுப்புக் கூற வேண்டிய நிலை ஏற்படும் என்றும் அவர் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றும் போதே,

அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர், பாராளுமன்றத்தில் இரண்டு சட்டமூலங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. நாட்டின் நிதி பொறுப்பு பாராளுமன்றத்திற்கே உரியது.

நாட்டை வங்குரோத்து நிலைக்கு கொண்டு சென்றவர்களால் நாட்டைப் பாதுகாக்க முடியாதென தெரிவித்து, எதிர்க்கட்சியின் பிரதம கொரடாவான லக்ஷ்மன் கிரியெல்ல மாற்று வேலைத் திட்டம் ஒன்றை சபையில் முன் வைத்தார். புதிய அரசாங்கத்துக்கு அதனை முன்னெடுக்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார். இது முற்றிலும் தவறான எண்ணம்.

2001 ஆம் ஆண்டிலிருந்தே நாட்டின் பொருளாதாரம் வங்குரோத்து நிலையை நோக்கி, பயணிக்க ஆரம்பித்துள்ளது.


நாட்டின் பொருளாதார வளர்ச்சி சுதந்திரத்துக்குப் பின்னர் 1.4 ஆக காணப்பட்டது. அப்போது கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பிருந்த நிலைமைக்கு சமமான நிலை நாட்டில் உருவாகியது.

வட்டி வீதம் அதிகரித்தது. அந்நிய செலாவணி வீதம் கட்டுப்படுத்த முடியாமல் போனது என அவர் மேலும் தெரிவித்தார்.

## இன்றைய பலன்கள் (23.05.2024)




கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா (ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)




**மேஷம்:** செய்யும் வேலைகளில் கவனக் குறைவால் ஏற்பட்ட தவறுகளை சரி செய்ய நேரிடும். கூட்டு தொழில் செய்பவர்கள் வியாபாரத்தை அபிவிருத்தி செய்ய கூட்டாளிகளுடன் கலந்து ஆலோசிப்பீர்கள்.




**ரிஷபம்:** சொந்தத் தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு ஆதாயம் அதிகரிக்கும். வேலையை முடிக்க வாடிக்கையாளர்களிடமிருந்து நெருக்கடி வரலாம்.



**மிதுனம்:** கூட்டுத்தொழில் முயற்சியில் எதிர்பார்க்கும் லாபம் வந்து சேரும். கூட்டாளிகளை அனுசரித்துச் செல்லுங்கள். பங்குச்சந்த வியாபாரத்தில் சிறிது முன்னேற்றம் காணக்கூடும்.



**கடகம்:** கூட்டுத் தொழிலில் எதிர்பார்க்கும் லாபம் வந்து சேரும். பணியாளர்களின் தேவைகளை பூர்த்தி செய்ய கூட்டாளிகளுடன் கலந்து ஆலோசிப்பீர்கள்.



**சிம்மம்:** தொழில்நுட்பம் அறிந்தவர்களை உதவியாளர்களாக பணியில் அமர்த்தி கொள்ள திட்டமிடுவீர்கள். கூட்டுத்தொழில் செய்பவர்கள் பணியாளர்களை அவ்வப்போது கண்காணித்து வருவது நல்லது.




**கன்னி:** கூட்டுத் தொழில் சுமாராக நடைபெறும். ஆயினும் வழக்கமான லாபம் குறையாது. பங்குச்சந்து வியாபாரத்தில் லாபம் இல்லாமல் போகலாம்.



**துலாம்:** கூட்டாளிகளில் ஒருவர் பிரிந்து சென்று புதிய தொழிலை தனியாக செய்ய முற்படுவர். பங்குச்சந்தை வியாபாரம் சுமாராக நடைபெறும். எதிர்பார் த லாபம் கிடைக்கும்.



**விருச்சிகம்:** சொந்தத் தொழில் செய்பவர்கள் அவசர காரியங்களை முடிப்பதற்காக அதிக அலைச்சலை சந்திக்க வேண்டியது இருக்கும். கூட்டுத்தொழில் செய்பவர்கள் கூட்டாளிகளை அனுசரித்துச் செல்வது நல்லது.



**தனுசு:** கூட்டு தொழில் வியாபாரத்தில் வழக்கமான லாபம் வந்து சேரும். பங்குச்சந்தை வியாபாரத்தில் இஸ்திர தன்மை உள்ள பங்குகளில் கவனம் செலுத்துவது நல்லது.



**மகரம்:** பணியாளர்களின் ஒத்துழைப்பால் வியாபார அபிவிருத்தி ஏற்படும். பங்குச்சந்தைகள் அதிக லாபம் பெற சிறிது காலம் பொறுமையாக இருப்பதே நல்லது.



**கும்பம்:** கூட்டுத் தொழில் செய்பவர்களுக்கு வங்கிகளில் எதிர்பார்த்த கடன் தொகை கிடைக்கலாம். பங்குச்சந்தையில் ஸ்திரமான விலை உள்ள பங்குகளை பெற முயற்சிப்பீர்கள்.



**மீனம்:** தொழிலை விஸ்தரிப்பது பற்றி கூட்டாளிகளுடன் கலந்தாலோசித்து முடிவெடுப்பது நன்மை தரும். பங்கு சந்தை வியாபாரம் நன்கு நடைபெறும்.

## கிராம சேவகர் சம்பள... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

சம்பளம் ரூ.38 ,590 ஆகவும் அதிகரிக்கும் என்றும் தெரிவித்தார்.

அந்தந்த உள்ளூராட்சி சபை எல்லைக்குள் மாதாந்த அலுவலக கொடுப்பனவு ரூ. 1000 முதல் 2000 ஆகவும் நகராட்சி எல்லைக்குள் ரூ. 1500 முதல் 3000 ஆகவும் வருடாந்த அலவன்ஸ் ரூ. 1500 முதல் ரூ. 3000 ஆக அதிகரிக்கவும் 01.04.2024 முதல் நடைமுறைப்படுத்தவும் அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது.

## தேசியப் பிரச்சினைக்கு... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

றத்தில் நேற்று எதிர்க்கட்சி கொண்டு வந்த பொருளாதாரம், சட்டம் ஒழுங்கு மற்றும் பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில், உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். விவாதத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர், தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விடயத்தில் அரசாங்கத்தின் நிலைப்பாடு தொடர்பில் வேலுகுமார் எம்.பி சபையில் கேள்வி எழுப்பினார்.

இதற்கு இராஜாங்க அமைச்சசர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய பதிலளிக்கையில், அந்த விடயம் அரச தலைவர்கள் கூடி பேசியது. தொழிலாளர்கள் அதனை கேட்கவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## பெரியவெங்காயம்... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

இலங்கையிலிருந்தே வெளிநாடுகளுக்கு மரக்கறிகள் ஏற்றுமதி செய்யப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார். வற்றாலைக் கிழங்கு மற்றும் சேமன் கிழங்கு ஆகியவற்றை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்வதாக தெரிவிக்கப்படுவது உண்மைக்குப் புறம்பானது என்றும் தெரிவித்த அவர் ஒரு தொகை உருளைக்கிழங்கு மற்றும் பெரிய வெங்காயம் மாத்திரமே இறக்குமதி செய்யப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். பொது ஜன பெரமுனவின எம்பி நிமல் பியதிஸ்ஸ நேற்று சபையில் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

## சபையில் கோரமின்னை... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

சமர்ப்பித்தார். இதனைத் தொடர்ந்து பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டு ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதம் ஆரம்பமானது.

எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல நாட்டின் பொருளாதாரம்,சட்டவாட்சி மற்றும் சட்டம், ஒழுங்கு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பான சபை ஒத்திவைப்பு பிரேரணையை சபையில் முன்வைத்தார். இந்த பிரேரணையை ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான் வழிமொழிந்தார். சபை ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதம் காலை முதல் மாலை 04.15 மணி வரை இடம்பெற்ற நிலையில், ஆளும் தரப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மதுர விதானகே ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பி சபை நடவடிக்கைகளை தொடர்ந்து முன்னெடுத்து செல்வதற்கு போதுமான உறுப்பினர்கள் சபையில் இல்லை என்றும் கூட்ட நடப்பெண் தொடர்பில் ஆராயுமாறும் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து சபைக்கு தலைமை தாங்கிய ஜகத் சமரவிக்ரம, கூட்ட நடப்பெண் தொடர்பில் ஆராய கோரம் ஒலிக்க அறிவித்தார். ஐந்து நிமிடங்கள் கோரம் மணி ஒலித்தும் போதுமான உறுப்பினர்கள் சபையில் இருக்கவில்லை. இதனால் சபை ஒத்திவைப்பு வேளை விவாதம் இடைநடுவில் நிறுத்தப்பட்டு, சபை நடவடிக்கைகளை எதிர்வரும் மாதம் 04 வரை ஒத்திவைத்தார்.

## கடற்பிரதேசம்... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

காற்று வீசும் என்றும் சில சமயங்களில் மணித்தியாலத்திற்கு 60 – 70 கிலோமீற்றர் வேகத்தில் அடிக்கடி காற்று வீசக்கூடுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டை சூழ உள்ள ஏனைய கடல் பிராந்தியங்களில் மணிக்கு 25 – 35 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசும். சில சமயங்களில் காற்றின் வேகம் மணிக்கு 50 கிலோமீற்றர் ஆக அதிகரித்தும் காணப்படும். மன்னார் தொடக்கம் கொழும்பு வரையான கடல் பிராந்தியங்கள் அடிக்கடி கொந்தளிப்பா காணப்படுவதால் இக் கடல் பிராந்தியங்களுக்கு மீனவர்கள் மற்றும் கடற்படையினரை மறு அறிவித்தல் வரை செல்ல வேண்டாம் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். கல்பிட்டி தொடக்கம் கொழும்பு, காலி, ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடல் பிராந்தியங்களில் கடல் அலையானது 2.5 – 3.0 மீற்றர் உயரத்திற்கு மேலெழக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

## நயினை நாகபூசணி அம்மன்...

மகோத்ஸவம் தொடர்பான முன்னாயத்த கூட்டம் யாழ், மாவட்ட செயலகத்தில்நேற்று நடைபெற்றது. மேலதிக விபரங்கள் – 05 ஆம் பக்கம்

## வெசாக் பண்டிகை: 278...

அரச பொதுமன்னிப்பு பெறும் கைதிகளில் வெலிக்கடை சிறைச்சாலையில் 15 கைதிகளும் மஹர சிறைச்சாலையில் 37 கைதிகளும் இடம்பெற்றுள்ளனர். இவர்களில் 10 பெண் கைதிகளும் உள்ளடங்குவதாகவும் சிறைச்சாலை ஆணையாளருமான காமினி பி. திஸாநாயக்க மேலும் தெரிவித்தார்.

# வட மாகாணத்தில் அதிகூடிய மே மாத மழைவீழ்ச்சி பதிவு

**கோப்பாய் குறூப் நிருபர்**



வடக்கு மாகாணத்தில் கடந்த 200 ஆண்டுகால வரலாற்றில் அதிகூடிய மே மாத மழைவீழ்ச்சி தற்சமயம் பதிவாகியுள்ளதாக யாழ்.பல்கலைக் கழக புவியியல்துறை விரிவுரையாளர் நா. பிரதீபராஜா தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் மே மாதம் சராசரியாக 90 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகும். அதுமட்டுமின்றி மே மாத மழை நாட்கள் சராசரியாக 6 ஆகும். ஆனால் இவ்வாண்டு மாதம் முடிவடைய இன்னமும் 10 நாட்கள் உள்ள நிலையில் வட மாகாணத்தில் நேற்றுவரை 230 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

இம்மாத இறுதியில் இதன் அளவு இன்னமும் அதிகரிக்க வாய்ப்புள்ளது. மாதத்தின் இதுவரையான நாட்களில் 12 நாட்கள் மழை கிடைத்துள்ளது.

ஒப்பீட்டளவில் முல்லைத்தீவு மாவட்டத்தின் கிழக்குப்பகுதிகள், யாழ்ப்பாண மாவட்டத்தின் வலிகாமம் பகுதிகள் அதிகளவிலான மழைவீழ்ச்சியை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# குடும்பஸ்தர் திடீர் மரணம்

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணத்தில் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்தவர் திடீரென மயங்கி வீழ்ந்து நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

ஊரெழு கிழக்கை சேர்ந்த சிங்காரத்தினம் சசிக்குமார் (வயது 48) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சடலம் பிரேதபரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## வடக்கின் உதயம்

# யாழ்.தனியார் பஸ் நிலையத்துக்கு அமைச்சர் டக்ளஸ் கண்காணிப்பு விஜயம்



**யாழ். விசேட நிருபர்**

யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டுள்ள வெளிமாவட்டங்களுக்கான தனியார் பஸ் நிலையத்துக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கண்காணிப்பு விஜயமொன்றை நேற்றைய தினம் புதன்கிழமை மேற்கொண்டுள்ளார்.

இவ்விஜயத்தின்போது பஸ் நிலையத்தின் பராமரிப்பு செயற்பாடுகள் தொடர்பாக விரிவாக ஆராய்ந்துள்ளார்.

மேலும், பஸ் நிலையத்தை வினைத்திறனுடன் செயற்படுத்தி, மக்களுக்கும் போக்குவரத்து சேவையில் ஈடுபடுவோருக்கும் இலகுவான ஏற்பாடுகளை மேற்கொள்வது தொடர்பாகவும் துறைசார் தரப்பினருடன் கலந்துரையாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலயத் திருவிழா; யாழ். மாவட்ட செயலகத்தில் முன்னாயத்த கலந்துரையாடல்

**யாழ். விசேட நிருபர்**



நயினாதீவு ஸ்ரீ நாக பூசணி அம்மன் ஆலயத் திருவிழா தொடர்பான முன்னாயத்த கலந்துரையாடல் யாழ். மாவட்ட பதில் செயலாளர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில், மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்றைய தினம் நடைபெற்றது.

நயினாதீவு ஸ்ரீநாகபூசணி அம்மன் ஆலயத் திருவிழா எதிர்வரும் 07ஆம் திகதி தொடக்கம் 22ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

திருவிழா காலத்தில் அனைத்து பக்தர்களும் சிறப்பான முறையில் எந்தவித இடையூறும் இல்லாமல் ஆலயத்தை தரிசிப்பதை உறுதிப்படுத்தும் வகையில் இக்கலந்துரையாடல் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் திருவிழாக்காலங்களில் வழமைபோல் யாழ். பஸ் தரிப்பு நிலையத்திலிருந்து குறிகட்டுவான் வரையிலான இலங்கை போக்குவரத்து சேவை மற்றும் தனியார் பஸ் சேவைகளின் ஒருவழிக் கட்டணம் ரூ.187 என தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை குறிகட்டுவானிலிருந்து ஆலயம் செல்வதற்கான படகு போக்குவரத்து ஒரு வழிக்கட்டணம் ரூ.80 எனவும் தீர்மானிக்கப்பட்டது.

அத்தோடு கடற்போக்குவரத்து (படகு) நேரத்திற்கமைய தனியார் போக்குவரத்து மற்றும் இலங்கை போக்குவரத்து பஸ் சேவை காலை 6.00 மணி தொடக்கம் மாலை 7.30 மணிவரையில் நடைபெறவுள்ளது.


கடற்போக்குவரத்தில் ஈடுபடும் படகுகள், படகுகளை உரியமுறையில் பேணுவதுடன் படகில் ஏற்றிச் செல்லும் பயணிகளின் எண்ணிக்கையை மட்டுப்படுத்துதல் மற்றும் பயணிகளுக்குரிய வசதிகள் இல்லாத படகுகளை சேவையில் ஈடுபடுவதை தவிர்த்தல் வேண்டும்.

ஆலயத்திற்கு அருகாமையில் உள்ள கள் விற்பனை நிலையம் திருவிழாக்காலத்தில் பூட்டப்படுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும் திருடர்களின் நடமாட்டத்தை கட்டுப்படுத்த பொலிஸ் பாதுகாப்பு உறுதிபடுத்தப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது. சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் சேவை, பொலிஸ் பாதுகாப்பு, கடற்போக்குவரத்தில் பாதுகாப்பு அங்கிகளை அணிவதை உறுதிப்படுத்தல், பாடசாலை மாணவர்களின் சாரணர் தொண்டர் சேவை, தரை மற்றும் கடற்போக்குவரத்து நேர அட்டவணையை காட்சிப்படுத்தல், மின்இணைப்பு, யாசகம் பெறுவோர் உள்வருவதை கட்டுப்படுத்தல், நடமாடும் வைத்திய சேவை, சுகாதாரம் மற்றும் குடிநீர் தேவை, மின்சாரத்தேவை, அமுதசுரபி அன்னதான ஏற்பாடுகள், அம்புலன்ஸ் சேவை மற்றும் புனரமைக்கவேண்டிய வீதிகள் உள்ளிட்ட விடயங்கள் விரிவாக கலந்துரையாடப்பட்டன.

# பாணினுள் கண்ணாடித் துண்டுகள்

**யாழ்.விசேட நிருபர்**



யாழ்ப்பாணத்தில் பாண் ஒன்றுக்குள் கண்ணாடி துண்டுகள் காணப்பட்டதையடுத்து சுகாதார பரிசோதகர்கள் இதுதொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

மருதனார்மடம் பகுதியிலுள்ள கடையொன்றில் நேற்றைய தினம் ஒருவர் பாண் வாங்கியுள்ளார். அதனை வீட்டில் சாப்பிட முற்பட்ட போது, பாணினுள் கண்ணாடி துண்டுகள் இருந்துள்ளன.

இதனையடுத்து இதுதொடர்பில் அப்பகுதி சுகாதார பரிசோதகருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அவர் முன்னெடுத்த விசாரணைகளில் கடைக்கு பாண் விநியோகம் செய்தது, சுன்னாகம் பகுதியிலுள்ள பிரபல வெதுப்பகம் என தெரிய வந்துள்ளது.

அதனையடுத்து குறித்த வெதுப்பகத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க பொது சுகாதார பரிசோதகர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

# திடீரென வீதிக்கு வந்த காட்டு யானையால் பதற்றம்!

**மன்னார் குறூப் நிருபர்**

மன்னார் மதவாச்சி பிரதான வீதி, முருங்கன் பகுதியில் காட்டு யானையொன்று நேற்று (22) காலை திடீரென வீதிக்கு வந்தமையால் அவ்வீதியூடான போக்குவரத்து சிறிது நேரம் பாதிக்கப்பட்டிருந்தது.

முருங்கன் பண்ணையின் பின் பகுதியூடாக வந்த யானை பண்ணையின் முன் பகுதிக்கு வந்து சுற்று வேலியை உடைத்துக் கொண்டு மன்னார் முருகன் பிரதான வீதிக்கு வந்து சிறிது நேரத்தின் பின்னர் வீதியை கடந்தது. இதனால் குறித்த வீதியூடான போக்குவரத்து சிறிது நேரம் பாதிக்கப்பட்டிருந்தது. பின்னர் யானை காட்டுப் பகுதிக்குள் சென்றது. கடந்த சில நாட்களாக மன்னார் மதவாச்சி பிரதான வீதியில் இரவு பகல் பாராது காட்டு யானையின் திடீர் நடமாட்டம் அதிகரித்துள்ளது. இதனால் மக்களை அவதானமாக பயணிக்குமாறு சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# அகில இந்திய வழக்கறிஞர் கூட்டமைப்பின் சர்வதேச மாநாடு






அகில இந்திய வழக்கறிஞர் கூட்டமைப்பின் சர்வதேச மாநாடு அண்மையில், கொழும்பு, பிரைட்டன் ஹோட்டலில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், பிரதம அதிதியாக முன்னாள் பிரதம நீதியரசரும், வட மாகாண முதலமைச்சரும், தற்போதைய பாராளுமன்ற உறுப்பினருமாகிய சி.வி. விக்னேஸ்வரன் கலந்துகொண்டதுடன் கௌரவ அதிதியாக கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் கலந்து சிறப்பித்தார். இந்நிகழ்வின் போது, இந்தியாவின் முன்னாள், இந்நாள் நீதிபதிகள், வழக்கறிஞர்கள் என பல்வேறு தரப்பினருக்கும், அதிதிகளினால் விருதுகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## மலைச்சாரல்

# கவிஞர் இக்பால் அலியின் இருநூல்கள் இன்று வெளியீடு




அக்குறணை ஐடெக் கல்வி நிலையம், மக்கள் கலை இலக்கிய ஒன்றியம் இணைந்து நடத்தும் எழுத்தாளர், சிரேஷ்ட ஊடகவியலாளர் கவிஞர் இக்பால் அலி எழுதிய 'காலத்தின் கால்கள்' (திறன்நோக்கு கட்டுரைத்தொகுதி), 'குரங்குத் தம்பி' (சிறுவர் பாடல்கள்) ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு விழா இன்று காலை 9.30 மணிக்கு அக்குறணை ஐடெக் கல்வி நிலைய மண்டபத்தில் ஐடெக் கல்வி நிலையத்தின் இயக்குனர் ஐ. ஐனுடீன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசியத் தலைவருமான ரவூப் ஹக்கீம். பாராளுமன்ற உறுப்பினரும் ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட அமைப்பாளருமான எம். எச். ஏ. ஹலீம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் கௌரவ விருந்தினர்களாக தினகரன் வாரமஞ்சரி, தினகரன் நாளிதழ் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் தே.செந்தில்வேலவர், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முஸ்லிம் சேவையின் ஆலோசனை சபை உறுப்பினரும் பாகிஸ்தான் நாட்டின் வதிவிடப் பிரதிநிதியுமான அப்சல் மரைக்கார், ஜம்மிய்யதுல் அன்னசாரிஸ் சுன்னத்துல் முஹம்மதிய்யா பொதுச் செயலாளர், ஏ. எல் கலிலுர்ரஹ்மான், அக்குறணை பிரதேச செயலாளர் ருவன்திகா குமாரி ஹென்நாயக ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நூல் முதல் சிறப்புப் பிரதிகளைப் பெற்று எழுத்துலகிற்கு பங்களிப்புச் செய்யும் பெருந்தகைகள் தொழிலதிபர் டி. எம். எஸ். நிசாஹிர் , தொழிலதிபர் எஸ். முத்தையா, அக்குறணை ஜம்மிய்யதுல் உலமா சபைத் தலைவர் அஷ்ஷெய்க் எம். ஏ.எம்.சியாம், மலையக கலை கலாசார (இரத்தின தீப) சங்கத்தின் தலைவர் எஸ். பரமேஸ்வரன் ஆகியோர் பெற்றுக் கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் கண்டி மக்கள் கலை இலக்கிய ஒன்றியத்தின் தலைவர் இரா. இராமன் வரவேற்புரையையும், மத்திய மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர், வட மத்திய மாகாண முன்னாள் ஆளுநர் சரத் ஏக்கநாயக்க, அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் முன்னாள் தேசியத் தலைவர் சஹீட் எம். ரிஸ்மி, மனித அபிவிருத்தி தாபனத்தின் இயக்குனர், சர்வதேச விவசாய நிறுவனத்தின் செயலாளர் நாயகம் கலாநிதி பி. பி. சிவப்பிரகாசம் , சமய, சமூகப் பேச்சாளர். நெலும் ஆடைக் காட்சியகத்தின் உரிமையாளர் முத்தையாப்பிள்ளை ஸ்ரீகாந்தன் ஆகியோர் வாழ்த்துரையாற்றவுள்ளனர்.

பேராசிரியர் எம்.எஸ்.எம். அனஸ் நூல்கள் பற்றிய அறிமுகத்தையும், பேராதனை பல்கலைக்கழக அரசியல் விஞ்ஞானத்துறை முன்னாள் விரிவுரையாளர் கவிஞர் ரா. நித்தியானந்தன் மற்றும் கண்டி திரித்துவக் கல்லூரி சிரேஷ்ட ஆசிரியை திருமதி சர்மிளாதேவி துரைசிங்கம் ஆகிய இருவரும் நூல் நயவுரையினையும், நூலாசிரியர் இக்பால் அலி ஏற்புரையினையும், அக்குறணை பிரதேச செயலகத்தின் மொழிபெயர்ப்பாளர் பீ. தாரீக் நன்றியுரையினையும் நிகழ்த்தவுள்ளனர்.

# தொற்றுநோய் பரவும் அபாயம்

**பலாங்கொடை தினகரன் நிருபர்**

பலாங்கொடை பகுதியில் தொற்றுநோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக பொது சுகாதார பரிசோதனை அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

காய்ச்சல், வயிற்றோட்டம் ஆகிய நோய்கள் நீருடன் தொற்றுவதற்கு அதிக வாய்ப்புள்ளதாக சுகாதார பரிசோதக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

அதேசமயம் மரக்கறி வகைகள், பழங்கள், கீரை வகைகள் பாவனைக்கு எடுக்கும் போது சுத்தமான நீரினால் நன்றாக கழுவி எடுப்பதற்கு பொதுமக்கள் கவனம் செலுத்த வேண்டுமெனவும் அதிகாரிகள் அறிவுறுத்தல் வழங்கியுள்ளனர்.

வரட்சியான காலநிலை காரணமாக ஆறுகள், கிணறுகள் மற்றும் ஓடைகளில் நீர் வற்றியது. பின்னர் மழையுடன் அந்த நீரில் பலவிதமான அசுத்தங்கள் மற்றும் மிருகங்களின் மலம் என்பன சேர்ந்து விடுவதால் சுகாதாரத்துக்கு பாதிப்பு ஏற்படுவதாக அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

பொதுமக்கள் காய்ச்சல், இருமல் மற்றும் கண் சிவத்தல் அல்லது மஞ்சள் நிறமாவது போன்ற நோய்அறிகுறிகள் ஏற்படுமாயின் உடனடியாக வைத்திய அதிகாரி ஒருவரையோ அல்லது அரச வைத்தியசாலையிலோ சிகிச்சை பெற்றுக் கொள்ளுமாறு பொது சுகாதார பரிசோதக அதிகாரிகள் பொதுமக்களை வேண்டியுள்ளனர்.

## இரத்தினபுரி மாவட்டத்தில்

# வெசாக் தினத்தை முன்னிட்டு சமய கலாசார நிகழ்வுகள்

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

இரத்தினபுரி மாவட்டத்தில் வெசாக் தினத்தை முன்னிட்டு ஹிதல்லன ஸ்ரீ மஹா விகாரை வளவில் இம்மாதம் 21 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரை பல்வேறு சமய நிகழ்வுகள் நடைபெறவுள்ளதாக ஸ்ரீ மகா விகாரையின் விகாராதிபதி அமிதாகொட சந்திரரத்ன தேரர் தெரிவித்தார். சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவீன் திசாநாயகவின் அறிவுறுத்தலுக்கு இணங்க இலங்கை பொலிஸ் மற்றும் இராணுவத்தின் உதவியுடன் இரத்தினபுரி மாவட்ட செயலகம், இரத்தினபுரி பிரதேச செயலகம் மற்றும் நிறுவனங்களின் பங்களிப்புடன் இந்நிகழ்வு நடைபெறவுள்ளது.

# சீரற்ற காலநிலை மின்விநியோகம் தடை

நாட்டில் ஏற்பட்டுள்ள தென்மேல் பருவபெயர்ச்சி காலநிலை மாற்றத்தினால் கடும் காற்று, பலத்த மழையுடனான காலநிலை நிலவுகின்றது.

இந்நிலையில் நுவரெலியா மாவட்டத்தில் நுவரெலியா, வலப்பனை, கொத்மலை, ஹங்குராங்கெத்த, மற்றும் அம்பகமுவ ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் தொடர்ச்சியான மழையும்,பலத்த காற்றும் வீசுகிறது.

இதன் காரணமாக வலப்பனை பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் முதல் இரண்டு நாட்களாக கடும் காற்று வீசுகின்றது.

வலப்பனை ரூபஹா மற்றும் தெரிப்பெயே ஆகிய பிரதேசங்களில் வீதியோரங்களில் காணப்படும் பாரிய மரங்கள், மின்சார இணைப்பு வயர்கள் மீது சரிந்து வீழ்ந்து மின் விநியோகம் முற்றாக தடைப்பட்டுள்ளது.

# மரம் முறிந்து வீழ்ந்ததில் 6 பேர் வைத்தியசாலையில் அனுமதி

இரத்தினபுரி மாவட்டத்தில் மரம் முறிந்து வீழ்ந்ததில் 6 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இரத்தினபுரி கொல்லகல பகுதியில் வீசிய பலத்த காற்று காரணமாக வீடொன்றின் மீது மரம் முறிந்து விழுந்ததில் மூவர் இரத்தினபுரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, பலாங்கொடை ஹெரமிட்டிகல பகுதியில் வீசிய பலத்த காற்று காரணமாக வீடொன்றின் மீது மரம் முறிந்து விழுந்ததில் ஒருவர் காயமடைந்துள்ளார். அத்தோடு சம்பவத்தை பார்வையிட சென்றவர் மீதும் கித்துள் மரம் ஒன்று முறிந்து விழுந்ததில் அவர் காயமடைந்துள்ளார். அதேவேளை பலாங்கொடை வட்டவல பிரதேசத்தில் வீசிய பலத்த காற்று காரணமாக வீடொன்றின் மீது மரம் முறிந்து விழுந்ததில் பெண் ஒருவரும் காயமடைந்துள்ளார்.

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் வைகாசி மாதம் 10ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 துல்கஃதா பிறை 14

### குறள் தரும் சிந்தனை



இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு

இல்லறத்தைப் போற்றி வாழ்வது, விருந்தினரை வரவேற்று, அவர்க்கு வேண்டிய உதவிகளைச் செய்வதற்காகவே.

## யானை - மனிதன் மோதலை தவிர்க்க மற்றொரு திட்டம்

இலங்கையின் விவசாயப் பிரசேதங்களில் வாழும் மக்கள் அண்மைக் காலமாக முகம்கொடுக்கும் முக்கிய பிரச்சினைகளில் ஒன்றாக யானை_ மனிதன் மோதல் விளங்குகின்றது. இப்பிரச்சினையினால் அவ்வாறான பிரதேசங்களில் வாழும் மக்களின் இயல்பு வாழ்வும் பொருளாதாரமும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக அநுராதபுரம், பொலன்னறுவை, புத்தளம், குருநாகல், மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, வவுனியா உள்ளிட்ட மாவட்டங்கள் இப்பிரச்சினையைப் பெரிதும் எதிர்கொண்டுள்ளன.

வரட்சிக் காலங்களில் காடுகளிலுள்ள நீர்த்தடாகங்கள் வற்றிப் போவதாலும், யானைகள் உணவாகக் கொள்ளக்கூடிய பயிர்கள் அழிவடைவதாலும், அவை விரும்பி உணவாகக் கொள்ளக்கூடிய பயிர்கள் காடுகளுக்கு அருகில் செய்கை பண்ணப்படுவதாலும்தான் உணவு மற்றும் தண்ணீரைத் தேடி மக்கள் வாழும் பிரதேசங்களுக்கு வருகின்றன.

அதேநேரம் யானைகளின் பெரும்பாலான வாழிடங்கள் மக்களின் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியுள்ளன. அவ்வாறான இடங்களில் மக்கள் குடியிருப்புக்கள் அமைக்கப்பட்டுள்ளன. விவசாய நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. குறிப்பாக யானைகள் காணப்படும் காடுகளுக்கு அருகிலுள்ள பிரதேசங்களில் நெற்செய்கை உள்ளிட்ட பயிர்ச் செய்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

அதாவது யானைகள் விரும்பி உணவாகக் கொள்ளக்கூடிய நெல், வாழை மற்றும் தென்னை போன்ற பயிர்கள் யானைகள் காணப்படும் காடுகளுக்கு அண்மித்த பிரதேசங்களில் பயிரிடப்படுவதால் அப்பயிர்களின் வாசனையை அறிந்து அவை அவற்றை நாடி வந்து உணவாகக் கொள்ளவும் செய்கின்றன.

இவை இவ்வாறிருக்க, யானைகள் காணப்படக்கூடிய பிரதேசங்களுக்கு அருகிலுள்ள வீடுகளிலும் கட்டடங்களிலும் நெல் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்தால் அவ்வீடுகளையும் கட்டடங்களையும் நாடி வந்தும் யானை நெல்லை உணவாகக் கொள்ளும் நிலைமை அடிக்கடி பதிவாகக்கூடியதாக உள்ளது.

இவ்வாறான பிரச்சினைகளுக்கு விவசாய மாவட்டங்களை சேர்ந்த மக்கள் அடிக்கடி முகம்கொடுத்து வருகின்றனர். இந்த நிலைமை மக்களுக்கு பெரும் பிரச்சினையாக இருந்து வருகின்றது.

அதேநேரம் அண்மைக் காலமாகத்தான் இந்நாட்டில் யானை_ மனிதன் மோதல் அதிகரித்து இருக்கிறது. இதற்கு யானைகளில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பும் ஒரு முக்கிய காரணம் என்று சூழலியலாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மேலும் யானைகளின் வாழிடங்கள் சுருங்கி வருவதோடு அவை காணப்படும் காடுகளிலுள்ள குளங்களும் நீர்த்தடாகங்களும் நீண்ட காலமாகப் பராமரிக்கப்படாது அவை தூர்ந்து போயுள்ளன. அத்தோடு யானைகள் விரும்பி உண்ணக்கூடிய உணவுத் தாவரங்களும் காடுகளில் குறைவடைந்து வருகின்றன.

இவ்வாறான காரணங்களினால் பெரும்பாலான யானைகள் தமக்குத் தேவையான நீரையும் உணவையும் பெற்றுக்கொள்வதில் பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்கின்றன. அதனால் காடுகளை விட்டு யானைகள் வெளியே வருகின்றன. அது யானை_ மனிதன் மோதலுக்கு வழிவகுக்கக் கூடியனவாக அமைந்து விடுகின்றது. இதன் விளைவாக இந்நாட்டில் வருடமொன்றுக்கு 300 தொடக்கம் 400 இற்கு இடைப்பட்ட யானைகள் கொல்லப்படுவதோடு, 6080 மனிதர்களும் உயிரிழக்கின்றனர். இது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினர் கவனம் செலுத்தியுள்ளனர்.

இந்த நிலையில் யானை_ மனிதன் மோதல் காரணமாக ஏற்படும் பாதிப்புக்கள் மற்றும் இழப்புக்கள் குறித்து விஷேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அந்த அடிப்படையில் யானை_ மனித மோதல் அதிகம் உள்ள கிராமங்கள் மற்றும் விளைநிலங்களைப் பாதுகாக்கவென தற்காலிக விவசாய மின்வேலி மற்றும் கிராம மின்வேலி என்ற இரண்டு முன்னோடித் திட்டங்களை ஆரம்பிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இது தொடர்பில் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும், ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தலைமையில் துறைசார் நிறுவனங்களின் தலைவர்களுடன் இடம்பெற்ற கூட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

விவசாய நிலங்களைப் பாதுகாக்கவென அமைக்கப்படும் மின்வேலிகளை அறுவடைக்குப் பின்னர் அகற்ற வேண்டும். அந்த மின்வேலியின் பராமரிப்பு மற்றும் பொறுப்பை கமநல அபிவிருத்தி திணைக்களத்திடம் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதேநேரம் யானை_ மனித மோதல்கள் அதிகம் உள்ள கிராமங்களைப் பாதுகாக்கும் வகையில் கிராமத்தைச் சுற்றி அமைக்கப்படவுள்ள மின்வேலிக்கான பொறுப்பு மற்றும் பராமரிப்பு பணிகளை அந்தந்தப் பிரதேச செயலகங்களுக்கு வழங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் ஊடாக யானை_ மனிதன் மோதல் குறைவடையவும் பாதிப்புக்களை தவிர்த்துக் கொள்ளவும் முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதுவே அந்தந்தப் பிரதேசங்களைச் சேர்ந்த மக்களின் விருப்பும் ஆகும்.

editor.tkn@lakehouse.lk

# பன்முகத்தன்மையில் ஐக்கியம் ஏற்படுத்துதல்; ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் பலதரப்பினருடனும் சந்திப்பு

மனிதநேயம் மிக்க ஆன்மிகத் தலைவரும், உலக சமாதானத் தூதுவருமான ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் (ஸ்ரீ குருதேவ்) பிரதமர் தினேஷ் குணவர்த்தனவின் அழைப்பையேற்று இலங்கைக்கு மூன்று நாள் விஜயம் மேற்கொண்டிருந்தார். தொண்டு சேவையை பேரலையாக உருவாக்கி, அதனூடாக உலகின் மிகப்பெரிய தொண்டு சேவை இயக்கமாக 'வாழும் கலை' அமைப்பை பரிணமிக்கச் செய்தவர் குருதேவ்.

இதன்மூலம் இலங்கையில் முன்னெடுக்கப்படும் பல திட்டங்களை நேரில் கண்டறிந்தார். அத்துடன் நாடு முழுவதும் தொழிற்கல்வி மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்கள் அடங்கலாக 12 அமைப்புக்களைத் தொடக்கி வைத்தார். இலங்கையில் மாத்திரமன்றி உலகெங்கிலும் இருந்து வந்த ஆயிரமாயிரம் அடியார்கள் அவருடன் இணைந்திருந்தார்கள்.







ஆறாவது தடவையாக இலங்கைக்கு விஜயம் செய்துள்ள அவரை கௌரவிக்கும் விதத்தில் முதல் நாள் கடித உறையொன்றும் வெளியிடப்பட்டது. சந்தோஷம் பரப்பி, பிரத்தியேகமான சுதர்ஷன கிரியைகள், தியானம், தர்க்கரீதியான ஞானம் ஊடாக மக்களை ஐக்கியப்படுத்தி, தனிநபர்களை வலுவூட்டி, சமூகங்களை நிலை மாற்றுவதற்காக அவர் பாடுபடுபவர்.

இலாப நோக்கமின்றி இயங்கும் அவரது ஸ்தாபனங்கள் பால்நிலை, இனம், தேசியம், மத எல்லைகளுக்கு அப்பாற்பட்டதாக மனித அடையாளத்தைக் கருதுகின்றன.

'வாழும் கலை' அமைப்பில் உலகெங்கிலும் 30,000 இற்கு மேற்பட்ட ஆசிரியர்களும், 180 நாடுகளைச் சேர்ந்த ஒரு மில்லியனுக்கு மேற்பட்ட தொண்டர்களும் உள்ளனர். அடியார்களின் எண்ணிக்கை 500 மில்லியனைத் தொடுகிறது.

திருகோணமலைக்கு விஜயம் செய்த குருதேவ், போரினால் பாதிக்கப்பட்டவர்களை சந்தித்து, வாழும் கலை நிறுவனம் நடத்தும் சிறுவர் இல்லத்தைச் சேர்ந்தவர்களுடன் உளப்பூர்வமாக அளவளாவினார். அவர் திருக்கோணேச்சரம் சென்று இறைவனைத் தரிசித்தார். குருதேவ் நுவரெலியா சீதையம்மன் ஆலயத்தின் கும்பாபிஷேகக் கிரியைகளிலும் பங்கேற்றார். தமது ஸ்தாபனத்தின் மூலம் முன்னெடுக்கப்படும் சமூக சேவைத் திட்டங்களின் முன்னேற்றம் பற்றி நம்பிக்கைப் பொறுப்பாளர்களுடன் கலந்துரையாடினார். அத்துடன், பெருமனவு முக்கியஸ்தர்களும், உலகெங்கிலும் இருந்து வந்த அடியார்களும் பங்கேற்ற 'எக்கமுத்துவ' என்ற விசேட நிகழ்ச்சியையும் அவர் நடத்தினார்.

பிரதமருடனான சந்திப்பில், பன்முகத்தன்மையில் ஐக்கியத்தை ஏற்படுத்துதல் பற்றியும், வாழ்வின் சூத்திரத்தில் மகிழ்ச்சியை உள்வாங்குவதன் மூலம் இலங்கையை ஐக்கியப்படுத்தல் பற்றியும் குருதேவ் கலந்துரையாடினார். இது தவிர, சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன, முன்னணி வர்த்தகப் பிரமுகர்கள், சிவில் சமூகத் தலைவர்கள் ஆகியோருடனும் அவர் கலந்துரையாடல் நடத்தினார்.

# திருப்பழுகாமம் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலய வருடாந்த உற்சவம்

மட்டக்களப்பு மாவட்டம் திருப்பழுகாமம் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 14 ஆம் திகதி திருக்கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது. ஒன்பது நாட்கள் திருவிழாக்கள் நடைபெற்று இன்று வியாழக்கிழமை தீர்த்தோற்சவம் நடைபெறுகிறது. அதனை அடுத்து அன்னதானம், திருப்பொன்னூஞ்சல் வைரவர் பூசை ஆகியவை நடைபெற்று உற்சவம் நிறைவுறும்.

2001ஆம் ஆண்டு சித்திரைமாதம் இந்த ஆலயம் தரைமட்டமாக இடிக்கப்பட்டது. 2006ஆம் ஆண்டு மீண்டும் தெய்வ அருள் கூடிவர புது ஆலயத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. இதுவரை அமைந்திருந்த ஆலயத்தை விடவும் பெரிதாகவும் அழகாகவும் ஆலய விதிகளுக்கு அமைய உள்ளூர், வெளியூர்வாழ் மக்களின் பொருளாதார உதவியுடன் மிகச்சிறப்பாக கட்டப்பட்டு 2018ஆம் ஆண்டு ஆவணி மாதம் பிரதம குருவான சிவஸ்ரீ.மு.சச்சிதானந்தமூர்த்தி குருக்கள் தலைமையில் கும்பாபிசேகம் நடைபெற்றது.



அக்காலத்தில் ஆலய அர்ச்சகராக சிறந்த முறையில் பணியாற்றியவர் சிவஸ்ரீ திரு. ஜனேந்திராசா குருக்கள் ஆவார். அன்று தொடக்கம் ஒவ்வொரு வருடமும் வைகாசி மாதம் கொடியேற்றம் திருவிழா என்பவை கிரியைகளுடன் ஆரம்பித்து பூரணைத்தீர்தோற்சவத்துடன் நிறைபெற்று வருகின்றது.

இவ்வருடம் ஆலய அர்ச்சகர் சிவஸ்ரீ சு.கு விநாயகமூர்த்திக் குருக்கள் தலைமையில் மஹா உற்சவம் சிறப்புறநடைபெறுகிறது.

நாராயணப்பிள்ளை நாகேந்திரன்...
ஓய்வுநிலை அதிபர், களுவாஞ்சிகுடி

# கல்முனை கல்வி வலய கோட்டங்களுக்கான தமிழ்மொழிதின போட்டிகள் 25 இல் ஆரம்பம்

கல்முனை கல்வி வலய கோட்டங்களுக்கான நடப்பாண்டின் தமிழ்மொழித் தினப் போட்டிகள் எதிர்வரும் சனிக்கிழமை(25) ஆரம்பமாகவுள்ளன. கல்முனை வலயத்திலுள்ள கல்முனை, கல்முனை தமிழ், சாய்ந்தமருது, காரைதீவு, நிந்தவூர் ஆகிய ஐந்து கோட்டங்களுக்குமான எழுத்தாக்கப் போட்டிகளுடன் பாவோதல் மற்றும் பேச்சு போட்டிகளும் இம்முறை ஒரே தினத்தில் இடம்பெறவுள்ளன.

கல்முனை கோட்டத்திற்கான போட்டிகள் மஃமூத் மகளிர் தேசிய பாடசாலையிலும், கல்முனை தமிழ் கோட்டத்திற்கான போட்டிகள் பற்றிமா தேசிய பாடசாலையிலும், சாய்ந்தமருது கோட்டத்திற்கான போட்டிகள் அல்ஜலால் மகாவித்தியாலயத்திலும், காரைதீவு கோட்டப் போட்டிகள் ஆர்.கே.எம்.பெண்கள் பாடசாலையிலும், நிந்தவூர் கோட்டத்திற்கான போட்டிகள் அல் அஷ்ரக் தேசிய பாடசாலைகளிலும் நடைபெறவுள்ளன.




மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரி, கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலை, சாய்ந்தமருது அல்ஜலால் வித்தியாலயம், காரைதீவு சண்முகா மகாவித்தியாலயம், நிந்தவூர் மதீனா மகாவித்தியாலயம் ஆகியவற்றில் தமிழ்மொழித் தினத்தின் திறந்த போட்டிகளுக்கான கோட்ட மட்டங்கள் 28 ஆம் திகதி முதல் 08 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எம்.எம். ஜெஸ்மி...
(பெரியநீலாவணை தினகரன் நிருபர்)

# முன்பள்ளி ஆசிரியர்களை பயிற்றுவிக்கும் திட்டம்

பயிற்சி பெறாத முன்பள்ளி ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதற்கான தேசிய வேலைத்திட்டத்தின் கீழ், ஊவா மாகாணத்திலுள்ள பயிற்சியளிக்கப்படாத முன்பள்ளி ஆசிரியர்களின் திறன் மற்றும் திறன்களின் அடிப்படையில் 150 தமிழ், முஸ்லிம், சிங்கள ஆசிரியர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன் தினம் (21) ஊவா முகாமைத்துவ மற்றும் அபிவிருத்தி பயிற்சி நிறுவனத்தில் ஊவா மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் காமினி மஹிந்தபால ஜோபியாஸ் தலைமையில் நடைபெற்றது.



கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவின் பணிப்புரைக்கு அமைய ஊவா மாகாண கல்வி அமைச்சின் மேற்பார்வையிலும், மாகாண ஆரம்ப குழந்தைப்பருவ அபிவிருத்தி அதிகார சபை மற்றும் தேசிய கல்வி நிறுவகத்தின் வழிகாட்டலின் கீழும் இந்த பயிற்சிப் பட்டறை நடைபெற்றது.



இந்நிகழ்வில் பெருந்தோட்ட மனித அபிவிருத்தி மன்றத்தின் பிராந்திய பணிப்பாளர், பாடநெறி ஒருங்கிணைப்பாளர்கள், வளவாளர்கள், ஊவா மாகாண கல்வி அமைச்சின் செயலாளர்கள் ஆகியோர் சான்றிதழ்களை வழங்கி வைத்தனர்.

அதேவேளை முன்பள்ளி ஆசிரியர்களால் தயாரிக்கப்பட்ட நடன நிகழ்ச்சியும் அன்றைய தினம் இடம்பெற்றது.

எம்.ஏ.எம்.ஹசனார்...
(ஊவா சுழற்சி நிருபர்)





# புதிய தேயிலை உற்சவம் '24

பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு மற்றும் இலங்கை தேயிலை சபை ஒன்றிணைந்து தேயிலை கைத்தொழிலின் மேம்பாட்டுக்காக ஆசீர்வாதத்தினை பிரார்த்திக்கும் வகையில் சிங்கள மற்றும் இந்து புத்தாண்டின் பின்னர் மேற்கொண்ட முதல் அறுவடையின் புதிய தேயிலையின் முதல் பகுதியினை பூஜை செய்யும்

## வருடாந்த உற்சவம்

## 2024 மே மாதம் 24

வரலாற்று சிறப்புமிக்க கொட்டபொல கெடபரு ராஜ மஹா விகாரையில் நடைபெறவுள்ளது.

### கௌரவ பங்கேற்பு

கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் கௌரவ அமைச்சர் **மஹிந்த அமரவீர அவர்கள்**

பெருந்தோட்டக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் கௌரவ **லொஹான் ரத்வத்தே அவர்கள்**

### நிகழ்ச்சி நிரல்

| | | |
|---|---|---|
| மு.ப. 9.00 | - | புதிய தேயிலை பேழைகளை கொண்ட அணிவகுப்பு கெடபரு ராஜ மஹா விகாரையின் நுழைவாயில் அருகாமையிலிருந்து ஆரம்பித்தல். |
| மு.ப. 10.00 | - | திரிலோகுரு புத்தபெருமானுக்கு புதிய தேயிலை பூஜை உடமளுவையில் மேற்கொள்ளல். |
| மு.ப. 11.00 | - | தேயிலை சபையின் அனைத்து பங்குதாரர்களுக்கும் ஆசீர்வாதம் வேண்டி மேற்கொள்ளப்படும் பூஜை. |

தேசிய மஹோற்சவத்திற்கு மேலதிகமாக தேயிலை பயிரிடும் அனைத்து பிரதேசங்களும் அடங்கும் வகையில் சிறிய தேயிலை காணி உரிமையாளர்கள், பச்சை தேயிலை இலை வியாபாரிகள் மற்றும் தேயிலை தொழிற்சாலை உரிமையாளர்களும் உள்ளடங்கும் வகையில் பிரதேசவாசிகளையும் இணைத்து பிரதேச ரீதியாக மத வழிபாட்டு நிகழ்ச்சிகளை அப்பிரதேசங்களின் பிரதான மத ஸ்தலங்களை முன்னிருத்தி நடாத்த அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### பிரதேச ரீதியாக மத வழிபாடுகள் நடைபெறும் இடங்கள்,

கம்பளை

| | |
|---|---|
| கண்டி வரலாற்று சிறப்புமிக்க ஸ்ரீ தளதா மாளிகை | மு.ப. 8.30 |
| கம்பளை அம்பரபொல ஜும்மா மஸ்ஜிட் பள்ளிவாசல் | பி.ப. 2.00 |

நுவரெலியா

| | |
|---|---|
| வரலாற்று சிறப்புமிக்க ஸ்வர்ணகிரி விகாரை, நுவரெலியா | மு.ப. 8.00 |
| தூய திருத்துவ தேவாலயம், நுவரெலியா | மு.ப. 10.00 |
| ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில், ஹாவாஎளிய | பி.ப. 3.00 |

இரத்தினபுரி

| | |
|---|---|
| வரலாற்று சிறப்புமிக்க சபரகமுவ சமன் தேவஸ்தானம் | மு.ப. 9.00 |

பதுரலிய

| | |
|---|---|
| அளுத்கம வரலாற்று சிறப்புமிக்க கந்தே விகாரை | மு.ப.9.30 |

பண்டாரவளை

| | |
|---|---|
| வரலாற்று சிறப்புமிக்க பதுளை முதியங்கண ராஜ மஹா விகாரை | மு.ப. 9.00 |
| விண்ணேற்பு தேவாலயம், பண்டாரவளை | பி.ப. 4.00 |
| ஜும்மா முஸ்லிம் பள்ளிவாசல், பண்டாரவளை | பி.ப. 4.00 |

இப் புதிய தேயிலை உற்சவத்தில்
**பங்கேற்குமாறு உங்கள் அனைவரையும் கௌரவத்துடன் வரவேற்கின்றோம் !**

தலைவர் மற்றும் ஏற்பாட்டுச் சபை

**இலங்கை தேயிலை சபை**

# கிழக்கின் குரல்



## வெசாக்; இறைச்சி கடைகளுக்கு பூட்டு

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

வெசாக் தினத்தையிட்டு மட்டக்களப்பின் காத்தான்குடி நகர சபை பிரிவிலுள்ள அனைத்து இறைச்சி கடைகளை மூன்று நாட்களுக்கு மூடுவதற்கு அந்நகர சபையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இந்நிலையில் நேற்று புதன் கிழமை தொடக்கம் இறைச்சி கடைகளை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பாக காத்தான்குடியிலுள்ள அனைத்து இறைச்சி கடை உரிமையாளர்களுக்கும் காத்தான்குடி நகர சபையினர் எழுத்து மூலம் அறிவித்துள்ளனர்.

22ஆம், 23ஆம், 24ஆம் திகதிகளில் காத்தான்குடியிலுள்ள அனைத்து இறைச்சி கடைகளும் மூடப்படுவதுடன், இறைச்சி விற்பனையும் இடம்பெறாதெனவும் பொதுமக்களுக்கு காத்தான்குடி நகர சபையினர் அறிவித்துள்ளனர்.

## கிழக்கு பிராந்திய போக்குவரத்து சபையின் ஏற்பாட்டில் தாகசாந்தி

துறைநீலாவணை நிருபர்



வெசாக் தினத்தையிட்டு அம்பாறையின் கல்முனை பிரதேசத்தில் இயங்கி வரும் கிழக்கு பிராந்திய போக்குவரத்துச் சபையினர் தாக சாந்தி நிலையத்தை நேற்று புதன்கிழமை ஏற்பாடு செய்து நடத்தினர்.

கல்முனை அலுவலகத்துக்கு முன்பாக தாக சாந்தி நிலையம் ஏற்பாடு செய்யப்பட்டு பயணிகளுக்கு தாக சாந்தி பானம் வழங்கப்பட்டது.

அனைவரின் பங்களிப்புடனும் கல்முனையில் நடைபெற்ற இந்நிகழ்வில் இலங்கை போக்குவரத்துச் சபையின் கிழக்கு பிராந்திய முகாமையாளர் விஜித தர்மசேன, கிழக்கு பிராந்திய நிதி முகாமையாளர் ரத்னாயக்க, கிழக்கு பிராந்திய செயலாற்று முகாமையாளர் ஏ.எம்.அஸீஸ் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## கிழக்கு மாகாணத்தில் வரலாற்றுத் தொன்மைமிக்க கோராவெளி கண்ணகியம்மன் திருச்சடங்கு இன்று

### ஆலய சூழலை வெள்ளம் சூழ்ந்துள்ள போதிலும் திட்டமிட்டபடி சடங்கு

இலங்கை முழுவதும் கண்ணகி அம்மன் ஆலயங்களில் திருவிழாக்களும் சடங்குகளும் களைகட்டிக் கொண்டிருக்கும் நிலையில், கிழக்கில் வரலாற்றுச் சிறப்பும் மிகத் தொன்மையும் வாய்ந்த கோராவெளி கண்ணகியம்மன் ஆலயத்தின் சடங்கை சிறப்பாக நடத்துவதில் வெள்ளம் தடையாக உள்ளது.

வாழைச்சேனை மட்டக்களப்பு வீதியில் கிரானுக்கு மேற்கே மிகவும் தொலைவில் காட்டுப்பகுதியில் அமைந்துள்ள கோராவெளி கண்ணகியம்மன் ஆலயம் எக்காலத்தில் தோன்றியதென்ற வரலாற்றை இதுவரை அறிய முடியாதுள்ளது. அக்காலத்தில் கொடிய மிருகங்கள் வாழும் அடர்ந்த காட்டுக்குள் இந்த ஆலயம் அமைந்திருந்தது. தற்போது அப்பகுதியில் மக்கள் குடியேற்றம் படிப்படியாக இடம்பெறுகின்றது.



இங்குள்ள முதியவர்கள் கூறுகின்ற தகவல்களின் படி, இந்த ஆலயம் 300 வருட காலத்துக்கும் மேற்பட்ட வரலாறு கொண்டதென்று அறிய முடிகின்றது.

கோறளைப்பற்று தெற்கு கிரான் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கோராவெளி கண்ணகி அம்மன் ஆலய திருச்சடங்கு நேற்று (22.05.2024) புதன்கிழமை ஆரம்பமாகி இன்று வியாழக்கிழமை திருக்குளிர்த்தியுடன் நிறைவுறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்நிலையில் கடந்த சில நாட்களாக கிழக்கு மாகாணம் உட்பட நாட்டின் பல்வேறு பகுதிகளில் பெய்து வரும் கடும் மழையின் காரணமாக பெரியகோராவெளி கண்ணகி அம்மன் ஆலயம் அமைந்துள்ள பகுதி முழுவதும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

கடந்த வாரம் கோறளைப்பற்று தெற்கு கிரான் பிரதேச செயலாளர் கா.சித்திரவேல் தலைமையில் கண்ணகி அம்மன் திருக்குளிர்த்தி சடங்குக்கான முன்னாயத்தப் பணிகள் தொடங்கப்பட்டு ஆலய முன்றலில் சிரமதானப் பணிகளும் பந்தல் ஆயத்த வேலைகளும் நடைபெற்று வந்தன. அதனைத் தொடர்ந்து கடைகளை ஏலத்தில் விடுவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் குறித்த ஆலயம் அமைந்துள்ள பகுதி வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.



ஒவ்வொரு வருடமும் வைகாசி மாத பௌர்ணமியையொட்டி நேர்ப்புடன் ஆரம்பமாகி திருக்குளிர்த்தி பாடுதலுடன் நிறைவுபெறும் பெரிய கோராவெளி கண்ணகி அம்மனின் திருக்குளிர்த்தி சடங்கில் ஆலய மரபு நியதிப்படி உரித்துள்ள கிராமங்களுக்கான பந்தல்கள் அமைக்கப்பட்டு வெகு விமரிசையாக திருச்சடங்கு நடைபெறுவதுண்டு. கிழக்கு மாகாணத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தந்து கண்ணகி அம்மனை வழிபடுவது வழக்கம்.

கோராவெளி பகுதியில் வெள்ளம் சூழ்ந்துள்ளமை பக்தர்களை கவலை கொள்ளச் செய்திருந்தாலும், கண்ணகியம்மன் திருச்சடங்கு உரிய நாளில் தடைகளின்றி நடைபெறுமென்று நிர்வாகிகள் நம்பிக்கை தெரிவித்தனர்.

ஏ. ஸ்ரீதர்
(வாழைச்சேனை தினகரன் நிருபர்)

மட்டு. போதனா வைத்தியசாலையில்

## ஒரே சூலில் 4 சிசுக்கள் பிரசவித்துள்ள பெண்

மட்டக்களப்பு குறூப், புதிய காத்தான்குடி தினகரன், கல்லடி குறூப் நிருபர்கள்



மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் தாய் ஒருவர் ஒரே சூலில் நான்கு குழந்தைகளை பிரசவித்துள்ளார். மட்டக்களப்பு, ஆரையம்பதி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட புதுக்குடியிருப்பு கிராமத்தில் வசிக்கும் 25 வயதுடைய கிருஷ்ணவேணி என்பவரே இயற்கை கருத்தரிப்பின் மூலம் எந்தவொரு செயற்கை நடவடிக்கையும் இல்லாமல் ஒரே சூழில் 3 பெண் குழந்தைகளையும் ஒரு ஆண் குழந்தையையும் பிரசவித்துள்ளார்.

கடந்த மாதம் 5ஆம் திகதி இத்தாய் 4 குழந்தைகளை பிரசவித்துள்ளார். இந்நிலையில் இக்குழந்தைகளை மிகவும் பாதுகாப்புடனும் ஆரோக்கியத்துடனும் வளர்த்து 48 நாட்களான நிலையில் குழந்தைகள் ஊடகங்களுக்கு காண்பிக்கப்பட்டன.

இக்குழந்தைகள் ஆரோக்கியத்துடனும் போதியளவான நிறையுடனும் இருப்பதாக, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை பணிப்பாளர், வைத்திய கலாநிதி கலாரஞ்சனி தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பான ஊடகவியலாளர் சந்திப்பு, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் நேற்று புதன்கிழமை நடைபெற்றதுடன், இதில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் மகப்பேற்று வைத்திய நிபுணர், வைத்தியர் சரவணன் உட்பட குழந்தை நல வைத்திய நிபுணர், வைத்தியர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது தெரிவித்த வைத்திய கலாநிதி கலாரஞ்சனி, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை வரலாற்றில் இயற்கை முறையில் ஒரே சூழில் 4 குழந்தைகள் பிரசவிக்கப்பட்ட முதலாவது நிகழ்வு இதுவாகுமென்றார்.

இத்தாயும் அவரது கணவரும் வெளிநாட்டில் இருந்த போது, அங்கு கருத்தரித்த நிலையில் இலங்கை வந்து, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு வந்த போது இத்தாய் மீது கூடிய கவனம் செலுத்தி பிரசவம் பார்க்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஈரான் ஜனாதிபதி ரைசி மறைவு; மட்டக்களப்பு செயலகத்தில் துக்கதினம்

ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசியின் மறைவையொட்டி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (21) துக்க தினமாக இலங்கை அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தில் தேசிய கொடி அரைக் கம்பத்தில் பறக்க விடப்பட்டுள்ளது. அனைத்து அரசாங்க அலுவலகங்களிலும் தேசிய கொடியை அரைக் கம்பத்தில் பறக்க விடுமாறு பொது நிர்வாக அமைச்சு அறிவித்தது.



இதனை அடுத்து மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் ஜஸ்டினா முரளிதரனின் ஆலோசனைக்கமைய, மட்டக்களப்பு மாவட்டச் செயலகம் உட்பட அனைத்து அரச அலுவலகங்களிலும் அரைக்கம்பத்தில் தேசிய கொடி பறக்க விடப்பட்டுள்ளது.

அம்பாறையில்

## பாடசாலைகளுக்கு முதலுதவி உபகரணங்கள் வழங்கல்

மாளிகைக்காடு குறூப் நிருபர்



அம்பாறை மாவட்டத்தில் மழை வெள்ளத்தால் மிக மோசமாக பாதிக்கப்பட்ட பாடசாலைகளுக்கு முதலுதவி உபகரணங்களை இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் அம்பாறை கிளையினர் வழங்கி வைத்துள்ளனர்.

உகண பிரதேசத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இதற்கான நிகழ்வு நடைபெற்றது.

அண்மையில் ஏற்பட்ட மழை வெள்ளத்தால் மிக மோசமாக பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு உதவும் வகையில் இந்த முதலுதவி உபகரணங்களை இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் அம்பாறை கிளையினர் வழங்கி வைத்துள்ளனர்.

## மூதூர் வீட்டுத்திட்ட பணி; பிரதேச செயலாளர் பார்வை

தோப்பூர் தினகரன் நிருபர்

மூதூர் பிரதேச செயலாளர் பிரிவில் பயனாளிகளுக்காக நிர்மாணிக்கப்பட்டு வரும் வீட்டுத்திட்டத்தை அப்பிரதேச செயலாளர் எம்.பி.எம். முபாறக், திட்டமிடல் பணிப்பாளர் பி.அறபாத் ஆகியோர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை சென்று பார்வையிட்டுள்ளனர்.

இவ்வீட்டுத்திட்ட நிர்மாணப் பணியின் முன்னேற்றம் தொடர்பாக அவர்கள் ஆராய்ந்துள்ளனர். அத்துடன் இது தொடர்பாக பயனாளிகளுக்கும் அவர்கள் ஆலோசனை வழங்கியுள்ளனர்.

## 'இலங்கையிலும் அதற்கு அப்பாலும் வரலாறு கண்ட நிகழ்வுகள்' நூல் அறிமுக விழா



அன்புவழிபுரம் தினகரன் நிருபர்

வரலாற்று ஆய்வாளர் தோமஸ் ஜெயேந்திரன் எழுதிய 'இலங்கையிலும் அதற்கு அப்பாலும் வரலாறு கண்ட நிகழ்வுகள்' எனும் நூல் அறிமுக விழா திருகோணமலை நகராட்சிமன்ற பொது நூலகத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்றது. திருகோணமலை நகராட்சிமன்ற பொது நூலகத்தின் ஏற்பாட்டிலும் நூலக உதவியாளர் எழுத்தாளருமான அ.அச்சுதனின் தலைமையிலும் இந்நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக திருகோணமலை நகராட்சிமன்ற செயலாளர் வெ. இராஜசேகரும், சிறப்பு விருந்தினராக திருகோணமலை நகர சபை பொது நூலகத்தின் பிரதம நூலகர் ந.யோகேஸ்வரனும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

வரவேற்புரையை நூலகர் மு.லெ. றிம்சானா நிகழ்த்தினார். நிகழ்ச்சி தொகுப்பை தாஹிரா சித்திக் வழங்கினார். சிறப்புரையை கவிஞர் ச.திருச்செந்தூரன் வழங்கினார். நூலாசிரியர் ஏற்புரையை வழங்கினார்.

## சமூக சேவைகளை பாராட்டி கௌரவிப்பு



பெரியநீலாவணை விசேட நிருபர்

கல்முனை பிராந்தியத்திலும் அப்பிராந்தியத்துக்கு வெளியிலும் முன்னாள் உயர் கல்வி பிரதி அமைச்சர் மர்ஹூம் மயோன் முஸ்தபாவின் புதல்வர் றிஸ்லி முஸ்தபா மேற்கொண்டு வரும் சமூக சேவைகளை பாராட்டி சிலோன் ஜேர்னலிஸ்ட் போரம் அண்மையில் நேரடியாகச் சென்று சாய்ந்தமருதில் அவரை கௌரவித்துள்ளது.

சிலோன் ஜேர்னலிஸ்ட் போரத்தின் தலைவர் எம்.எஸ்.எம்.ஜஃபர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் றிஸ்லி முஸ்தபா, பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார். கல்முனையில் பல்வேறு அபிவிருத்தி பணிகளை றிஸ்லி முஸ்தபா மேற்கொண்டு வருகின்றார். கல்வி, விளையாட்டு, பொருளாதாரம், கலை, கலாசாரமாகிய பல்வேறு துறைகளிலும் வறுமைக் கோட்டுக்கு கீழுள்ள மக்களுக்கு பல்வேறு பங்களிப்புகளை அவர் தொடர்ந்து வழங்கி வருகிறார்.

அவரது சமூக சேவைகளை ஊக்குவிக்கும் பொருட்டும் எதிர்காலத்தில் இன, மத, மொழிகளுக்கு அப்பால் சமூக நல்லிணக்கத்துடன் சேவையாற்றவும் இளைஞர் சமூகத்தை வலுவுள்ள சமூகமாக மாற்றவும் றிஸ்லி முஸ்தபா போன்ற இளம் தலைவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள் எனும் உன்னத நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு சிலோன் ஜேனலிஸ்ட் போரம் றிஸ்லி முஸ்தபாவை கௌரவித்துள்ளது.

## அ.இ.ம.கா.வின் பிரதி தேசிய அமைப்பாளர் தாஹிருக்கு விருது

திராய்க்கேணி தினகரன் நிருபர்



நிந்தவூர் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் பிரதி தேசிய அமைப்பாளருமான எம்.ஏ.எம். தாஹிர், 'சமூக சேவையில் சிறந்த தலைமைத்துவம்' எனும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

2023ஆம் ஆண்டுக்கான வர்த்தக உலக சர்வதேச விருது விழா அண்மையில் கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் நடைபெற்றது. இதன்போதே அவர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார். மிக நீண்டகாலமாக சமூக சேவைகளில் ஈடுபட்டு வரும் தாஹிரின் அர்ப்பணிப்பை பாராட்டி இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

நிந்தவூர் பிரதேச சபையின் தவிசாளராக மூன்று தடவைகள் அவர் பதவி வகித்து சமூகப் பணியாற்றியுள்ளார்.

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### பாதுகாப்பு அமைச்சு

### தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் (NBRO)

பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள வேலைகளுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் (NBRO) திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.

| ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்தத்தின் பெயர் | மதிப்பீட்டுக் கிரயம் |
|---|---|---|
| NBRO/GED/2022/30/27602B | கண்டி, தேசிய அடிப்படை கல்வி நிறுவனத்தின் (NIFS) சேதமடைந்த கேட்போர் கூடத்தின் சீர்திருத்தப் பணிகள் | இல. ரூபா 12.33 மில்லியன் |

- விலைமனு ஆவணங்களை வழங்குதல்/ கொள்வனவு செய்யும் காலம் : 2024-05-27ஆம் திகதி முதல் 2024-06-13ஆம் திகதி வரை
- விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் : 2024-05-31ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு
- விலைக்கோரலுக்கு முன்னரான தள விஜயம் : 2024-05-31ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு
- விலைமனுக்கள் முடிவுறுத்தப்படுதல் / திறக்கப்படுதல் : 2024-06-14ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு

ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக விபரங்களை www.nbro.gov.lk எனும் இணையதளத்திற்குப் பிரவேசித்துப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம்,**
**இல. 99/1, ஜாவத்த வீதி, கொழும்பு - 05.**

## இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு அரசாங்கம்

### போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

### வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## 1,500 கி.மீ. வீதிகள் புனரமைப்புத் திட்டத்திற்கான விலைக்கோரலுக்கான அழைப்பு (IFB)

| இல. | ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்தப் பெயர் |
|---|---|---|
| 1. | RDA/SP/1500KM/WP/210 | நாவலமுல்ல பாசல் மாவத்தையின் புனரமைப்பு வேலைகள் |
| 2. | RDA/SP/1500KM/WP/211 | வெலிகன்ன லஹிருகம வீதியின் புனரமைப்பு வேலைகள் |
| 3. | RDA/SP/1500KM/WP/212 | உதுரு அரவ்வல மாளிகாவத்தை வீதியின் புனரமைப்பு வேலைகள் |
| 4. | RDA/SP/1500KM/WP/213 | ஹொன்னன்தர தெற்கு கத்சிறி உயன மாவத்தையின் புனரமைப்பு வேலைகள் |
| 5. | RDA/SP/1500KM/WP/214 | மொரத வீதி நிவுன்கம இறுதி வரையில் புனரமைத்தல் |
| 6. | RDA/SP/1500KM/WP/DL/140 | கடுவளை மற்றும் ஹோமாகம தேர்தல் தொகுதிகளிலுள்ள வீதிகளுக்கு பிரைம் கோட் மற்றும் அஸ்போல்ட் வெயாரிங் கோர்ஸ் பரப்புதல் மற்றும் கனப்படுத்துதல் |

மேற்கூறப்பட்ட வேலைகளுக்காக தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2024 மே 22ஆம் திகதி முதல் 2024 ஜூன் 11ஆம் திகதி வரையில் அபிவிருத்தி அதிகார சபையின் www.rda.gov.lk மற்றும் mohsl.gov.lk எனும் இணையதளப் பக்கத்தைப் பார்வையிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர், பிராந்திய பெறுகைக் குழு,**
**மாகாணப் பணிப்பாளர் அலுவலகம் (மேல் மாகாணம்)**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

Daily News Classifieds, the Housewives' companion

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசாங்கம்

### பெருந்தெருக்கள் அமைச்சு

### வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு

## தேசிய போட்டிரீதியில் விலைக்கோரல்

## களுத்துறை மாவட்டத்தில் 1500 கி.மீ. திட்டத்தின் கீழ் உள்ளடங்கும் கிராமிய வீதிகளை மேம்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்திற்கு பொருட்கள், இயந்திராதிகள் மற்றும் தொழிலாளர்களை வழங்குதல்

1. களுத்துறை மாவட்டத்தில் 1500 கி.மீ. திட்டத்தின் கீழ் உள்ளடங்கும் கிராமிய வீதிகளை மேம்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்திற்கு பொருட்கள், இயந்திராதிகள் மற்றும் தொழிலாளர்களை வழங்குவதற்காக முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை வீதி அபிவிருத்தி அதிகார சபையின் (RDA) சார்பாக பிராந்திய பெறுகைக் குழு விசேடத் திட்டப் பிரிவு தலைவர் அழைக்கின்றார்.

**பொருட்கள் வழங்குதல் - 01 (அகலவத்தை, ஹொரண மற்றும் களுத்துறை நி.பொ. பிரிவுகளுக்கு)**

| # | விபரங்கள் | பிரதேசம் மற்றும் ஒப்பந்த இல. | பொறியியலாளர் மதிப்பீடு (தற்செயலான செலவுகள் இன்றி)(ரூபா மில்.) | மொத்த அளவு (m) | விலைக் கோரல் பிணை முறி (ரூபா) | விலைமனுக்களின் செல்லுபடி நாட்கள் | மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|---|---|
| 1.1 | தரம் 25 (20) கொங்கிறீட் வழங்குதல் (ஏற்றுதல், போக்குவரத்து செய்தல் மற்றும் இறக்குதல் உட்பட) | அகலவத்த நி.பொ. பிரிவு ஒப்பந்த இல. RDA/PRJT/WP/TB/2024-K-23 | 2.2 | 65 Cu.m | 25,300.00 | 63 | 1,200.00 |
| 1.2 | Aggregate Base Course பொருட்கள் வழங்குதல் (ஏற்றுதல், போக்குவரத்து செய்தல் மற்றும் இறக்குதல் உட்பட) | களுத்துறை நி.பொ. பிரிவு ஒப்பந்த இல. RDA/PRJT/WP/TB/2024-K-24 | 5.72 | 1300 Cu.m | 65,780.00 | 77 | 1,200.00 |
| 1.3 | | அகலவத்த நி.பொ. பிரிவு மற்றும் ஹொரன நி.பொ. பிரிவு ஒப்பந்த இல. RDA/PRJT/ WP/TB/2024-K-32 | 9.7 | 2200 Cu.m | 111,550.00 | 77 | 3,500.00 |
| 1.4 | தரம் 30 (19 மி.மீ.) கொங்கிறீட் வழங்குதல் (ஏற்றுதல், போக்குவரத்து செய்தல் மற்றும் இறக்குதல் உட்பட) | களுத்துறை நி.பொ. பிரிவு ஒப்பந்த இல. RDA/PRJT/ WP/TB/2024-K-25 | 7 | 160 Cu.m | 80,500.00 | 77 | 1,200.00 |
| 1.5 | | அகலவத்த நி.பொ. பிரிவு ஒப்பந்த இல. RDA/PRJT/ WP/TB/2024-K-31-A | 9.5 | 275 Cu.m | 109,250.00 | 77 | 1,200.00 |
| 1.6 | | அகலவத்த நி.பொ. பிரிவு ஒப்பந்த இல. RDA/PRJT/ WP/TB/2024-K-31-B | 24 | 700 Cu.m | 276,000.00 | 77 | 4,200.00 |
| 1.7 | பிட்டுமன் எமல்ஷன் வழங்குதல் மற்றும் போக்குவரத்து செய்தல் (CSS 1 வேலைத் தளத்திற்கு (200 L பீப்பாய்களாக)) | அகலவத்த நி.பொ. பிரிவு மற்றும் ஹொரன நி.பொ. பிரிவு ஒப்பந்த இல. RDA/PRJT/ WP/TB/2024-K-28-A | 1.8 | 59 Drums | 20,700.00 | 49 | N/A |
| 1.8 | பிட்டுமன் எமல்ஷன் வழங்குதல் மற்றும் போக்குவரத்து செய்தல் (CSS 1 வேலைத் தளத்திற்கு (200 L பீப்பாய்களாக)) | அகலவத்த நி.பொ. பிரிவு மற்றும் ஹொரன நி.பொ. பிரிவு ஒப்பந்த இல. RDA/PRJT/ WP/TB/2024-K-28-B | 1.2 | 39 Drums | 13,800.00 | 49 | N/A |
| 1.9 | வேலைத் தளத்திற்கு மண் வரம்புப் பொருட்களை வழங்குதல் (ஏற்றுதல், போக்குவரத்து செய்தல் மற்றும் இறக்குதல் உட்பட) | அகலவத்த நி.பொ. பிரிவு மற்றும் ஹொரன நி.பொ. பிரிவு ஒப்பந்த இல. RDA/PRJT/ WP/TB/2024-K-35 | 4.73 | 200 Cu.m | 54,395.00 | 63 | 1,200.00 |
| 1.10 | 220x110x80mm அளவிலான சீமெந்து வர்ணத்தில் (தரம் 25) கொங்கிறீட் நடைபாதை சீமெந்து புளொக்குகளை வழங்குதல் (ஏற்றுதல், போக்குவரத்து செய்தல் மற்றும் இறக்குதல் உட்பட) | அகலவத்த நி.பொ. பிரிவு ஒப்பந்த இல. RDA/PRJT/ WP/ TB/2024-K-36 | 5.22 | 70,000 Nos | 60,030.00 | 77 | 1,200.00 |

**இயந்திராதிகள் வழங்குதல் - 02 (அகலவத்தை, ஹொரண மற்றும் களுத்துறை நி.பொ. பிரிவுகளுக்கு)**

| # | விபரங்கள் | பிரதேசம் மற்றும் ஒப்பந்த இல. | பொறியியலாளர் மதிப்பீடு (தற்செயலான செலவுகள் இன்றி) (ரூபா மில்.) | மொத்த அளவு (m) | விலைக்கோரல் பிணை முறி (ரூபா) | விலைமனுக்களின் செல்லுபடி நாட்கள் | மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|---|---|
| 2.1 | 8 - 10 தொன் Vibrating Roller வாடகைக்கமர்த்துதல் (இயக்குநர் சகிதம், wet lease அடிப்படையில்) | களுத்துறை நி.பொ. பிரிவு ஒப்பந்த இல. RDA/PRJT /WP/TB/2024-K-22 | 3.3 | 550 hrs | 37,950.00 | 63 | 1,200.00 |
| 2.2 | | ஹொரன நி.பொ. பிரிவு ஒப்பந்த இல. RDA/PRJT /WP/TB/2024-K-29 | 3.3 | 550 hrs | 37,950.00 | 63 | 1,200.00 |
| 2.3 | 1.0 கியூப் டிப்பர் டிரக் ஒன்றை வாடகைக்கமர்த்துதல் (இயக்குநர் சகிதம், wet lease அடிப்படையில்) | அகலவத்த நி.பொ. பிரிவு மற்றும் ஹொரன நி.பொ. பிரிவு ஒப்பந்த இல. RDA/PRJT /WP/TB/2024-K-26 | 2.3 | 2000 hrs | 26,450.00 | 63 | 1,200.00 |
| 2.4 | | களுத்துறை நி.பொ. பிரிவு ஒப்பந்த இல. RDA/PRJT /WP/TB/2024-K-21 | 1.7 | 1500 hrs | 19,550.00 | 49 | N/A |
| 2.5 | WD பெக்கோ லோடர் JCB ஒன்றை வாடகைக்கமர்த்துதல் (இயக்குநர் சகிதம், wet lease அடிப்படையில்) | அகலவத்த நி.பொ. பிரிவு மற்றும் ஹொரன நி.பொ. பிரிவு ஒப்பந்த இல. RDA/PRJT /WP/TB/2024-K-27 | 14 | 2500 hrs | 61,000.00 | 77 | 4,200.00 |
| 2.6 | | களுத்துறை நி.பொ. பிரிவு ஒப்பந்த இல. RDA/PRJT /WP/TB/2024-K-33 | 6.3 | 1100 hrs | 72,450.00 | 77 | 1,200.00 |
| 2.7 | 4 - 5 தொன் Vibrating Roller வாடகைக்கமர்த்துதல் (இயக்குநர் சகிதம், wet lease அடிப்படையில்) | அகலவத்த நி.பொ. பிரிவு மற்றும் ஹொரன நி.பொ. பிரிவு ஒப்பந்த இல. RDA/PRJT /WP/TB/2024-K-39 | 1.96 | 520 hrs | 22,540.00 | 49 | N/A |

**தொழிலாளர்கள் மற்றும் சிறிய இயந்திராதிகளை வழங்குதல் - 03 (அகலவத்தை, ஹொரண மற்றும் களுத்துறை நி.பொ. பிரிவுகளுக்கு) ஒப்பந்த இலக்கம்: RDA/PRJTIWP/TB/2024-K-34**

| | விபரங்கள் | அலகு | எண்ணிக்கை | விலைக்கோரல் பிணை முறி (ரூபா) | விலைமனுக்களின் செல்லுபடி நாட்கள் | மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|---|
| 3.1 | தேர்ச்சிபெற்ற தொழிலாளர்களை வழங்குதல் | Day | 570 | 155,250.00 | 77 | 4,200.00 |
| 3.2 | தேர்ச்சியற்ற தொழிலாளர்களை வழங்குதல் | Day | 2210 | | | |
| 3.3 | T Ten Roller with Fuel | Ma Hrs. | 430 | | | |
| 3.4 | Rammer with Fuel | Ma Hrs. | 160 | | | |
| 3.5 | Asphalt cutter with cutting blade | Hrs. | 110 | | | |
| 3.6 | Air Compressor (250 CFM) | Hrs. | 160 | | | |
| 3.7 | Hand beld breaker with operator | Day | 20 | | | |

2. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும்.

3. ஆர்வமுள்ள வழங்குநர்கள் மேலதிக தகவல்களை பத்தரமுல்ல, 'செத்சிறிபாய'1, ஆம் மாடி, வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் விசேட செயற்றிட்டப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: : 011-2876600, தொலைநகல்: 011-2877226).

ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தின் செல்லுபடியாகும் பண வைப்புச்சீட்டை (பண வைப்புச்சீட்டின் ஒப்பந்த இலக்கம் மற்றும் ஒப்பந்ததாரரின் பெயர் என்பன குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்) 2024-05-27ஆம் திகதி முதல் 2024-06-11ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரையான காலத்தில் வீதி அபிவிருத்தி அதிகாரசபை விசேட செயற்றிட்டப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் நாயகத்திற்கு மின்னஞ்சலின் ஊடாக அனுப்பி மற்றும் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றை மின்னஞ்சலின் ஊடாக சமர்ப்பிப்பதன் பேரில் ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

**மின்னஞ்சல் முகவரி: projectdirectorwp@gmail.com**
**மேற்கூறிய அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தை பின்வரும் வங்கிக் கணக்கிற்கு ரொக்கப் பணமாக வைப்புச் செய்தல் வேண்டும்.**
**கணக்கின் பெயர் : Project Director (WP) - RDA**
**கணக்கிலக்கம் : 70532635**
**வங்கியின் பெயர் : இலங்கை வங்கி - பத்தரமுல்ல**

விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும்போது செல்லுபடியாகும் பண வைப்புப் பற்றுச்சீட்டின் மூலப்பிரதி சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதுடன் அது பரீட்சித்துப் பார்க்கப்படும். செல்லுபடியாகும் பண வைப்புப் பற்றுச்சீட்டின் மூலப்பிரதி சமர்ப்பிக்கப்படாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

4. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2024-06-04ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு பத்தரமுல்ல, செத்சிறிபாய, வீதி அபிவிருத்தி அதிகார சபை, 1ஆம் மாடி, விசேட செயற்றிட்ட அலுவலகத்தில் இடம்பெறும். (தொலைபேசி: 011-2877226)

5. பண வைப்புப் பற்றுச்சீட்டின் மூலப்பிரதியுடனான விலைமனுக்களை நகல்பிரதியுடன் தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, பிரதி பணிப்பாளர் நாயகம், விசேட செயற்றிட்டப் பிரிவு, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, 1ஆம் மாடி, 'செத்சிறிபாய', பத்தரமுல்ல எனும் முகவரிக்கு 2024-06-11ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் நேரடியாக ஒப்படைத்தல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். பத்தரமுல்ல, 'செத்சிறிபாய', 1ஆம் மாடி, வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் விசேட செயற்றிட்டப் பிரிவில் சமுகம்தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.

6. கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''களுத்துறை மாவட்டத்தில் 1500 கி.மீ. திட்டத்தின் கீழ் உள்ளடங்கும் கிராமிய வீதிகளை மேம்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்திற்கு பொருட்கள்-01, இயந்திராதிகள்-02, மற்றும் தொழிலாளர்கள்-03 வழங்குதல் (தயவு செய்து ஒப்பந்த இலக்கத்தைக் குறிப்பிடவும்)'' எனத் தயவு செய்து குறிப்பிடவும்.

7. விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் நாள் முதல் மேற்படி அட்டவணையில் தரப்பட்டுள்ள நாட்களுக்கு செல்லுபடியாதல் வேண்டும் என்பதுடன் மேற்கூறிய அட்டவணையின் பிரகாரம் மீளளிக்கப்படாத கட்டணமும் பிரயோகிக்கப்படும். ஒவ்வொரு விலைமனுவுடனும் மேலதிகமாக 28 நாட்களுக்குச் செல்லுபடியாகும் வகையில் மேற்கூறிய அட்டவணையில் குறிப்பிடப்பட்ட தொகைக்கான விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைக்கோரல் பிணை முறி இணைக்கப்படாத எந்தவொரு விலைமனுவும் நிராகரிக்கப்படும்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**விசேட செயற்றிட்டப் பிரிவு,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை.**

## உடுபத்தாவ பிரதேச சபை

### 2025 வரவு செலவுத்திட்ட ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளல்

உடுபத்தாவ பிரதேச சபை 2025ம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தை தயாரிப்பதற்காக மூலதன செலவு மதிப்பீட்டிற்கு மற்றும் அபிவிருத்தி திட்டமிடலுக்கு உட்படுவதற்காக உடுபத்தாவ பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தின் பொதுமக்களின் அபிவிருத்தி ஆலோசனைகள் கோரப்படுகின்றன.

உங்களால் சமர்ப்பிக்கப்படும் ஆலோசனைகள் எழுத்து மூலம் 2024 ஜுன் 30ம் திகதிக்கு முன்பு "செயலாளர், உடுபத்தாவ பிரதேச சபை, உடுப்பத்தாவ" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் மின்னஞ்சல் மூலம் அல்லது அலுவலகத்திற்கு வருகை தந்து ஒப்படைக்குமாறு அறிவிக்கிறேன்.

**செயலாளர்,**
**உடுபத்தாவ பிரதேச சபை,**
**தொ.பே.இலக்கம் : 037 - 2286577/ 037 - 4947095**
**மின்னஞ்சல் முகவரி : udubps@gmail.com**

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil
your Future Dreams

The Housewives' companion
Classifieds on
Daily News

# பெறுகை அறிவித்தல்

## பண்டாரவளை மாநகர சபைக்கு சொந்தமான சொத்துக்களை குத்தகைக்கு விடல்

பண்டாரவளை மாநகர சபைக்கு சொந்தமான கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் சொத்துக்களை முப்பது (30) வருடத்திற்கு குத்தகைக்கு விடுவதற்கு குத்தகைக்காரர்களை தேர்ந்தெடுப்பதற்காக 2024.06.19 ஆம் திகதி மு.ப.10.00 வரை பொறியிடப்பட்ட கேள்விகள், 18 வயதிற்கு மேற்பட்ட இலங்கைப் பிரஜைகளிடமிருந்து இத்தால் கோரப்படுகின்றன.

02. பெறுகை கேள்வி மாதிரிப் பத்திரங்களை 2024.05.21 முதல் 2024.06.18 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப.8.30 முதல் பி.ப.3.00 வரை பண்டாரவளை மாநகர சபையில் அட்டவணையில் குறிப்பிடப்படும் மீளளிக்கப்படாத கேள்வி மாதிரிப் பத்திர கட்டணத்தை செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். கேள்வி நிபந்தனைகள் அடங்கிய விண்ணப்பங்களை முறையாக பூர்த்தி செய்து உறுதி செய்த பின்னர் வேறுவேறாக குறிப்பிட்டு (அவற்றின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் சொத்தின் விபரத்தையும் குறிப்பிட்டு) மேற்படி இரு பிரதிகளையும் ஒரு உறையில் இட்டு மேற்படி உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் சொத்தின் விபரத்தையும் கட்டாயமாக குறிப்பிட்டு பொறியிட்டு 2024.06.19 மு.ப.10.00 இற்கு அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு, "பெறுகைக் குழுவின் தலைவர், மாநகர சபை, பூங்கா வீதி, பண்டாரவளை" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது மாநகர சபையின் மாநகர ஆணையாளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

**அட்டவணை - 01**

| தொடர் இல. | சொத்து | சொத்து இலக்கம் | குறைந்தபட்ச பெறுகை கேள்வி (ரூ.) | மீளளிக்கப்படும் வைப்புத் தொகை (ரூ.) | மீளளிக்கப்படாத படிவக் கட்டணம் (ரூ.) |
|---|---|---|---|---|---|
| 01 | சீவலி வீதி கடைத்தொகுதியின் 05 கடை அறை | SSC - 05 | 5250000/- | 150000/- | 50000/- |
| 02 | கினிகம பொது மலசலகூடத்திற்கு மேல் உள்ள கொங்கிறீட் தட்டு 294 சதுர அடி | KI - 05 | 882000/- | 50000/- | 30000/- |
| 03 | வணிக வியாபார நிலையத்தின் இரண்டாம் மாடியின் கடை அறை | G -51 | 850000/- | 50000/- | 30000/- |
| 04 | வணிக வியாபார நிலையத்தின் இரண்டாம் மாடியின் கடை அறை | G -52 | 725000/- | 50000/- | 30000/- |
| 05 | வணிக வியாபார நிலையத்தின் இரண்டாம் மாடியின் கடை அறை | G -53 | 900000/- | 50000/- | 30000/- |
| 06 | வணிக வியாபார நிலையத்தின் இரண்டாம் மாடியின் கடை அறை | G -54 | 625000/- | 50000/- | 30000/- |
| 07 | வணிக வியாபார நிலையத்தின் இரண்டாம் மாடியின் கடை அறை | G -55 | 650000/- | 50000/- | 30000/- |
| 08 | வணிக வியாபார நிலையத்தின் இரண்டாம் மாடியின் கடை அறை | G -56 | 900000/- | 50000/- | 30000/- |
| 09 | வணிக வியாபார நிலையத்தின் இரண்டாம் மாடியின் கடை அறை | G -57 | 650000/- | 50000/- | 30000/- |

03. 2024.06.19 மு.ப.10.00 இற்கு பின்னர் உடனடியாக பண்டாரவளை மாநகர சபை அலுவலகத்தில் கேள்விகள் திறக்கப்படுவதுடன் அவ் வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவர் வருகைதந்து அதனை பரிசீலிக்கலாம். மேலும் இது பற்றிய மேலதிக விபரங்களை பண்டாரவளை மாநகர சபை அலுவலகத்திற்கு வருகைதந்து அல்லது இல: 057-2222275 என்ற தொ.பே. இலக்கத்தை அழைத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

**நிபந்தனைகள்**

01. பெறுகை கேள்வி மாதிரிப் பத்திரங்களை பெற்றுக்கொள்ளும் போது விண்ணப்பதாரியின் தேசிய அடையாள அட்டை/ சாரதி அனுமதிப்பத்திரத்தை கட்டாயமாக சமர்ப்பித்தல் வேண்டும்.
02. சொத்துக்களை குத்தகைக்கு விடுவதற்காக கேள்வி மாதிரிப் பத்திரங்களை ஒரு சொத்திற்கு மேல் விண்ணப்பிக்கும் போது விண்ணப்பங்களை வேறுவேறாக பெற்றுக்கொள்வதுடன் அதற்காக அட்டவணையில் குறிப்பிடப்படும் மீளளிக்கப்படாத கேள்வி மாதிரிப் பத்திரக் கட்டணத்தை வேறுவேறாக செலுத்துதல் வேண்டும். மேலும் மேற்படி கேள்விப் பத்திரங்களை சமர்ப்பிக்கும் போது மேற்படி இலக்கம் 02 ஆம் பந்தியில் குறிப்பிடுமாறு செயற்படுதல் வேண்டும்.
03. சொத்துக்களை குத்தகைக்கு விடுவதற்காக அட்டவணையில் ஒவ்வொரு இலக்கத்துடன் சொத்துக்களுக்காக சமர்ப்பிக்கப்படும் அதிகூடிய கேள்வியில் இருந்து குறைந்த கேள்வி வரை கவனத்திற் கொள்ளப்படுவதுடன், அதற்காக மீளளிக்கப்படும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள வைப்பொன்று கேள்விதாரரால் இலங்கையில் செல்லுபடியாகும் தொகையில் மாநகர சபையில் வைப்புச் செய்து பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டு பிரதியினை விண்ணப்பத்துடன் இணைத்திருத்தல் வேண்டும். மேலும் மேற்படி வைப்பிற்காக காசு செலுத்துதல் 2024.06.18 பி.ப.3.00 இற்கு முன் இடம்பெறல் வேண்டும்.
04. ஒவ்வொரு சொத்துக்களுக்கும் திறந்த கேள்விப் பத்திரங்கள் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவிற்கு சமர்ப்பிக்கப்படுவதுடன், அதன் பரிந்துரையின் அடிப்படையில் கேள்விச்சபையினால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள கேள்விதாரர்களுக்கு அறிவிக்கப்படுவதுடன், மேற்படி அறிவித்தல் விடுத்து 14 நாட்களுக்குள் சமர்ப்பித்துள்ள கேள்விகள் காசாக (மீளளிக்கப்படாத) 50% மாநகர சபைக்கு காசாக செலுத்தல் வேண்டும். மிகுதித்தொகை 30 நாட்களுக்குள் செலுத்தி முடித்து உடன்படிக்கைக்கு வரல் வேண்டும். இத்தொகையை ஒரே முறையிலும் செலுத்தலாம்.
05. தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள கேள்விதாரர்களுக்கு அறிவித்தலின் குறித்த தினத்திற்கு குறித்த தொகையைச் செலுத்தி உடன்படிக்கைக்கு வரவேண்டியதுடன், அவரால் மேற்படி தொகையை செலுத்தாது உடன்படிக்கைக்கு உட்படாதுவிடின் அவரால் வைக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத வைப்பு சபைக்கு உரித்தாகும்.
06. ஒவ்வொரு சொத்துக்களுக்கும் தேர்ந்தெடுக்கப்படும் குத்தகைதாரர்கள் மீளளிக்கப்படாத கேள்வித்தொகைக்கு மேலதிகமாக சபையினால் தீர்மானிக்கப்படுவதுடன் மாதாந்த கடை வாடகை சபைக்கு செலுத்துதல் வேண்டும்.
07. அட்டவணை இல.02 இல் குறிப்பிடப்படும் சொத்துக்களுக்கு கேள்வி கோரப்படும் சொத்துக்களுடன் சம்பந்தப்பட்ட காணித்துண்டு மாத்திரம் வழங்கப்படுவதுடன், குறித்த நிர்மாணம் மாநகர சபையின் அறிவுறுத்தல்களின் அடிப்படையில் குத்தகைதாரரின் செலவில் குறித்த வளாகத்திற்குள் நிர்மாணிக்கப்படல் வேண்டும்.
08. இந் நிபந்தனைகளுக்கு மேலதிகமாக கேள்வி விண்ணப்பத்தின் நிபந்தனைகளுக்கும் நீங்கள் இணங்குதல் வேண்டும் அத்துடன், கிடைக்கப்பெற்ற கேள்விகளில் தகைமையான கேள்வியை ஏற்றுக்கொள்ளல் அல்லது சகலதையும் நிராகரிக்கும் முழுமையான உரிமை பெறுகை குழுவிற்கு உரியதுடன், பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

**விசேட நிபந்தனைகள்**

01. மேற்படி நிபந்தனைகளுக்கு மேலதிகமாக சீவலி வீதி கடைத்தொகுதியின் கடை அறைகளை குத்தகைக்கு விடல் சம்பந்தமாக 2022.05.31 தினகரன், தினமின, டெய்லி நியூஸ் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் நிபந்தனை இல. 01,04,07,08,09,10,11 இன் கீழ் உள்ள நிபந்தனைகளுக்கு இணங்குதல் வேண்டும் அத்துடன் நிபந்தனை இல.10 இல் குறிப்பிடப்படும் இறுதித்தீர்மானம் கேள்விச் சபையின் மற்றும் முகாமைத்துவ குழுவின் இணக்கப்பாட்டுடன் மாநகர ஆணையாளரின் தீர்மானமாகும் என திருத்தப்படல் வேண்டும்.
02. அவ்வாறே இவ் அட்டவணைகளில் குறிப்பிடப்படும் சகல பெறுமதிக்கும் பெறுமதி சேர் வரி பெயரில் 18% (VAT) வரித் தொகையைச் செலுத்துதல் வேண்டும்.

அட்டவணை இல.3 முதல் 9 இல் கீழ் தரப்பட்டுள்ள சொத்துக்களுக்கு குறித்த காணித்துண்டில் நிர்மாணம் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் மிகுதி கதவு மற்றும் அடைப்புக்கள் மாத்திரம் மாநகர சபையின் அறிவுறுத்தல் மற்றும் மதிப்பீட்டின் அடிப்படையில் உங்களது செலவில் உங்களால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

**2024.05.20**
**பண்டாரவளை மாநகர சபை அலுவலகத்தில்**

**டீ. கஜேந்திரன்குமார்,**
**(மாநகர ஆணையாளர்)**
**தலைவர்,**
**பெறுகைக் குழு.**

# கேள்வி அறிவித்தல்

## இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் சுத்திகரிப்பு பணிமனை

### HIRING OF 07 Nos. HYDRAULIC TELESCOPIC MOBILE CRANES OF VARIOUS CAPACITIES FOR MAJOR SHUTDOWN 2024

### (TENDER No.: PL/MSD/14/2024)

For 2024 major shutdown various capacities of 07 Nos. hydraulic telescopic mobile cranes ஐ வாடகைக்கு அமர்த்துவதற்காக புகழ்வாய்ந்த உள்ளூர் நிறுவனங்களிலிருந்து இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் சார்பாக, திணைக்கள பெறுகைக் குழுவானது (கீழ் மட்டம்) விலைமனுக்களை இத்தால் அழைக்கின்றது. வேலைத்தளமானது களனி, சப்புகஸ்கந்த, இபெகூ சுத்திகரிப்பு பணிமனையில் அமைந்துள்ளது.

நிகரான வேலைகளை முன்னெடுத்துச் செல்வதில் விலைமனுதாரர் அனுபவத்தைக் கொண்டிருப்பதுடன் ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகுதிக்காக, தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர் தகுதி நீக்கம் செய்யப்பட்டவர்களின் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் விலைமனுக்கோரல் ஆவணத்தில் கூறப்பட்டுள்ள தகுதித்தன்மை மற்றும் தகைமை தகவுத்திறனுக்கு அமைந்தொழுகுபவராகவுமிருத்தல் வேண்டும்.

விலைமனுக்கோரல் ஆவணங்களை கையேற்கும் வேளையில் அனைத்து வரிகளும் அடங்கலாக மீளளிக்கப்படாத கேள்வி வைப்பாக 8000 ரூபாவை சுத்திகரிப்பு நிதி திணைக்களத்தில் செலுத்துதல் வேண்டும். **இந்த பற்றுச்சீட்டின் பிரதியானது மதிப்பீட்டில் பரிசீலனை செய்வதற்காக முன்வைப்புடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.** இருப்பினும், விலைமனுதாரர் மேலேயுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களை www.ceypetco.gov.lk.website என்ற இணையத்தினூடாகவும் பரீட்சிக்கலாம்.

அனைத்து விலைமனுதாரர்களும் அல்லது அவர்களின் முறையாக அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளும் 2024 ஜுன் 05 ஆம் திகதியன்று மு.ப.9.30 மணிக்கு களனி, சப்புகஸ்கந்த, இபெகூ சுத்திகரிப்பு பணிமனையின் பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ள 'விலைமனு முன்னோடிக் கூட்டத்திற்கு' சமுகமளித்தல் வேண்டும்.

விலைமனுக்கோரல் ஆவணங்களை வழங்கும் இறுதி திகதி மற்றும் நேரமானது 2024 ஜுன் 04 ஆம் திகதியன்று பி.ப. 3 மணியாகுமென்பதுடன் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை மூடும் திகதி மற்றும் பெற்றுக் கொள்ளல் ஆகியன 2024 ஜுன் 12 ஆம் திகதியன்று பி.ப. 2 மணியாகுமென்பதுடன் விலைமனுக்கள் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன தலைமையலுவலக பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளரின் அலுவலகத்தில் விலைமனுக்களை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படும்.

விலைமனுக்கோரல் ஆவணங்கள் மற்றும் ஏனைய விபரங்கள் ஆகியனவற்றை இலங்கை, சப்புகஸ்கந்த, சுத்திகரிப்பு பணிமனை, திட்டமிடல் திணைக்கள பராமரிப்பு மற்றும் செயற்றிட்டங்கள் சுத்திகரிப்பு பிரதி முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

தொலைபேசி: 011 2400427/28/29, 011 2401359
தொலைநகல்: 011 2401359

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (கீழ் மட்டம்),**
**சுத்திகரிப்பு பணிமனை,**
**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்,**
**சப்புகஸ்கந்த,**
**இலங்கை.**

**எனது இல: MCUDP/LA/MUT/(W-14)/14/02**
**சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின் இல: 4-3/4/2021/LRB/121**
**கொழும்பு மாநகர் சார்ந்த நகர அபிவிருத்தி கருத்திட்டத்தின் காணி எடுத்துக் கொள்ளல் அலுவலகம்,**
**இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம்,**
**இல. 3, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை,**
**வெலிக்கடை**
**இராஜகிரிய**

## காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணித் துண்டுகளை எடுத்துக் கொள்ள அரசாங்கம் எண்ணியுள்ளது. இக் காணித் துண்டுகள் தொடர்பாக, காணி எடுத்தற் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் நட்டஈட்டு உரித்து விசாரணைகளை நடாத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்பதை பொது மக்களுக்கு இத்தால் அறியத் தருகின்றேன். மேலதிக விபரங்களுக்கு இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசின் 2024.04.30 ஆம் திகதிய 2382/05 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியைப் பார்க்க.

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| 01. மாகாணம் | : | மேல் மாகாணம் |
| 02. மாவட்டம் | : | கொழும்பு |
| 03. பிரதேச செயலாளர் பிரிவு | : | கொழும்பு |
| 04. அமைவிடம் | : | கொழும்பு மாநகர சபை எல்லைக்குட்பட்ட இல.17 அளுத்மாவத்தை கிராம உத்தியோகத்தர் பிரிவு. |
| 05. கிராமம் | : | அளுத்மாவத்தை |
| 06. வரைபட இல. | : | கடத்திரல் வரைபட இல. 520406 (தொகுதி இல.04, தாள் இல.1) |
| 07. காணியின் பெயர்கள் | : | மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவில், அளுத்மாவத்தை கிராமத்தில் அமைந்துள்ள காணித்துண்டுகள். |
| 08. துண்டு இல. | : | துண்டு இல. 1 தொடக்கம் துண்டு இல. 8 வரை. (08 காணித் துண்டுகள்) |
| 09. முழு விஸ்தீரணம் | : | 0.0149 ஹெக்டயார் |

**எச். திலக்கவர்தன,**
**காணி எடுத்தல் உத்தியோகத்தர்.**
**கொழும்பு மாநகர் சார்ந்த நகர அபிவிருத்திக் கருத்திட்டம்.**
**கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவு**

**கொழும்பு மாநகர் சார்ந்த நகர அபிவிருத்திக் கருத்திட்டத்தின் காணி எடுத்துக் கொள்ளல் அலுவலகம்,**
**இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம்,**
**இல. 3, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை,**
**வெலிக்கடை, இராஜகிரிய.**
**2024.05.21**

# கேள்வி அறிவித்தல்

## இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் சுத்திகரிப்பு பணிமனை

### HIRING OF 10 Nos. OF 3G QUALIFIED STRUCTURAL WELDERS FOR MSD 2024

### [TENDER No.: PL/MSD/26/2024]

Major shut down fabrication வேலைகளுக்காக 10 Nos. of 3G qualified structural வெல்டர்களை வாடகைக்கு அமர்த்துவதற்காக புகழ்பெற்ற கம்பனிகளிடமிருந்து இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவானது (கீழ்மட்ட சிறியது) முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இத்தால் அழைக்கின்றது. வேலைத்தளமானது களனி, சப்புகஸ்கந்த இபெகூ சுத்திகரிப்பு மனையில் அமைந்துள்ளது.

நிகரான வேலைகளை முன்னெடுத்துச் செல்வதில் விலைமனுதாரர் அனுபவத்தைக் கொண்டிருப்பதுடன் ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகுதிக்காக, தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர் தகுதி நீக்கம் செய்யப்பட்டவர்களின் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் விலைமனுக்கோரல் ஆவணத்தில் கூறப்பட்டுள்ள தகுதித்தன்மை மற்றும் தகைமை தகவுத்திறனுக்கு அமைந்தொழுகுபவராகவுமிருத்தல் வேண்டும்.

விலைமனுக்கோரல் ஆவணங்களை கையேற்கும் வேளையில் அனைத்து வரிகளும் அடங்கலாக மீளளிக்கப்படாத கேள்வி வைப்பாக 1100 ரூபாவை சுத்திகரிப்பு நிதி திணைக்களத்தில் செலுத்துதல் வேண்டும். **இந்த பற்றுச்சீட்டின் பிரதியானது மதிப்பீட்டில் பரிசீலனை செய்வதற்காக முன்வைப்புடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.** இருப்பினும், விலைமனுதாரர் மேலேயுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களை **www.ceypetco.gov.lk.website** என்ற இணையத்தினூடாகவும் பரீட்சிக்கலாம்.

விலைமனுக்கோரல் ஆவணங்களை வழங்கும் இறுதி திகதி மற்றும் நேரமானது 2024 ஜுன் 05 ஆம் திகதியன்று பி.ப. 3 மணியாகுமென்பதுடன் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை மூடும் திகதி மற்றும் பெற்றுக் கொள்ளல் ஆகியன 2024 ஜுன் 12 ஆம் திகதியன்று பி.ப. 2 மணியாகுமென்பதுடன் விலைமனுக்கள் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன தலைமையலுவலக பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளரின் அலுவலகத்தில் விலைமனுக்களை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படும்.

விலைமனுக்கோரல் ஆவணங்கள் மற்றும் ஏனைய விபரங்கள் ஆகியனவற்றை இலங்கை, சப்புகஸ்கந்த சுத்திகரிப்பு பணிமனை, திட்டமிடல் திணைக்கள பராமரிப்பு மற்றும் செயற்றிட்டங்கள் சுத்திகரிப்பு பிரதி முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

தொலைபேசி : 011 2400427/28/29, 011 2401359
தொலைநகல் : 011 2401359

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (கீழ்மட்ட சிறியது),**
**சுத்திகரிப்பு பணிமனை,**
**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்,**
**சப்புகஸ்கந்த,**
**இலங்கை**

# கேள்வி அறிவித்தல்

## இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் சுத்திகரிப்பு பணிமனை

### REFRACTOTORY WORK, PAINTING & MECHANICAL REPAIRS OF 01F2 FURNACE FOR MAJOR SHUTDOWN 2024

### (TENDER No.: PL/MSD/25/2024)

இலங்கை சப்புகஸ்கந்த சுத்திகரிப்பு பணிமனையில் Refractory work, painting & mechanical repairs of 01F2 Furnace during major shutdown 2024 இற்காக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவானது (கீழ் மட்டம்) புகழ் வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து விலைமனுக்களை இத்தால் அழைக்கின்றது.

விலைமனுக்கோரல் ஆவணங்களை கையேற்கும் வேளையில் பெசேவ அடங்கலாக மீளளிக்கப்படாத கேள்வி வைப்பாக 2000 ரூபாவை சுத்திகரிப்பு நிதி திணைக்களத்தில் செலுத்துதல் வேண்டும். **இந்த பற்றுச்சீட்டின் பிரதியானது மதிப்பீட்டில் பரிசீலனை செய்வதற்காக முன்வைப்புடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.** இருப்பினும், விலைமனுதாரர் மேலேயுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களை www.ceypetco.gov.lk.website என்ற இணையத்தினூடாகவும் பரீட்சிக்கலாம்.

அனைத்து விலைமனுதாரர்களும் அல்லது அவர்களின் முறையாக அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் களனி, சப்புகஸ்கந்த, இபெகூ சுத்திகரிப்பு பணிமனையின் பயிற்சி நிலையத்தின் விரிவுரை மண்டபத்தில் 2024 ஜுன் 6 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு நடைபெறவுள்ள ''விலைமனு முன்னோடிக் கூட்டத்தில் மற்றும் தளவிஜயத்தில்'' சமுகமளித்தல் வேண்டும்.

விலைமனுக்கோரல் ஆவணங்களை வழங்கும் இறுதி திகதி மற்றும் நேரமானது 2024 ஜுன் 14 ஆம் திகதியன்று பி.ப. 2 மணியாகும்.

விலைமனுக்கோரல் ஆவணங்கள் மற்றும் ஏனைய விபரங்கள் ஆகியனவற்றை இலங்கை, சப்புகஸ்கந்த, சுத்திகரிப்பு பணிமனை, திட்டமிடல் திணைக்கள பராமரிப்பு மற்றும் செயற்றிட்டங்கள் சுத்திகரிப்பு பிரதி முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

தொலைபேசி: 0117732963/2401359/0765448572
தொலைநகல்: 011 2401359/2400436

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (கீழ் மட்டம்),**
**சுத்திகரிப்பு பணிமனை,**
**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்,**
**சப்புகஸ்கந்த,**
**இலங்கை.**

www.adz.lk
it's what you want
Login

To Buy Your Dream Vehicle within your Budget
If it is a vehicle you want,
YOU NAME IT,
WE HAVE IT
Sunday Observer adz Auto Focus

THE ONLY PLACE TO BUY YOUR DREAM CAR!
Sunday Observer adz it's what you want

- Auto Focus
adz Magazine Issued with Sunday Observer
Hot Line 011 2 429 369
011 2 429 368
E-mail adzsuo@gmail.com

* Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER adz it's what you want
Classified
Call :- 077 7 278 948/ 011 2 429 347 | 011 2 429 383 | 011 2 429 342/ 343
077 7 270 067
E-mail - classified@lakehouse.lk
WE ACCEPT
Green Light for
Online Transfer
For 15 Words Rs. 800/-
(Additional each word Rs. 20/-)
BANK OF CEYLON BOC
Lake House Branch
Acc. No. 000000377




# சியபத பினான்ஸ் பிஎல்சி கடனீட்டு பத்திரங்களை வெளியிட தீர்மானம்

சம்பத் வங்கி பிஎல்சியின் துணை நிறுவனமும் இலங்கையின் வங்கி அல்லாத நிதித்துறையில் புகழ் பெற்று விளங்கும் முன்னணி நிறுவனமுமான சியபத பினான்ஸ் பிஎல்சி, தனது கடனீட்டுப்பத்திர வெளியீட்டின் மூலம் 4 பில்லியன் ரூபாவை திரட்டுவதற்கான முடிவை அறிவித்துள்ளது.

2024 மார்ச் 6 அன்று பட்டியலிடப்பட்ட, மதிப்பிடப்பட்ட, சிரேஷ்ட, பாதுகாப்பற்ற, மீட்டெடுக்கக்கூடிய கடனீட்டுப்பத்திரங்களை வெளியிடுவதன் மூலம் நிதி திரட்டும் முடிவை சியபத பினான்ஸ் பிஎல்சியின் பணிப்பாளர் சபை அங்கீகரித்துள்ளது.

ஆரம்ப சலுகையாக ரூ. 2 பில்லியன், மேலதிகமாக ரூ. 2 பில்லியனுடன் மொத்த சாத்தியமான வெளியீடு ரூ. 4 பில்லியனாகும். இந்தக் கடன் பத்திரங்கள் ஐந்தாண்டு காலத்துடன் முதலீட்டாளர்களுக்கு நிலையான வட்டி வீதத்தில் வருடாந்தம் வழங்கத் தயாராக உள்ளது. இந்த வெளியீட்டின் மூலம் கிடைக்கும் வருமானம் சியபத பினான்ஸ் பிஎல்சியின கடன் பிரிவை விரிவுபடுத்த ஒதுக்கப்படுகிறது. இது நிறுவனத்தின் தொலைநோக்கு பார்வைக்கேற்ப நிலையான வளர்ச்சி மற்றும் மூலோபாய முதலீட்டு வாய்ப்புகளை வளர்ப்பதில் நிறுவனத்தின் அர்ப்பணிப்பை எடுத்துக் காட்டுகிறது.

சியபத பினான்ஸ் பிஎல்சியின் முகாமைத்துவ பணிப்பாளர் ஆனந்த செனவிரத்ன, 'சியபத பினான்ஸ் பிஎல்சி இலங்கையில் நிதி உள்ளடக்கத்தை ஊக்குவிப்பதற்கும் பொருளாதார வளர்ச்சியை முன்னெடுப்பதற்கும் தனது அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்துவதால், எமது பெறுமதிமிக்க வாடிக்கையாளர்களுக்கு புத்தாக்கமான, நிலையான நிதி தீர்வுகளை தொடர்ந்து வழங்க உதவுமென்றார்.

சியபத பினான்ஸ்
Siyapatha Finance
(Finance Company of Sampath Bank Group)

யூனியன் அஷ்யூரன்ஸ், சிங்கர் ஸ்ரீலங்கா

## மேம்படுத்தப்பட்ட கொடுப்பனவு திரட்டலுக்காக பங்காண்மை கைச்சாத்து



இலங்கையின் முன்னணி ஆயுள் காப்புறுதி சேவைகள் வழங்குநரான யூனியன் அஷ்யூரன்ஸ், தனது கொடுப்பனவுகளை திரட்டும் பங்காளராக நியமிப்பதற்காக சிங்கர் பிஎல்சியுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டுள்ளது. இந்தப் பங்காண்மையினூடாக நாடளாவிய ரீதியில் காணப்படும் சிங்கரின் பரந்த வலையமைப்பினூடாக கொடுப்பனவுகளை ஏற்றுக்கொள்ளும் வினைத்திறனான சேவைகளை பெற்றுக்கொடுத்து வாடிக்கையாளர்களின் சௌகரியத்தை மேம்படுத்த எதிர்பார்க்கிறது.

நாடு முழுவதிலும் காணப்படும் சிங்கரின் 435 விற்பனை நிலையங்களினூடாக யூனியன் அஷ்யூரன்ஸ் பண சேகரிப்பு செயற்பாடுகளை விரிவாக்கம் செய்யும் வகையில் இந்தப் பங்காண்மை அமைந்துள்ளது.

இந்த பகுதிகளினூடாக காப்புறுதிதாரர்களுக்கு தமது கொடுப்பனவுகளை மேற்கொள்ள முடியும் என்பதுடன், தமது ஆயுள் காப்புறுதிக்கான கட்டுப்பணங்கள் மற்றும் கடன்களை நிர்வகித்துக்கொள்ள முடியும். தினசரி மு.ப. 8.30 மணி முதல் பி.ப. 7.00 மணி வரை பணத் திரட்டு சேவைகளை சிங்கர் கிளை வழங்கும்.

இந்த நீடித்த பிரிவினூடாக, காப்புறுதிதாரர்களுக்கு நெகிழ்ச்சித்தன்மை உறுதி செய்யப்படுவதுடன் சௌகரியமான வகையில் சிங்கர் விற்பனை நிலையங்களுக்கு விஜயம் செய்து தமது கொடுப்பனவுகளை இலகுவாக மேற்கொள்ள முடியும்.

காப்புறுதிதாரர்களின் காப்புறுதிகளின் நிலை மற்றுதட கொடுப்பனவு உறுதிப்படுத்தல்கள் போன்றவற்றை உடனுக்குடன் பெற்றுக்கொள்ள முடியும். இதனூடாக தமது காப்புறுதிகளை சிறந்த வகையில் நிர்வகித்து கொள்ளலாம்.

இலங்கையின் #1 தர வெளிப்படையான

## ஆயுள் காப்புறுதி சேவை வழங்குநராக யூனியன் அஷ்யூரன்ஸ் முன்னிலையில்




இலங்கையின் முன்னணி ஆயுள் காப்புறுதி சேவைகள் வழங்குநரான யூனியன் அஷ்யூரன்ஸ், இலங்கையின் #1 தர வெளிப்படையான ஆயுள் காப்புறுதி சேவைகள் வழங்குநராக தரப்படுத்தப்பட்டுள்ளது.

ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நஷனல் ஸ்ரீ லங்கா (TISL) அண்மையில் வெளியிட்டிருந்த கூட்டாண்மை அறிக்கையிடல் மதிப்பாய்வு 2023 (TRAC) அறிக்கையில் இந்த உயர் தரப்படுத்தல் வழங்கப்பட்டிருந்தது. இலங்கையில் காணப்படும் 125 பொதுப் பட்டியலிடப்பட்ட நிறுவனங்களின் மத்தியில் கூட்டாண்மை தகவல்கள் வெளிப்படுத்தல் செயன்முறைகளை மதிப்பாய்வு செய்திருந்த இந்த மதிப்பீட்டினூடாக ஆறு பிரதான நிகழ்வுகளில் அறிக்கையிடல் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருந்தது. மோசடி தவிர்ப்பு நிகழ்ச்சிகள், நிறுவனம் சார் வெளிப்படைத்தன்மை, உள்ளக நிதிசார் அறிக்கையிடல், நாட்டுக்கு நாடு அறிக்கையிடல், பாலின மற்றும் பாகுபாடின்மை அறிக்கையிடல் மற்றும் அரச ஒப்பந்தங்கள் மற்றும் விலைமனுக்கோரல்கள் போன்றவற்றுடன் தொடர்புடைய கொள்முதல் தொடர்பான அறிக்கையிடல் போன்றன அதில் அடங்கியிருந்தன.


ஆயுள் காப்புறுதி பிரிவில் யூனியன் அஷ்யூரன்ஸ் முன்னிலையாளராக தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன், TRAC புள்ளி வழங்கலில் 10 க்கு 8.75 புள்ளிகளை பெற்றிருந்தது. அதனூடாக வெளிப்படைத்தன்மையை சகல பிரிவுகளிலும் பின்பற்றியிருந்தது. மதிப்பாய்வில் ஒட்டுமொத்த சராசரி பெறுமதியான 10 இல் 5.85 எனும் TRAC புள்ளியை இந்தப் பெறுபேறு கடந்திருந்தது. இலங்கையின் மாபெரும் பன்முகப்படுத்தப்பட்ட நிறுவனமான ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் குழுமத்தின் துணை நிறுவனமான யூனியன் அஷ்யூரன்ஸ், கடுமையான ஆளுகை கொள்கைகளை பின்பற்றுகின்றது.

## 'மணல் வீதிகளற்ற கிராமங்கள்'; மண்முனை வடக்கில் வீதிகள் புனரமைப்பு



கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தனின் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் 'மணல் வீதிகளற்ற கிராமங்கள்' எனும் கருத்திட்டத்துக்கமைய கிராமிய பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்யக்கூடிய மிக முக்கிய மணல் வீதிகள் செப்பனிடப்பட்டு வருகின்றன. மணல் வீதிகளற்ற கிராமங்கள் எனும் கருத்திட்டத்தின் இரண்டாம் கட்ட ஆரம்ப நிகழ்வு மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு ரூ. 5.5 மில்லியன் செலவில் செப்பனிடப்பட்ட பனிச்சையடி கிராமத்தில் படித்த பெண்கள் பண்ணை வீதியை கையளித்தார். கருவேப்பங்கேணி கிராம அலுவலர் பிரிவில் ரூ 3.5 மில்லியன் செலவில் சிவநாகம் பிரான் ஆலய வீதியை செப்பனிடுவதற்கான பணிகளையும் அவர் ஆரம்பித்து வைத்துள்ளார்.

## லாகூர் பல்கலை – கல்முனை CMT கெம்பஸ் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்து



லாகூர் பல்கலைக் கழகம் (UOL) மற்றும் ஸ்ரீலங்கா, கல்முனை, முகாமைத்துவ மற்றும் தொழில்நுட்ப கெம்பஸ் (CMT), உலகளாவிய கல்விசார் அங்கீகாரத்தை உயர்த்துவதற்காக அண்மையில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளது.

தலைவர் BOG அவைஸ் ரவூப் மற்றும் டாக்டர் ஏ.எம்.சி.எம்.டி. தலைவர் ஜெமீல் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இந்த ஒத்துழைப்பு விரிவான பரிமாற்றம் மற்றும் கூட்டாண்மை திட்டத்தை நிறுவுவதற்கு அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தம் இரண்டு நிறுவனங்களுக்கும் அவற்றின் சமூகங்களுக்கும் பயனளிக்கக்கூடியதாக அமையவுள்ளது. இரண்டு பல்கலைக்கழகங்களும் ஒரு கற்றல் மையத்தை நிறுவ ஒப்புக்கொண்டுள்ளன. இது கல்வி மற்றும் தொழில்முறை வளர்ச்சிக்கான மையமாக செயல்படும். கூடுதலாக இந்த ஒப்பந்தத்தில் மாணவர் மற்றும் விரிவுரையாளர் பரிமாற்றங்களை மேம்படுத்துதல், அறிவு மற்றும் கலாசார அனுபவங்களை பகிர்ந்துகொள்வது ஆகியவை அடங்கும். இந்த முயற்சியானது இரு நிறுவனங்களின் மாணவர்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் கல்வி எல்லைகளை விரிவுபடுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

## ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வு



அரநாயக்க திப்பிட்டியை சேர்ந்த எம்.எப்.எம். ரிபா தனது 36 ஆண்டுகால ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

திப்பிட்டிய முஸ்லிம் வித்தியாலயத்தினதும், பேருவளை ஜாமிய்யா நளீமிய்யாவினதும் பழைய மாணவரான இவர், 1986ஆம் ஆண்டு பஸ்தும்ரட்ட கல்வியியல் கல்லூரிக்கு கேகாலை மாவட்டத்திலிருந்து முதன் முதலில் ஆங்கிலமொழி மூலம் இத்துறைக்கு தெரிவு செய்யப்பட்டார்.

1989ஆம் ஆண்டு தனது முதல் ஆங்கில ஆசிரியர் நியமனத்தின் மூலம் தெல்த்தொட எனஸல்கொல்ல மத்திய கல்லூரியில் கற்பிக்க ஆரம்பித்தார். அதனை தொடர்ந்து பல பாடசாலைகளில் கற்பித்த இவர் இறுதியாக தனது ஊரிலுள்ள திப்பிட்டிய முஸ்லிம் வித்தியாலயத்தில் 14 ஆண்டுகள் சேவையாற்றி ஓய்வு பெற்றுள்ளார்.

# விலைமனுக் கோரல்

ලංකා විදුලිබල මණ්ඩලය
இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|
| பிராந்தியம் | கேள்வி இல. பொருட்களது விபரம் - தொகை | விலைமனு கோரல் முடிவுத் திகதி | விலைமனு ஆவணம் பெறும் இடமும் தொ.பே.இலக்கமும் | விலைமனு ஆவண விலை (ரூபா) | கேள்வி விபரம். ICB NCB |
| | | | பொருட்கள் | | |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/QPPC/24/084 மாகாண உப களஞ்சியசாலை - அம்பாறையில் வைக்கப்பட்டுள்ள சேவைக்கு உதவாத பொருட்களின் விற்பனை | 12-06-2024 ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666, 026-2221030 | 1000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு மாகாணம் | DGM(E)/QPPC/24/085 மாகாண களஞ்சியசாலை - திருகோணமலையில் வைக்கப்பட்டுள்ள சேவைக்கு உதவாத பொருட்களின் விற்பனை | 12-06-2024 ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666, 026-2221030 | 1000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு மாகாணம் | DGM(E)/QPPC/24/086 மாகாண உப களஞ்சியசாலை - மட்டக்களப்பில் வைக்கப்பட்டுள்ள சேவைக்கு உதவாத பொருட்களின் விற்பனை | 12-06-2024 ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666, 026-2221030 | 1000.00 | NCB |
| | | | சேவைகள் | | |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/QPPC/24/109 வாடகைக்கு வான் மின் அத்தியட்சகர் II (விநியோகமும் கட்டுமானமும்) அம்பாறை (இரண்டு வருடகாலம்) | 05-06-2024 ம் திகதி பி.ப.2.00 மணி | விநியோகமும் கட்டுமானமும் பொறியியலாளர் அலுவலகம் (அம்பாறை) 063-2222440 அல்லது பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666, 026-2221030 | 1000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/QPPC/24/110 வாடகைக்கு வீடு மின் அத்தியட்சகர் விடுதி (மகா ஓயா மின் பாவனையாளர் சேவை நிலையம்) - அம்பாறை (இரண்டு வருடகாலம்) | 05-06-2024 ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதேச பிரதம மின் பொறியியலாளர் அலுவலகம், அம்பாறை 063-2222387, 063-2222078 அல்லது பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666, 026-2221030 | 500.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/QPPC/24/111 வாடகைக்கு வான் - மின் அத்தியட்சகர் I (திட்டமிடல்) - பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை (இரண்டு வருடகாலம்) | 05-06-2024 ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666, 026-2221030 | 1000.00 | NCB |

மேற்குறித்த பொருட்கள் வழங்கப்படல் தொடர்பாக வழங்குதாரர்களிடமிருந்து இலங்கை பிராந்தியம்-02 மின்சார சபை சார்பாக கொள்வனவுக்குழுவின் தலைவர் சர்வதேச/ தேசிய போட்டித் தன்மையுடன் கூடியதான விலைமனுக்களைக் கோருகின்றார். இலங்கை மின்சார சபையிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஆவணங்களில் மாத்திரமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

விலைமனுக்கோர உத்தேசித்திருப்பவர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற முகவர்களுக்கு மாத்திரமே விலைமனு ஆவணங்கள் விநியோகிக்கப்படும். தேவைக்கேற்ப அவர்கள் 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்திற்கேற்ப பதிவு செய்து கொள்ளல் வேண்டும்.

விலைமனுக்கோரல் முடிவு திகதிக்கு இரண்டு தினங்கள் இருக்கும் வரை விலைமனு ஆவணங்கள் விலைமனுக்கோர உத்தேசித்திருப்பவர்கள் அல்லது அவர்களது முகவர்கள் மூலம் உரித்தான முறையில் இலங்கை மின்சார சபையின் பிரதிப் பொது முகாமையாளருக்கு/ பிரதம பொறியியலாளருக்கு எழுத்துமூலமாக விண்ணப்பித்து 5 ஆம் கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை வழங்குவதன் மூலம் கடமை நாட்களில் 09.00 மணி முதல் 15.00 மணி வரையிலான காலப்பகுதிக்குள் ஆவணங்கள் பெற்றுக்கொள்ளலாம். பணமாகவோ இலங்கை மின்சார சபை பொது முகாமையாளர் சார்பாக வரையப்பட்ட வங்கி வரைவுப்பத்திரம் ஒன்றின் மூலமாகவோ கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படலாம்.

எழுத்துமூலமான விண்ணப்பமொன்றின் அடிப்படையில் வெளிநாட்டுத் தூதரகங்கள்/வர்த்தக ஆணைக்குழுக்கள் என்பன இலவசமான முறையில் விலைமனுக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். இ.மி.சபையின் உரித்தான பி.பொ.மு/பிரதம பொறியியலாளர்களது அலுவலகங்களில் வைத்து உத்தேச விலைமனுதாரர்களினாலும் அவர்களது முகவர்களினாலும் விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாகப் பரிசீலிக்கப்படலாம்.

4 ஆம் கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் வைத்து விலைமனுதாரர்கள் மற்றும் அவர்களது முகவர்கள் முன்பாக விலைமனுக்கோரல் நேரம் முடிந்தவுடனேயே விலைமனுக்கள் திறக்கப்படும். காலம் பிந்திவரும் மனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனு ஆவணங்கள் விநியோகிப்பவர்களான இ.மி.சபை. பொ.மு/பிரதம பொறியியலாளர் ஆகியோர்களிடமிருந்து விலைமனுக்கோரல் முடிவு திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்பாக அனைத்து விளக்கங்களும் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

பொது முகாமையாளர்
இலங்கை மின்சார சபை

வளமான வாழ்விற்கு மின்சாரம்

விலைமனு ஆவணத்தின் தகவல் பிரதியானது www.ceb.lk என்ற இ.மி.ச. கூட்டுரு இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்படலாம்.

# அமெரிக்காவிடம் பங்களாதேஷ் அணிக்கு அதிர்ச்சித் தோல்வி




அமெரிக்காவுக்கு எதிரான முலாவது டி20 போட்டியில் ஐந்து விக்கெட்டுகளால் அதிர்ச்சித் தோல்வி அடைந்த பங்களாதேஷ் அணி மூன்று போட்டிகளைக் கொண்ட தொடரில் 0–1 என பின்தங்கியுள்ளது.

டி20 உலகக் கிண்ணத்திற்கு முன்னதாக அமெரிக்காவில் நடைபெறும் இந்தத் தொடரில் பெரைரி வியுவில் நேற்று முன்தினம் (21) நடைபெற்ற இந்தப் போட்டியில் அமெரிக்க அணி ஆரம்பம் தொடக்கம் ஆதிக்கம் செலுத்தியது.

முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட பங்களாதேஷ் அணியை 20 ஓவர்களுக்கு 6 விக்கெட் இழப்புக்கு 153 ஓட்டங்களுக்கு மட்டுப்படுத்த அமெரிக்காவால் முடிந்தது. தௌஹித் ஹிரிதோய் 58 ஓட்டங்களை பெற்றார்.

இந்நிலையில் பதிலெடுத்தாடிய அமெரிக்க அணி 19.3 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 156 ஓட்டங்களை பெற்று வெற்றியீட்டியது. குறிப்பாக இந்தியாவின் 19 வயதுக்கு உட்பட்ட அணியில் ஆடி தற்போது அமெரிக்க அணியில் இணைந்திருக்கும் ஹர்மீத் சிங் 13 பந்துகளில் ஆட்டமிழக்காது 33 ஓட்டங்களை விளாசினார்.

அதேபோன்று முன்னாள் நியூசிலாந்து வீரரான கொரி அண்டர்சன் 25 பந்துகளில் ஆட்டமிழக்காது 34 ஓட்டங்களை பெற்று அமெரிக்க அணியின் வெற்றியை உறுதி செய்தார்.

சர்வதேச டி20 தரவரிசையில் 19 ஆவது இடத்தில் இருக்கும் அமெரிக்க அணி ஐ.சி.சி. முழு அங்கத்துவ நாடு ஒன்றை டி20 சர்வதேச போட்டியில் வீழ்த்துவது இது இரண்டாவது முறையாகும். இதற்கு முன்னர் அந்த அணி 2021 இல் அயர்லாந்து அணியை தோற்கடித்தது.

இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது டி20 போட்டி இன்று (23) அதே பெரைரி வியுவில் நடைபெறவுள்ளது.

# ஆட்ட நிர்ணய குற்றச்சாட்டில் தம்புள்ள உரிமையாளர் கைது




லங்கா பிரீமியர் லீக்கில் தம்புள்ள தண்டர்ஸ் அணியின் உரிமையாளரான பிரிட்டிஷ் நாட்டு கடவுச்சீட்டை வைத்திருக்கும் பங்களாதேஷ் நாட்டவர் ஒருவர் பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலைத்தில் ஆட்ட நிர்ணய குற்றச்சாட்டில் நேற்று (22) கைது செய்யப்பட்டுள்ளார்.

விளையாட்டு அமைச்சின் விளையாட்டு தொடர்பான குற்றங்களைத் தடுப்பதற்கான விசேட புலனாய்வுப் பிரிவு அதிகாரி ஒருவர் இந்த கைதை உறுதி செய்துள்ளார். தமீம் ரஹ்மான் என்ற சந்தேக நபர் நீதிமன்றத்தின் முன் ஆஜர்படுத்தப்படவிருந்தார்.

அவர் மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுகள் எல்.பி.எல். அல்லது வேறு போட்டிகளுடன் தொடர்புபட்டதா என்பது உறுதி செய்யப்படவில்லை.

பங்களாதேஷ் தொழில்முயற்சியாளர்கள் தலைமையிலான இம்பீரியல் ஸ்போட்ஸ் குழுமத்தினால் கடந்த ஏப்ரல் மாதம் தம்புள்ள அணி வாங்கப்பட்டது.

லங்கை பிரீமியர் லீக் வீரர்கள் ஏலம் கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்றதோடு அதில் சர்வதேச கிரிக்கெட் கௌன்ஸிலின் ஊழல் எதிர்ப்புக் குழு ஒன்றும் பங்கேற்றிருந்தது.

# மல்யுத்தத்தில் மட்டு மாவட்டம் சம்பியன்

**மாளிகைக்காடு குறூப் நிருபர்**



கிழக்கு மாகாண விளையாட்டு அமைச்சினால் மட்டக்களப்பு வெபர் உள்ளக அரங்கில் நடைபெற்ற 2024ஆம் ஆண்டுக்கான மல்யுத்த போட்டியில் மட்டக்களப்பு மாவட்டம் சம்பியனானது.

திருகோணமலை, அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வீரர்கள் பலர் கலந்து கொண்ட இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்டம் சார்பாக போட்டியிட்ட சாண்டோ சங்கரதாஸ் விளையாட்டு கழக வீரர்கள் 11 தங்கப் பதக்கங்களையும், 8 வெள்ளிப் பதக்கங்களையும், 2 வெண்கலப் பதக்கங்களையும் பெற்றுக் கொண்டனர்.

## சர்வதேச செய்திகள்



# காசாவில் போர் தீவிரம்: பலஸ்தீனத்திற்கு மூன்று ஐரோப்பிய நாடுகளில் அங்கீகாரம்

காசாவில் ஏழு மாதங்களுக்கு மேலாக நீடிக்கும் இஸ்ரேலின் தாக்குதல்கள் தொடரும் நிலையில் மூன்று ஐரோப்பிய நாடுகள் பலஸ்தீன நாடு ஒன்றை அங்கீகரிப்பதாக அறிவித்துள்ளன.

அயர்லாந்து பலஸ்தீன நாட்டை அங்கீகரிக்கும் என்று அந்நாட்டு பிரதமர் சிமொன் ஹரிஸ் நேற்று (22) அறிவித்த நிலையில் நோர்வே மற்றும் ஸ்பெயின் நாடுகளும் இதே முடிவை எடுத்துள்ளன.

'அயர்லாந்து, நோர்வே மற்றும் ஸ்பெயின் நாடுகள் தாம் பலஸ்தீன நாட்டை அங்கீகரிப்பதாக அறிவிக்கிறோம்' என்று நேற்று நடந்த செய்தியாளர் சந்திப்பில் ஹரிஸ் குறிப்பிட்டார்.

'இந்த அறிவிப்புக்கு முன்னதாக, பல நாட்டு தலைவர்கள் மற்றும் சகாக்களுடன் நான் பேசினேன். எதிர்வரும் வாரங்களில் இந்த முக்கிய படியில் மேலும் பல நாடுகள் எம்முடன் இணையும் என்று நான் உறுதியாக உள்ளேன்' என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இஸ்ரேல், பலஸ்தீனம் மற்றும் அந்த மக்களுக்கான அமைதி மற்றும் பாதுகாப்புக்கு ஒரே நம்பகமான வழி இரு நாட்டுத் தீர்வாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதன்படி எதிர்வரும் மே 28 ஆம் திகதி பலஸ்தீனத்தை அயர்லாந்து உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்கும் என்று அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் மைக்கல் மார்டீன் எக்ஸ் சமூகதளதிற்கு தெரிவித்துள்ளார்.

ஸ்பெயினும் எதிர்வரும் மே 28 ஆம் திகதி பலஸ்தீன நாட்டை அங்கீகரிப்பதாக அந்நாட்டு பிரதமர் பெட்ரோ சான்சஸ் பாராளுமன்றத்தில் நேற்று அறிவித்தார். நோர்வே பிரதமர் ஜோனஸ் கார் ஸ்டோர், ஒஸ்லோவில் இருந்து இந்த அறிவிப்பை விடுத்தார்.

'ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டும் காயமடைந்திருக்கும் போருக்கு மத்தியில், அமைதி மற்றும் பாதுகாப்புடன் பக்கத்து பக்கத்தில் வாழும் இரு நாட்டு தீர்வாக இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனர்களுக்கு அரசியல் தீர்வொன்றை வழங்க மாற்று வழி ஒன்றை நாம் உயிர்ப்புடன் வைத்திருக்க வேண்டி உள்ளது' என்று ஸ்டோர் வலியுறுத்தியுள்ளார்.

அந்த அறிப்பை அடுத்து இஸ்ரேல் அவசர ஆலோசனைகளுக்காக அயர்லாந்து மற்றும் நோர்வே தூதுவர்களை திரும்ப அழைத்துக் கொண்டுள்ளது.

'இது தொடர்பில் இஸ்ரேல் அமைதி காக்காது என்ற உறுதியான செய்தியை அயர்லாந்து மற்றும் நோர்வேயுக்கு வழங்குகிறோம்' என்று இஸ்ரேல் வெளியுறவு அமைச்சர் இஸ்ராயேல் காட்ஸ் தெரிவித்துள்ளார்.

இந்த முடிவை வரவேற்றிருக்கும் மேற்குக் கரையை தளமாகக் கொண்ட பலஸ்தீன வெளியுறவு அமைச்சு, முக்கியத்துவம் வாய்ந்த முன்னெடுப்பு என்றும் குறிப்பிட்டுள்ளது.

மறுபுறம் காசாவில் கடந்த 2007 தொடக்கம் ஆட்சியில் உள்ள ஹமாஸ் அமைப்பின் மூத்த உறுப்பினர் ஒருவரான பசம் நயீம் ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்திற்கு குறிப்பிட்டிருப்பதாவது, இந்த நகர்வின் பின்னணியில் பலஸ்தீன மக்களின் 'தைரியமான போராட்டம்' இருப்பதாக தெரிவித்துள்ளார்.

உலகின் பெரும்பாலான நாடுகள் பலஸ்தீன நாடு ஒன்றை ஏற்கனவே அங்கீகரித்துள்ளன. பலஸ்தீனம் ஐ.நாவில் இணைவதற்கு இந்த மாத ஆரம்பத்தில் பொதுச் சபையில் இடம்பெற்ற வாக்கெடுப்பில் 193 அங்கத்துவ நாடுகளில் 143 நாடுகள் ஆதரவாக வாக்களித்திருந்தன.

முன்னதாக ஐரோப்பாவில் ஒன்பது நாடுகள் மாத்திரமே பலஸ்தீன நாட்டை அங்கீகரித்திருந்தன. இதில் பெரும்பாலான நாடுகள் 1988 இல் சோவியட் முகாமில் அங்கமாக இருந்தபோதே இந்த முடிவை எடுத்திருந்தன. இந்நிலையில் ஸ்பெயின், அயர்லாந்து மற்றும் நோர்வேயின் முடிவு தீர்க்கமானதாக பார்க்கப்படுகிறது.

பலஸ்தீன நாடு ஒன்றை அங்கீகரிப்பதற்கு அமெரிக்கா மற்றும் பெரும்பாலான மேற்கு ஐரோப்பிய நாடுகள் விருப்பத்தை வெளியிட்டபோதும் அது இறுதி எல்லை, ஜெரூசலத்தின் அந்தஸ்து போன்ற பிரச்சினைகளுக்கு உடன்பாடு ஒன்று எட்டப்படும் முன்னர் இடம்பெறாது என்று கூறி வருகின்றன.

**ரபாவில் முன்னேற்றம்**

இந்நிலையில் கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேல் மீது பலஸ்தீன போராளிகள் நடத்திய தாக்குதலை அடுத்து வெடித்த காசா போர், தற்போது தெற்கு காசாவில் பலஸ்தீனர்களின் கடைசி அடைக்கலமாக இருக்கும் ரபா மற்றும் வடக்கு காசாவின் ஜபலியா நகரை மையப்படுத்தி தீவிரம் அடைந்துள்ளது.

இதில் இஸ்ரேலிய துருப்புகள் இன்னும் நுழையாத பகுதியாக இருக்கும் ரபாவை நோக்கி படைகள்; முன்னேறி வருவதோடு கடுமையான வான் மற்றும் பீரங்கி தாக்குதல்களை நடத்தி வருகிறது. இதனால் அங்கிருந்து தற்போது 80000க்கும் அதிகமான மக்கள் மீண்டும் ஒருமுறை வெளியேறி இருப்பதாக ஐ.நா. நிறுவனம் தெரிவித்துள்ளது.

ரபாவின் இதயப் பகுதியாக இருக்கும் சனநெரிசல் மிக்க மாவட்டம் ஒன்றுக்கு நெருக்கமாக இஸ்ரேலிய டாங்கிகள் நேற்று முன்னேறி இருப்பதாக கூறப்படுகிறது.

எகிப்துடனான தெற்கு எல்லை வேலியில் முன்னரை விட மேற்கே புதன்கிழமை புதிய நிலைகளில் டாங்கிகள் நிலைகொண்டிருப்பதாகவும், இப்போது ரபாவின் மையத்தில் யிப்னா சுற்றுப்புறத்தின் விளிம்பில் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் குடியிருப்பாளர்கள் மற்றும் போராளிகள் தெரிவித்தனர்.

'ஆளில்லா விமானங்கள், ஹெலிகொப்டர்கள், போர் விமானங்கள் மற்றும் டாங்கிகளில் இருந்து இரவு முழுவதும் இடைவிடாது இஸ்ரேல் சூடு நடத்தியது' என்று ரபா குடியிருப்பாளர் ஒருவர் ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்தார்.

'தென்கிழக்கில் டாங்கிகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் முன்னேறின. அது இன்னும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே இருந்தபோதும் இரவு முழுவதும் இடம்பெற்ற கடும் தாக்குதலின் கீழ் அவை முன்னேறியுள்ளன' என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



மத்திய காசாவில் அல் சவைதா சிறு நகரில் இடம்பெயர்ந்தவர்கள் வசித்த வீடு ஒன்றின் மீது இஸ்ரேல் நேற்று நடத்திய தாக்குதலில் 10 பேர் கொல்லப்பட்டதாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா குறிப்பிட்டுள்ளது.

தெற்கு காசாவின் அல் செய்தூன் பகுதியில் நடத்திய வான் தாக்குதல்களில் குறைந்தது இருவர் கொல்லப்பட்டு மேலும் பலர் காயமடைந்ததாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

மத்திய காசாவில் சவைதாக நகரில் இஸ்ரேலிய வான் தாக்குதல் ஒன்றில் வீடு ஒன்றில் இருந்து ஏழு பேர் கொல்லப்பட்டதாக மருத்துவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி ரோய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

போதுமான விநியோகங்கள் மற்றும் பாதுகாப்பு இல்லாத நிலையில் ரபாவில் உதவி விநியோகங்களை இடைநிறுத்தியதாக பலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா நிறுவனம் அறிவித்துள்ளது.

ஏற்கனவே ஹமாஸ் போராளிகள் ஒழிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்ட ஜபலியா நகரில் இஸ்ரேலிய படைகள் தாக்குதல்களை மீண்டும் ஒருமுறை தீவிரப்படுத்தியுள்ளது.

வடக்கு காசாவில் இயங்கும் கடைசி இரு மருத்துவமனைகளான அல் அவ்தா மற்றும் கமால் அத்வான் மருத்துவமனைகள் இஸ்ரேலின் முற்றுகையில் இருப்பதாகவும் அங்கு 200க்கும் அதிகமான நோயாளர்கள் சிக்கி இருப்பதாகவும் உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

ஜபலியா படை நடவடிக்கையில் ஒட்டுமொத்த குடியிருப்பு பகுதிகளும் அழிக்கப்பட்டு பல டஜன் மக்கள் கொல்லப்பட்டிருப்பதாக குடியிருப்பாளர்கள் மற்றும் சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த எட்டு மாதங்களாக காசாவில் நீடிக்கும் போரில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 35,600ஐ தாண்டி இருப்பதோடு காயமடைந்தவர்கள் எண்ணிக்கை 80 ஆயிரத்தை நெருங்கியுள்ளது.

# பறவையின் ஒற்றை இறகு சாதனை விலைக்கு ஏலம்



தற்போது அழிவடைந்திருக்கும் நியூசிலாந்தின் ஹுயா பறவையின் ஒற்றை இறகு உலக சாதனை தொகையாக 28,417 டொலர்களுக்கு ஏலம் போயுள்ளது.

இந்த இறகு 3,000 டொலர்கள் வரை விலை போகக் கூடும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையிலேயே இதே பறவையினத்தின் இறகு ஒன்று முன்னர் படைத்த சாதனையை விட 450 வீத அதிக விலைக்கு ஏலம்போய் இருப்பதாக வெப்ஸ் ஏல நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

ஹுயா பறவையை மோரா இன மக்கள் புனிதமாக கருதுகின்றனர். அதன் இறகுகளை பெரும்பாலும் தலைவர்கள் மற்றும் அவரது குடும்பத்தினர் கிரீடமான அணிகின்றனர். கடைசியாக இந்த பறவையை கண்டதாக உறுதி செய்யப்பட்டது 1907 ஆம் ஆண்டிலாகும் அதற்கு இருபது, முப்பது ஆண்டுகளுக்குப் பின்னரும் பறவையை கண்டதாக உறுதி செய்யப்படாத தகவல்கள் இருப்பதாக நியூசிலாந்து அருங்காட்சியகம் குறிப்பிட்டுள்ளது.

# ஈரான் ஜனாதிபதியின் ஜனாசா நல்லடக்கம் இன்று



ஹெலிகொப்டர் விபத்தில் கொல்லப்பட்ட ஈரான் ஜனாதிபதி, வெளியுறவு அமைச்சர் மற்றும் ஏனையவர்களுக்காக அந்நாட்டு உயர்மட்டத் தலைவர் ஆயதொல்லா அலி காமெய்னி நேற்று தொழுகை நடத்தினார்.

ஈரானிய கொடி போர்த்திய இறந்தவர்களின் உடல்கள் அடங்கிய பேழைகள் டெஹ்ரான் பல்கலைக்கழகத்தில் வைக்கப்பட்டு பெரும் எண்ணிக்கையான மக்களுக்கு முன் உயர்மட்டத் தலைவர் ஜனாஸா தொழுகையை நடத்தினார்.

ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி மற்றும் வெளியுறவு அமைச்சர் ஹொசைன் அமிர் அப்துல்லாஹியன் மற்றும் மேலும் ஆறு பேர் சென்ற ஹெலி கடந்த ஞாயிற்றுக்கிழமை அசர்பைஜான் நாட்டு எல்லைக்கு அருகில் விபத்துக்குள்ளாகியதில் ஒருவரும் உயிர் தப்பவில்லை.

'இறைவனே நாம் அவரிடம் நன்மையைத் தவிர வேறு எதனையும் பார்க்கவில்லை' என்று உயர்மட்டத் தலைவர் பிரார்த்தனையின்போது தெரிவித்தார்.

தொடர்ந்து அந்த பேழைகள் மக்களால் சுமந்து செல்லப்பட்டதோடு வெளியே 'அமெரிக்கா ஒழிக' என்ற கோசமும் எழுப்பப்பட்டது. இந்த இறுதிக் கிரியையில் பல வெளிநாட்டு தலைவர்களும் பங்கேற்றனர்.

ஈரான் ஜனாதிபதியின் இறுதிக் கிரியை கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்பட்ட நிலையில் அவரது உடல் தெற்கு கொராசன் மாகாணத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் அவரது சொந்த ஊரான மஷாத்துக்கு எடுத்து வரப்படவுள்ளது. இன்று (23) மாலை இறுதிச் சடங்குகளுக்குப் பின்னர் அவரது உடல் நல்லடக்கம் செய்யப்படவுள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 மே மாதம் 23ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.